விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 25 வியாழக்கிழமை (08.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 171

### வடக்கு அமைச்சர்கள் விவகாரம்
## முதல்வரின் முடிவுக்கே விட தமிழரசுக் கட்சி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையின் தொடர் நடவடிக்கை குறித்து முதலமைச்சரின் முடிவுக்கு கட்டுப்படுவதென தமிழரசு கட்சியின் தலைவர் மற்றும். மாகாண சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## மிகப்பெரிய யுத்தம் நடத்திய எம்மை விசாரணை என அலைக்கழிக்கின்றனர்!



### தயா ரத்நாயக்க விசனம்

(கொழும்பு)
யாழ். காங்கேசன்துறை சீமெந்து உற்பத்தி ஆலையில் காணப்பட்ட இயந்திரங்களின் பாகங்களை விற்பனை செய்ததன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்திய விவகாரம் தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க

24ஆம் பக்கம் பார்க்க....

# அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டு;
# விசேட அமர்வு 14ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

**(யாழ்ப்பாணம்)**
**வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு மீண்டும் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வடக்கு அமைச்சர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வடக்கு மாகாண சபை நேற்றையதினம் முதலமைச்சரின் பங்கேற்புடன் கூடியது. இதில் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் கோரிக்கைகளை அடுத்தே எதிர்வரும் பதின்நான்காம் திகதிக்கு சபை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட விசாரணைக்குழுவின் அறிக்கை நேற்றையதினம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் வடக்கு மாகாண அவைத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

முதலாவது வடக்கு மாகாண சபையின் 95 ஆவது அமர்வு நேற்றையதினம் இடம்பெற்றது. அதன் போதே மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக பலவிதமான குற்றச்சாட்டுக்கள் கிடைத்ததன் விளைவாக மூவர் அடங்கிய ஒரு விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதில் இருவர் ஓய்வுபெற்ற மேல் நீதி

22ஆம் பக்கம் பார்க்க....

## குற்றம் சாட்டுவோர் தம்மை பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்
### முதலமைச்சர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)
குற்றஞ்சாட்டுவதால் அரசியல் இலாபம் பெற விளைவோர் தமது நடவடிக்கைகளை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த

23ஆம் பக்கம் பார்க்க....

## அதிகாரம் வழங்கப்படாமை அதிருப்தியை ஏற்படுத்துகிறது



23ஆம் பக்கம் பார்க்க....

## மின்சாரம் தாக்கி முதியவர் பலி

(சாவகச்சேரி)
மின்சாரம் தாக்கியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று கொடிகாமம் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.
நேற்று இரவு 8.30 மணியளவில் பெய்த

23ஆம் பக்கம் பார்க்க....

## பந்து முதல்வரிடம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா மற்றும் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் மீதான ஊழல், நிர்வாக முறைகேட்டு குற்றச்சாட்டுக் குறித்த விசாரணை அறிக்கை தொடர்பாக முடிவெடுக்கும் பொறுப்பு முதலமைச்சரிடம்

22ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம்களின் குடியேற்றத்திற்கு கூட்டமைப்பு தடையாகவுள்ளது
### ரிஷாத் சபையில் குற்றச்சாட்டு

(கொழும்பு)
வடக்கு முஸ்லிம்களுக்கு விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தவறுக்கு பிராயச்சித்தமாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்த மக்களின் மீள்குடியேற்றத்துக்கான ஒத்துழைப்பையும், ஆதரவையும் தரவேண்டும். இல்லையென்றால், முடியாதென்று பகிரங்கமாக சொல்லி

24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் திடீர் மழை

(யாழ்ப்பாணம்)
வடக்கில்பல்வேறு பகுதிகளில் நீண்ட நாட்களுக்கு பின்னர் நேற்றையதினம் கடும் காற்று மற்றும் இடியுடன்

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசு தேர்தலை ஒத்திவைத்துள்ளது – கூட்டு எதிர்க்கட்சி

(கொழும்பு)
அரசாங்கம் மிகவும் அநீதியான முறையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தாமல் ஒத்திவைத்து வருவதாகக் கூட்டு எதிர்க்கட்சி

23ஆம் பக்கம் பார்க்க....

## விமானம் விபத்து; 116 பேர் உயிரிழப்பு

(யங்கூன்)
116 பேருடன் மாயமான மியன்மார் விமானம் கடலில் விழுந்து நொறுங்கியது. அதில் பயணம் செய்த 116 பேர் பரிதாபமாக பலியாகியுள்ளனர்.
மியன்மார் நாட்டில் நேற்றுக் காலை 116 பேரை ஏற்றிச் சென்ற இராணுவ விமானம் மாயமானதாக அந்நாட்டின் அரசாங்கம் அறிவித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
மியன்மார் நாட்டில் நேற்றுக் காலை 105 இராணுவ வீரர்கள் மற்றும் 11 விமான ஓட்டிகளை ஏற்றிக் கொண்டு

24ஆம் பக்கம் பார்க்க....

## ஞானசார தேரருக்கு அமைச்சர் ஒருவர் அடைக்கலம்! - ராஜித

(கொழும்பு)
முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டிவரும் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரரை இன்னும் கைதுசெய்யாமல் இருப்பது தொடர்பில் தனக்கு சந்தேகம் இருப்பதாக அமைச்சரவைப் பேச்



22ஆம் பக்கம் பார்க்க....

## விபத்தில் பெண் காயம்

(கொடிகாமம்)
கொடிகாமம் சந்தையடியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.
சாவகச்சேரிக்கு சென்று விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த குறித்த பெண், சைக்கிளில் வந்த முதிய வருடன் மோதியதில் காயமடைந்தார். குறித்த சம்பவத்தில்

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கஞ்சாவுடன் இளைஞன் கைது!

(கரணவாய்)

கரவெட்டி மேற்குப் பகுதியில் வைத்து கஞ்சா பைக்கட்டுடன் இளைஞர் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று புதன் கிழமை மாலை நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் அதே பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரை கைது செய்துள்ளதுடன் ஆறு கிராம் 250 மில்லிகிராம் கஞ்சாவையும் மீட்டுள்ளனர். (60)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## ஏல விற்பனை

இடம் : யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம், புத்தூர்.
காலம் : 23.06.2017 மு.ப 11.00
பொருட்களின் விபரம் : பழுதடைந்த தளபாடங்கள், கணனி மேசை
(9175) அதிபர்






## ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவானின் லோக கல்யாண மஹோற்சவ அழைப்பு

ஜெகத் ரக்ஷகர்களான ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவான் உலக மக்களின் ஆன்மீக ஈடேற்றத்தின் பொருட்டு எண்ணற்ற தெய்வீக நிகழ்வுகளினூடாக மனித சைதன்யத்தில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

அவதார மூர்த்திகளான ஸ்ரீஸ்ரீமான் கல்கி பகவானும் ஸ்ரீமதி பத்மாவதிதேவியும் லோக க்ஷேமத்திற்காக இப்பூவுலகில் திருமண பந்தத்தினூடாக இணைந்த யூன் 9ஆம் நாளை "லோக கல்யாண" உற்சவமாக கொண்டாடுவதற்கு அனுக்கிரகம் செய்துள்ளனர்.

கணவன், மனைவி இருவரதும் அன்பு ஓங்கிய ஐக்கிய வாழ்வே குடும்பத்தின் ஆன்மீக மேம்பாட்டிற்கு அடிப்படையாக அமைவதனால் இல்லற வாழ்வின் தாற்பரியங்களை உணர்த்துகின்ற ஸ்ரீ பகவதி பகவானின் திருக்கல்யாண தினமானது "உறவுமுறைகளின் தினமாக" உலகெங்கும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

அவ்வண்ணம், யாழ்ப்பாண நகரத்தில் இம்முறையும் லோக கல்யாணோத்ஸவம் சிறப்பாக நடைபெறுவதற்கு பகவத் சங்கல்பம் அமைந்துள்ளமையினால் மங்கலகரமான இவ்வைபவத்தில் குடும்ப சகிதம் கலந்து கொண்டு ஸ்ரீ பகவதி பகவானின் திருக்கல்யாண கோலத்தினைக் கண்டு தரிசித்து இஷ்ட வரங்களைப் பெற்றுய்யுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபம் (நீராவியடி, யாழ்ப்பாணம்)
காலம் : 2017.06.09 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3.30 மணி

"ஸபீத வஸ்திர தாரணம் ஸகல தோஷ ஹாரணம் சச்சிதானந்த ரூபம் ஸகல ஜீவ ரட்சகம் பத்மாவதி நாயகம் பவ பய நாஸகம் பக்த பராதீனம் பரம புருஷோத்தமம்"


(இ) ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவான் மானவ சேவா சமித்தி. யாழ். மாவட்டம்


## மரண அறிவித்தல்

அமரர் **கந்தப்பு விமலராசா**

(நவலோகம் உரிமையாளர் - நெல்லியடி) (ASK Will)

தோற்றம் 20 - 10 - 1956



மறைவு 06 - 06 - 2017

கரவெட்டி மத்தியை பிறப்பிடமாகவும் சித்திராங்கர் வளவு, கொடிகாமம் வீதி, நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு விமலராசா இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகனும் பாலாம்பிகையின் பாசமிகு கணவரும் சஜீபா, அசோ, திலகன் ஆகியோரின் தந்தையும் பரணீதரன், பிரசாந்தி, லக்ஸியா ஆகியோரின் மாமனாரும் ரிஷிகேசன், சேயோன், ஆருசன் ஆகியோரின் பேரனும் அமரர் நவரட்ணராசா, அமரர் ஜெயராசா (ஜெயம்), அமரர் தவராசா (பவா), சிவராசா (அப்பன்), சுந்தர்ராசா (சுந்தர்), வில்வராசா (கனடா), நளாயினி (நோர்வே) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2017) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சித்திராங்கர் வீடு
கொடிகாமம் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(C-8754)

தகவல்:
குடும்பத்தினர்
021 226 3641, 077 079 7635

## 41ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண் மகிழ 20 . 05 . 1938



கண் நெகிழ 30 . 04 . 2017

### அமரர் முத்தையா சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி வீட்டுக்கிரியைகள் நாளை 09.06.2017 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு
(மத்திய கல்லூரி அருகாமை)

தகவல் :
குடும்பத்தினர் சார்பாக
வைத்தியகலாநிதி சி.சிவமோகன் (மகன்)
வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

(C - 8745)

## 6ம் ஆண்டு நினைவினிலே

மண் மகிழ 27 - 06 - 1963



கண் கலங்க 16 - 05 - 2011

அமரர்

### இரத்தினம் இதயராசா

திதி: வைகாசி பூர்வபக்க சதுர்த்தசி

விழிமூடி நிற்கும் கணங்கள் யாவும்
அழியாத கோலமாய் காட்சி தரும் தம்பி
செவி வழியே நீ பகர்ந்த மொழிகள் யாவும்
ஓயா அலையாய் ஒலிக்கின்றனவே
நுட்பமான உன் செயல்களின் - நல் வாழ்வின்
எல்லைகளை நாம் கண்ணுறாவாறு
பொல்லா விதியதுவும் கொடுமை செய்தது
நைந்துள்ளம் உருகிடவே வாடி நிற்கின்றோம்

மானாவளவு,
கரவெட்டி.


(C-8653)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொகுசு பேருந்தில் மறைத்து முதிரைக் குற்றிகள் கடத்தல்!

## அதிகாலை வேளை மடக்கிய கொடிகாமம் பொலிஸார்

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் சந்தியில் வைத்து முதிரை மரக்குற்றிகளுடன் சென்ற அதி சொகுசு பேருந்து ஒன்றை கொடிகாமம் பொலிஸார் பறிமுதல் செய்தனர். நேற்றுபுதன்கிழமை அதிகாலை 4.30மணியளவில் கொடிகாமம் பொலிஸாருக்கு கிளிநொச்சி பிராந்திய விசேட முறியடிப்பு பிரிவுப் பொலிஸார் வழங்கிய தகவலையடுத்து கொடிகாமம் நகரப் பகுதியில் வைத்து குறித்த பேருந்தை வழிமறித்தனர். எனினும் பேருந்தை நிறுத்தாததையடுத்து பின் தொடர்ந்த பொலிஸார் குறித்த பேருந்தை புத்தூர்சந்தியில்வைத்து மறித்தனர். இதன்போது குறித்த பேருந்தின் சாரதி உட்பட மூவர் பேருந்தை விட்டு தப்பியோடினர். கொடிகாமம் பொலிஸார் குறித்த அதி சொகுசு பேருந்தை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

பேருந்தினுள் 7 அடி நீளமான சுமார் 23 முதிரை மரக் குற்றிகள் உப்பக்க ஆசனங்களைக் கழற்றி அதனுள் மறைத்துக் கொண்டு வரப்பட்டன.

இம் மரக்குற்றிகளின் மதிப்பு 15 இலட்சத்திற்கு மேல் இருக்குமென பொலிஸார் தெரி வித்தனர்.

பேருந்தின் ஆவணங்களை வைத்து கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த உரிமையாளரைக் கைது செய்யும் நடவடிக்கையை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

முதிரை மரக்குற்றி களுடன் பேருந்து நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளது.

குறித்த கடத்தல் நடவடிக்கையை கொடிகாமம்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.பி. எதிரிசிங்க, சார்ஜன்ட் தென்னக்கோன் பி.சி.குணரட்ன, ராஜா, அமரக்கோன் ஆகியோர் முறியடித்திருந்தனர். (இ-3-89)

# பொலிஸ் அதிகாரியின் வீட்டில் சட்டவிரோத ஆயுதங்கள் மீட்பு

ஆனமடுவ தென்னன்குரியா பொலிஸ் அதிகாரியின் வீட்டில், கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக, பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்றுக்காலை சோதனையிட்ட போது, அவ்வீட்டிலிருந்து துப்பாக்கிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக, ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கல்பிட்டி, நுரைச்சோலையில் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் அதிகாரியின் வீட்டிலிருந்தே, கோடா, கசிப்பு போத்தல் மற்றும் ரி-56 துப்பாக்கி, கைத்துப்பாக்கி என்பவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த துப்பாக்கிகளை முன்னாள் அமைச்சர் தமுதசாநாயக்க வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக, சந்தேக நபர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஆனமடுவ பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பரராஜசிங்கம் படுகொலை வழக்கு ஜூலை 25-ம் திகதிக்கு ஒத்திவைப்பு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம். இஸ்ஸதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் இந்த உத்தரவினை பிறப்பித் திருந்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் தின நள்ளிரவு ஆராதனையின் போது சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேர்தலுக்கு தயாராகுங்கள்; பைசர் முஸ்தபா அறிவிப்பு

உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாகி விட்டன. இதன்படி வெகுவிரைவில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கு அனைத்து கட்சிகளும் தயாராகுமாறு உள்ளூராட்சி மற்றும் மாகாண அமைச்சர் பைசர் முஸ்தபா அறிவித்தார்.

2012 இன் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களுக்கான திருத்த சட்டமூல வரைபு நேற்று முன்தினம் தேர்தல் ஆணைக்குழுவின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டது. வரைபு கையளிக்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில், உள்ளூராட்சிமன்றதேர்தல் நடத்தப்படாமல் இருப்பதற்கு என் மீதே குற்றஞ்சாட்டப்பட்டது. உள்ளூராட்சிமன்ற எல்லை நிர்ணய செயற்பாடுகளில் முரண்பாடுகள் காணப்பட்டதால் அதில் திருத்தம் செய்வதற்கு எமக்கு காலம் தேவைப்பட்டது.

இந்நிலையில் தற்போது திருத்தம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலை நாம் வெளியிட்டு விட்டோம். தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கத்திற்கு எந்தவொரு நோக்கமும் கிடையாது. தேர்தல்முறைமை தொடர்பில்ஒரு சில பிரச்சினைகள் மாத்திரம் காணப்பட்டன. இது பேசு பொருளாக இருந்தது. எனினும் புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியாக உள்ளார். ஏனெனில் புதிய தேர்தல் முறைமைக்கு மக்களின் ஆணை கிடைக்கப் பெற்றுள்ளது என்றார். (இ-7)

# இந்திய-இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சு



இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம்மாலை டில்லி சென்றடைந்த வெளிவிவகார அமைச்சர், முதலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடினார்.

அண்மைய அனர்த்தங்களினால் இலங்கையில் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சேதங்களுக்கு இந்தியப் பிரதமர் வருத்தம் தெரிவித்ததுடன், இது தொடர்பாக இலங்கைக்கு மேலும் உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்தத்தின் போது, இந்தியா வழங்கிய உதவிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் ரவி நன்றியை பகிர்ந்து கொண்டார்.

அத்துடன், இந்தியாவுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கு இலங்கை தயாராக இருப்பதாகவும், வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இதையடுத்து, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ்"உடன் வெளிவிவகார அமைச்சர் பேச்சுக்களை நடத்தினார்.

இதன்போது இருதரப்பு உறவுகள் தொடர்பாக பல முக்கியமான விவகாரங்கள் குறித்துப் பேச்சு நடத்தப்பட்டதாக டில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும், இந்தப் பேச்சுக்களின் முக்கியத்துவம் பெற்றிருந்த விடயங்கள் குறித்து இன்னமும் இரண்டு [illegible] தெரிவிக்கவில்லை. (இ-7)

# நல்லாட்சி வேண்டாம் என்பதை தேர்தலில் வெளிப்படுத்துவோம்

## பட்டதாரிகள் விரக்தி



இந்த நல்லாட்சியும் வேண்டாம். இவர்களின் நல்லதும் வேண்டாம். இதனை எதிர்வரும் தேர்தலில் உறுதிப்படுத்துவோம் என அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் விரக்தியுடன் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் காரைதீவு விபுலானந்தா சதுக்கம் அருகே மேற்கொண்டு வரும் போராட்டம் நேற்று 101ஆவது நாளாகவும் தொடர்ந்தது. இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

அனைத்து பட்டதாரிகளுக்கும் தகுதியான தொழிலை எந்த துறையிலாவது வழங்கக்கோரி எமது அமைப்பு போராட்டத்தை ஆரம்பித்து 101ஆவது நாளாகவும் மேற்கொண்டு வருகிறது. ஆனால் [illegible] வரை [illegible] நிலையில் போராட்டம் தொடர்கிறது.

இந்த நல்லாட்சி அரசு ஆட்சி பீடம் ஏறுகின்ற போது 10 இலட்சம் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்று வழங்கிய வாக்குறுதி இன்று பொய்யாய் போயுள்ளது.

இதுவரைக்கும் எந்த ஒரு நல்ல திட்டத்தையும் சரிவர செய்ய முடியாத கையாளாக அரசாங்கம் காணப்படுகிறது. இந்த அரசு எம்மீது அக்கறை காட்டவில்லை.

இனி இந்த நல்லாட்சியும் வேண்டாம். இவர்களின் நல்லதும் வேண்டாம். எதிர்வரும் தேர்தலில் அதனை உறுதிப்படுத்துவோம். ஐ.தே.க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 10 இலட்சம் வேலை வாய்ப்புகள் தருவோம் என கூறினார்கள்.

எங்கே அந்த 10 இலட்சம் வேலைவாய்ப்புகள். அனைத்தும் போலி. இந்த கட்சியால் எந்த நல்ல திட்டத்தையும் சரியாக நடைமுறைப்படுத்த முடியாது.

இருப்பினும் எத்தனை நாட்கள் சென்றாலும் நாம் எமது இறுதி இலக்கை அடையும் வரை பின்வாங்கப் போவதில்லை என சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

தில்லையம்பதியாள் துணை

# சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயில் வசந்த வைகாசி மஹோற்சவ பெருவிழா-2017

## இரத உற்சவ சிறப்பு மலர்-08.06.2017





### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி



மாதேவி நீயானாய் மகேஸ்வரனின் துணையானாய்
கோண்டாவிலில் உருவானாய் கோபுர வடிவானாய்
ஈழத்து தில்லையம்பதி புண்ணிய பிரசித்தி ஷேத்திரத்தில்
கோபுர வடிவில் அமர்ந்திருந்து அடியவர்களுக்கு
அருளை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்ற
சிவகாமி அம்பாள் இன்று புதிய நவகோண சித்திரத்
தேரில் பவனி வந்து ஆன்மாக்களுடைய
ஆணவத்தை அடக்கி இறைவன் அன்பை
பொழிந்து எல்லா ஜீவராசிகளுக்கும்
அருள்பாலிக்கின்ற நல்ல திருநாளில் அடியவர்கள்
வடம் பிடித்து அருள்பெற வர்ரீர்! வாரீர்!
சர்வே ஜனஷா சுகினோ பவந்து
சுபம்

**பிரம்மஸ்ரீ நா.திவாகரக்குருக்கள்**
**தில்லையம்பதி**

### காங்கேயன் கலைக்கூட தேர் படைத்தோன் வாழி!

தில்லையம்பதி மேவும் சிவகாம சுந்தரியே
அல்லல்கள் களைந்து நிற்கும் அகிலாண்ட ஈஸ்வரியே
திருநெல்வேலி வாழும் முத்துலிங்கம் பெரியவரின்
திறமுடை திருமகனாம் சங்கர் என்னும் சாதுரியன்
ஏற்ற முடை கலைஞனாகி எழில்நிறை தேர் படைத்து
எல்லோர் மனதிலும் கலைத்துவ இடம் பிடித்தான்
இப்பெரிய திருத்தேரின் இன்னுமோர் நாயகனாம்
முத்துலிங்க பெரியவனின் ஏந்தலிவன்
சுபாகர் எனும் பேரான் சுந்தர பேரெழிலான்
தில்லையம்பதி தாயாளின் தேரிற்கு உழைத்த மகன்
நாயகியாள் தானேறி நாற்றிசையும் பவனிவர
நவகோண வடிவினிலே நல்லதொரு கலை ரதமாம்
சங்கர் சுபாகருடன் சார்ந்திட்ட கலைஞர் குழு
என்றுமே புகழ் பரப்பி ஏற்றமுடன் வாழி!

**"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"**
தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
பாலா வீடியோ
கோண்டாவில் தில்லையம்பதி

### தலைவரின் வாழ்த்துச் செய்தி



ஈழத்து தில்லையம் பதியில் அருளாட்சி புரியும் ஆதிமகா சக்தி யாம் அன்னைஸ்ரீசிவ காமி அம்பாள் இன்று புதிய நவகோண சித்தி ரத்தேரில் பவனி வரு கின்ற திருக்கோலக் காட்சியைத்காண கண் கோடி வேண்டும். இந்நாளில் சாந்தியும் சமாதான மும் கிடைக்க அம்பாளை பிரார்த்திப்போமாக.

**யாவும் அவள் தருவாள்**
**சி.சிவலிங்கம், தலைவர், பரிபாலன சபை**

### வாழ்த்துச் செய்தி



அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி ஈழத்து தில்லையம் பதியாள் இன்று புதிய நவகோண சித்திரத் தேர் ஏறி அமர்ந்து எம்மவர்கள் ஊர் கூடிவடம் பிடித்து இழுத்திடும் திருக் காட்சியை கண்டு மனமகிழ்கிறேன்

**க.கிருபாகரன்**
**தலைவர், தேர்த் திருப்பணிச் சபை**

### மத்திய கிராம அபிவிருத்திச் சங்க, மத்திய சனசமூக நிலைய தலைவரின் வாழ்த்துச் செய்தி



தில்லையம்பதி அருள் மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருத்தேரில் வரும் காட்சி காண கோடி கண்கள் வேண்டும். புதுத்தேரில் எம் பெரு மாள் வீற்றிருந்து பவனி வந்து எம்மவர்களின் குறை தீர்ப்பாள் என்பதில் ஐயமில்லை. எம்பெருமாளு க்கு புதுத்தேர் அமைக்க உதவிய அத்தனை உள் ளங்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

**ந. மயூரன்,**
**தலைவர், ம.கி.அ.சங்க, ம.ச.ச.நிலையம்**

### ஊர் கூடி வடம் பிடித்து தேர் இழுப்போம்



ஆக்கம்:அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர்
பாடியவர்:கலைமாமணி, ரி.எம்.சௌந்தரராஜன்
இராகம்–காமாஸ்
தாளம்–ஆதி

ஊர் கூடி வடம்பிடித்தே உளம் உருகச்–சித்திரத்
தேர் ஏறி வலம் வந்தாள் தேவி சிவகாமி
(ஊர் கூடி)

அனுபல்லவி

வாரகி வைஷ்ணவி வளம் திகழ் கோண்டாவில்
சீர்மேவு தில்லைப்பதி சிவகாமசுந்தரி
(ஊர் கூடி)

சரணம்

தேரின் திருத்தொங்கல் வாகுமாலை சூட
நாதஸ்வர கானம் நாதத் தவில் ஒலிக்க
பேரின்ப பக்தர் வழிபெருகிக் கண்ணீர் சொரிய
ஊரின் புறக் கோண்டாவில் உல்லாசி பவனி வந்தாள்
(ஊர் கூடி)

புன்னகை புரிந்தாருள் பொலிவுறத் தந்தனன்
அன்னவள் வரதமும் அபயமும் காட்டினாள்
என்னகுறை எமக்கு எங்கள் தாய் இருக்கும் போது
இன்னமுத்தத் தாயன்பால் என்றும் எமைக் காத்திடுவாள்
(ஊர் கூடி)

**தொகுப்பு : த.ராதா, செயலாளர், பரிபாலன சபை, தில்லையம்பதி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை மின்சார நாற்காலி தண்டனையிலிருந்து மீட்டோம்

## மங்கள சமரவீர தெரிவிப்பு





(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மின்சார நாற்காலி தண்டனையிலிருந்து மீட்டதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட காரணத்தினால் மின்சார நாற்காலி தண்டனை அனுபவித்திருக்க வேண்டிய மகிந்தவிற்கு அந்த தண்டனையிலிருந்து தப்பிக்கும் அதிர்ஷ்டம் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சியில் நீடித்திருந்தால் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருக்கும் என குறிப்பிட்டுள்ள அவர் தற்போதைய அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் சிறந்த உறவுகளை பேணி வருவதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

## உலக யோகா தின விழா

யாழ். நீரிழிவுக்கழகமும் கிரீன் பில்ட் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் உலக யோகா தின விழா எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். குருசோ வீதியில் அமைந்துள்ள கிறீன் பில்ட் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் தலைமை உரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, ஆசியுரையை யாழ்.பேராலயப் பங்குத் தந்தை அருட்பணி சி.நேசராஜா அடிகளாரும் வழங்கவுள்ளனர். (இ-7)


திருமுருகன் துணை

**திருமுருகனின் இவ் வருட விசேட சலுகை**

மண்டபம், மேளம், குருக்கள், உணவு, கூல்சோடா, ஐஸ்கிறீம், பூந்தி லட்டு, 6 பூமாலைகள், தானத்து பொருள், வாசல் வாழை யாவும் சேர 500 பேர் எனில் ஒரு நபருக்கு 400 /= வரும்.

கீழ் மண்டபம் 10,000 /= விவாக பதிவு, பிறந்த நாள், கருத்தரங்கு யாவும் செய்து மகிழலாம். (A/C தனி)

நேரடித் தொடர்பு கொள்ள :
திருமுருகன் மணி மண்டபம்,
கரந்தன் வீதி,
நீர்வேலி.

**வேலைவாய்ப்பு (VACANCY)**

1) SPECIALITY CHIEF COOK (NORTH INDIAN, CHINESE & CONTINANTAL)
2) KITCHEN ASSISTANT

SUBHAS HOTEL,
49,VICTORIA ROAD,
JAFFNA.
TEL:- 021 222 4923
077 398 6075

(9169)

**ஏல விற்பனை**

இடம் :- பாடசாலை அலுவலகம் முன்புறம்
காலம் :- 2017.06.21 மு.ப 11.00 மணிக்கு

ஏலவிற்பனைக்கு விடப்படும் பொருட்கள்:- மாணவர் மேசைமரம் - 09, பாலர் மேசை இரும்பு - 10, பாலர் கதிரை இரும்பு - 10, உருக்கு மேசை (பலர், தனி) - 01, உருக்கு கதிரை (பலர், தனி) - 02, உருக்கு மேசை "B" Type- 02, உருக்கு கதிரை "B" Type-02, உருக்கு மேசை "A" Type- 06, ஆசிரியர் மேசை ஒட்டுப் பலகை - 01,Computer Moniter 17" CRT - 03, UPS 630V A POWER-01, மாணவர் கதிரை "A" Type-05,மண்வெட்டி - 01, தள்ளுவண்டி - 01,Gas Cooker one burner-01, ஆள்சுற்றுத் தளம் - 01, மின்விசிறி மேசை - 01

அதிபர்,
யா/கோண்டாவில் பரஞ்சோதி
வித்தியாலயம்

**மகாதேவ ஆச்சிரமம்**
**MAHADEVA A**
Regd.No : SVP 104/44 of 29.10.1976
Tel : 024 324 3443
ஜெயந்தி நகர், கிளிநொச்சி
மகாதேவாய நம
**ஆண்டுப் பொதுக் கூட்டம்**

காலம் :- 11.06.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி
இடம் :- ஆச்சிரம பிரார்த்தனை மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

- தேவாரம்
- தலைமையுரை :- ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவசுவாமிகள்
- செயலாளர் அறிக்கை
- நிர்வாக சபைத் தெரிவு
- பண்ணிசை மண்டபம் பற்றிய விடயம்
- நன்றியுரை

சகல அங்கத்தவர்களையும் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.
அன்பே சிவம்

இறைபணியில்
ஞானசிரோன்மணி
ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
குருபீடாதிபதி.

(9165)


## இராசி பலன்

08.06.2017
(வைகாசி 25, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 5.06 மணிவரை
அனுசம் பின்னிரவு 3.04 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் |
| கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் பரணி | | ராகு |
| | சந் சனி | | குரு |

**மேடம்:** குழப்பங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.

**இடபம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** உடல் நலன் சீராகும், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்:** பெற்றோர் மீதான பாசம் கூடும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருகிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்:** தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், வாகன சுகமுண்டு, வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், சுபசெலவுகள் கூடும்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சுயமுயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**விருச்சிகம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக்கொள்வீர்கள், பணவரவு திருப்தி தரும்.

**தனுசு:** தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், மற்றவர்களால் ஏற்றம் பெற வேண்டிய நாள்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

**கும்பம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்:** அன்பால் சாதித்துக்காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். சைவ பரிபாலன சபையினரால் சேக்கிழார் குருபூசை தினம் அண்மையில் நடத்தப்பட்டது. இதில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த குரு பூசை தினத்தில் டாக்டர் நந்தகுமார் சிறப்புச் சொற் பொழிவாற்றினார்.

## பொதுக் கூட்டம்

வட்டு.கிழக்கு சித்தன் கேணி அந்திரான் ஜனசக்தி தோற் பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு வட்டு.கிழக்கு மாதர் அபிவிருத்திச் சங்க வளாகத்தில் தலைவர் ச. சாம்பசிவம் தலைமையில் இடம் பெறவுள்ளது. (இ

## பொன் விழாவும் பொதுக் கூட்டமும்

நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் பொன் விழாவும் வருடாந்த பொதுக் கூட்டமும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர், இலக்கம் 362,நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும். (இ




# கால்நடைகளைக் காப்பாற்றுங்கள்; வடமராட்சி மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் கால்நடை வளர்ப்பினை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள குடும்பங்கள் திருடர்களினால் பெரும் நட்டத்தினை அடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக அல்வாய், துன்னாலை, முள்ளி, வல்லிபுரம் போன்ற பகுதிகளில் மேய்ச்சலுக்காக விடப்படும் பல கால் நடைகள் வீடு திரும்புவதில்லை.

கடந்த 4.6.2017 ஞாயிற்றுக்கிழமை வல்லிபுரம் பகுதியில் மாடு ஒன்று வெட்டப்பட்டதற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இது தொடர்பாக பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கால் நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# மும்மொழிக் கற்கை நிலைய சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மும் மொழிக் கற்கை நிலையத் தின் 2015/ 2016 கல்வி ஆண்டில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் முற்பகல் 10 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தலைமையில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராசா கலந்து கொள்வார். (இ

# சிறந்த விவசாயிகள் தெரிவு-2017

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தால் 2017ஆம் ஆண்டிற்கான சிறந்த விவசாயிகள் தெரிவானது சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள், சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர்கள், சிறந்த தேனீ வளர்ப்பாளர்கள், சிறந்த செய்முறைகளுடன் கூடிய ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்துடன் மிளகாய்ச் செய்கையாளர்கள் என நான்கு வகுதிகளின் அடிப்படையில் யாழ். மாவட்டச் செய்கையாளர்களிடையே நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 2017 ஆடி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விவாசாயப் போதனாசிரியருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது மாவட்ட காரியாலயத்தில் சமர்பிக்கவும். கடித உறையின் இடத பக்க மேல் மூலையில் "சிறந்த விவசாயிகள் தெரிவு -2017'' எனக் குறிப்பிடப்படவேண்டும்.

சிறந்த ஏனைய செய்கையாளர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் விவசாயத்திணைக்களத்தால் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் கௌரவிக்கப்பட்டவர்கள் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

இந் நிகழ்ச்சித் திட்டமானது செய்கையாளர்களுடன் போட்டி மூலமான ஊக்குவிப்பை ஏற்படுத்துவதோடு சூழலுக்கு இசைவான பொருத்தமான தொழில் நுட்பங்களை விவசாயிகளிடையே பரவச் செய்து பேண்தகு உற்பத்தியைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கிறது.

மேலதிக தொடர்புகளுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.021 222 2175, 077 127 0455, 077 6913 456 என பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா அறிவித்துள்ளார். (இ

# தாதியர் வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நாடெங்கிலுமுள்ள ஆயுள் வேத திணைக்களத்தின் கீழான தாதியர் வெற்றிடத்தை நிரப்பும் வகையில் விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தலானது 19.5. 2017 ஆம் திகதிய வர்த்த மானியில் சுகாதார போஷணை மற்றும் சுதேசவைத்திய அமைச்சினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் குறித்த வர்த்தமானியை பார்வையிட்டு குறிப்பிடப்பட்டுள்ள வகையில் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி 30.6.2017 விண்ணப்பங்கள் 30.6.2017 ஆம் திகதிக்கு முன் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என வட மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் டாக்டர். திருமதி சி.துரைரட்ணம் அறிவித்துள்ளார். (இ

# ஒக்டோபர் புரட்சியும் முதலாளிய-சோசலிச போராட்ட ஆய்வரங்கும்

(யாழ்ப்பாணம்)

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் ஆறாவது ஆய்வரங்கு "ஒக்ரோபர் புரட்சியும் முதலாளிய சோசலிச போராட்டமும்" என்ற தலைப்பில் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 3. 30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்கு வில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

தோழர் த.ஶ்ரீபிரகாஸ் தலைமையில் இடம் பெறும் இவ் ஆய்வரங்கில் ஆய்வுரையினைத் தோழர் என். பிரதீபன் வழங்குவார்.

சோசலிச முகாமின் தோற்றமும் விரிவும் சரிவும் ஏகாதிபத் தியச் சதிகள், சோவியத் ஒன்றியத்தின் உடைவுக்குப் பிந்திய உலகம் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராய்கின்றதான இவ் ஆய் வுரையைத் தொடர்ந்து கலந் துரையாடல் இடம்பெறும். (இ-3)

# வைகாசித் திங்கள் விழா

(யாழ்ப்பாணம்)

தையிட்டி காங்கேசன் துறை விக்கினேஸ்வரா வீதி ஞான வைரவர் , கண்ணகை அம்மன் ஆலய வைகாசித் திங்கள் ( விசாகப் பொங்கல்) விழாவும் ஞான வைரவர் ஆலயத்துக்கு அத்திபாரம் போடுதலும் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.52 மணி முதல் இடம் பெறவுள்ளன. (இ-3)

# திருஞானசம்பந்தர் குருபூசை தின திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர் மடம் ஶ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூசை தின திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பரிசளிப்பு விழாவுக்கு ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் ஆரம்பக் கல்வி யாழ். வலயம் கலாவித்தகர் திருமதி கலாவதி பிரஹதீஸ்வர சர்மா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு திருமுறை மனனப் போட்டி யில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும், சான்றிதழ் களையும்வழங்குவார். (இ

# தோட்டத்திலிருந்த குடிசை தீக்கிரை

வாதரவத்தை பெரிய பொக்கணை பகுதியில் தோட்டக் காணியிலுள்ள குடிசை ஒன்று இனந்தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. இச் சம்பவம் கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது தோட்டம் ஒன்றில் காணப்பட்ட குறித்த குடிசையில் வசித்தவர்கள் வெளியில் சென்ற வேளை இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. இதன் போது குடிசையிலிருந்த அனைத்துப் பொருட்களும் முற்றாக எரிந்து சாம்பலாகின. இச் சம்பவம் குறித்து உரிமையாளர் கந்தசாமி சுந்தர வேல் அச்சு வேலி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததை யடுத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-134)

# ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை

யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரிய குளத்தடியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் இடம்பெறும். எனவே அனைத்து ஆங்கில ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)




கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் காரைநகர் பிரதேச செயலகத்தினால் அப் பகுதியில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பனம்கைப் பணியாளர்களுக்கு பனம் கைப்பணி பயிற்சிநெறி நேற்று முன்தினம் தேரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டது. ( படங்கள் பொ. சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் இரதோற்சவ சிறப்புமலர் - 08.06.2017

## - யாழ்ப்பாணம் -



### நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



யாழ். நீராவியடி வீரகத்தி விநாயகப் பெருமானுடைய தேர்த்திருவிழா சிறப்பிதழுக்கு அருளாசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். மஹோற்சவத்திலே இரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். எமது பாவங்களையும் துன்ப துயரங்களையும் அறவே அழித்தொழிப்பதற்காக இன்று விநாயகர் தேரிலே ஆரோகணிக்கின்றார். அழகாயமைந்த அற்புதமான சித்திரத் தேரிலே விநாயகப் பெருமான் அழகாக ஆரோகணித்து வருகின்ற அருட்காட்சி காண்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்து நிற்கும் நாம் இன்று விநாயகரின் தேர்த் திருவிழா கண்டு உள்ளம் பூரிக்கின்றோம். இந்த நீராவியடிப்பதி எத்தனையோ பெரியோர்கள் வாழ்ந்த இடம். அந்த வகையில் இன்று நிகழும் தேர்த் திருவிழாவும் எத்தனையோ அடியார்களெல்லாம் கூடி நின்று நடத்தப்படுகின்ற ஒரு பொன்னான விழாவாகும். கைதொழும் அடியார்களின் வினையகற்றி நல்வாழ்வருளும் நீராவி வீரகத்தி விநாயகரின் தேர்த்திருவிழா நல்ல முறையில் நிகழ்ந்து சிறப்புற வேண்டும் என்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். இன்று நல்விழாக் காணும் அவரது அடியார்கள் எல்லோரும் மங்கள சுபீட்ச நல்வாழ்வில் திளைத்து இன்புற வேண்டுமென்று வீரகத்தி விநாயகரின் திருவடி பணிந்து அருளாசி வழங்கி வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றோம்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் - நல்லை ஆதீனம்**

### வடக்கு மாகாண முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி



இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண நகரத்தின் நீராவியடிப் பகுதியில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் அழகிய தேர் ஏறி தனது பக்தர்களுக்கு அருள்பாலிப்பதற்கு வீதி உலா வருகின்ற இச் சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துரை ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். வாலியை வதம் செய்ததால் பிரம்மகத்தி தோஷத்தில் அல்லலுற்ற இராமபிரான் ஸ்ரீ வீரகத்தி விநாயகரைத் தொழுது தமது தோஷத்தில் இருந்து மீண்டதாக வரலாறு. அத்துணை சிறப்புப் பெற்ற ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் தேரேறி வரும் இந்த அரிய சந்தர்ப்பத்தில் நீராவியடி மக்கள் மட்டுமல்லாது ஏனைய பகுதிகளிலும் வாழும் இந்துக்கள் இவ் விநாயகரைத் தரிசித்து ஆன்ம ஈடேற்றம் பெற எம்பெருமானை இறைஞ்சுகின்றேன். தேரோட்ட நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைத்து அடியவர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நீதியரசர்.**
**சி.வி. விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர்,**
**வடமாகாணம்.**

### சின்மயாமிஷனின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம், நீராவியடி அருள்மிகு ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் திருக்கோயில் இரதோற்சவப் பெருவிழா இன்று 08.06.2017 வியாழக்கிழமை நடைபெறுவது அவ்வூர் மக்களுக்கெல்லாம் ஆனந்தத்தை அளிக்கும் ஓர் நிகழ்வாகும். இங்கு அண்மையில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்று சகல மக்களும் வழிபாடாற்றி அருள் பெறும் வாய்ப்பும் பெற்றுள்ளார்கள். ஆலயங்களில் மஹோற்சவங்கள், நித்திய, நைமித்திய, விஷேட பூஜைகளில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு செய்யப்படுவனவாகும். இவை இறைவனின் பஞ்ச கிருத்தியங்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் குறித்து நிற்பனவாகும். இதில் இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. அதாவது எம்மிடமுள்ள அகங்காரம், மமகாரம் முதலிய தீய குணங்களை அழித்தலைக் குறிப்பதாகும். அக் குணங்கள் அழிக்கப்படும் போது நாம் இறைவனை உணரத் தலைப்படுவோம். எனவே இவ் இரதோற்சவப் பெருவிழாவில் கலந்து கொள்ளும் அடியார்களாகிய நாங்கள் எம்மிடமுள்ள ஏதாவது ஒரு தீய செயலையாவது இன்றிலிருந்து செய்ய மாட்டோம் என திடசங்கற்பம் எடுத்து இன்றிலிருந்து அதனைச் செயற்படுத்த முன்வருவோம். இரதோற்சவம் சிறப்பாக நடை பெறவும் அதனை முன்னிட்டு வெளிவரும் மலர் சிறப்பாக வெளி வரவும் ஆசி வேண்டி எல்லாம்வல்ல வீரகத்தி விநாயகப் பெருமானையும், பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும வேண்டுகின்றோம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்**

**இறைபணியில் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா, வதிவிட ஆச்சார்யார் சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.**

### விக்கின விநாயகன் இரதோற்சவம் காண வாரீர்



யாழ்ப்பாண மாநகரில் நீராவியடி பதியினிலே அமைந்திருக்கும் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் 2017ஆம் ஆண்டிற்கான மஹோற்சவத் தினத்தினை முன்னிட்டு வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்தியாவின் வேதாரணியப் பகுதியில் இருந்து இங்கு வந்து குடியேறிய பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயம் இன்று ஆகம முறைப்படி அமையப்பெற்று பூசை வழிபாடுகள் நடைபெறுவது சிறப்புக்குரிய அம்சமாகும். அதுமட்டுமல்லாமல் பல வருடங்களாக அலங்காரத் திருவிழாவாக நடைபெற்று வந்த பூசை வழிபாடானது இன்று புதிய தேர் மற்றும் கொடிமரத்துடன் கூடிய மஹோற்சவமாக நடைபெறுவது மேலும் சிறப்புமிக்க ஒரு வழிபாட்டுச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. அது மட்டுமல்லாமல் சிறந்த நிர்வாக கட்டமைப்பும் ஒழுங்கு முறைகளும் அமைய நடைபெறும் இவ்வாலய நிர்வாகமானது மஹோற்சவ காலத்தில் தினமும் மகேஸ்வரபூசை வழங்குவது மிகவும் காலத்திற்கு பொருத்தமான தேவையாக கொள்ளக்கூடிய ஒன்றாகும். அருள்பெறவரும் அடியார்கள் அனைவருமே ஆசார சீடர்களாக வந்து செல்வது அனைவருக்குமே முன்னுதாரணமாகவும் உள்ளது. இவ்வாறாக இவ்வாலயம் ஓர் ஆலயத்திற்கு வேண்டிய சகல அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுசிறப்புற விளங்குவது போற்றுதற்குரியதே. அந்த வகையில் இவ்வாலயத்தின் வாழ்த்துச் செய்தியில் எனக்கும் ஓர் பங்கு கிடைத்ததையிட்டு பெரு மகிழ்வடைவதோடு வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் அருளாசி யாவருக் கும் கிடைக்க வாழ்த்தி வணங்குகின்றேன்.

**திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (பா.உ)**
**சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சரும்,**
**யாழ்-கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு**
**இணைத்தலைவரும்.**

### எம்முறையும் போன்று இம்முறையும் மஹோற்சவம் சிறப்புற வேண்டும்



வரலாற்று சிறப்பு மிக்க யாழ்ப்பாணம், நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நடைபெறுவதையிட்டு ஆசிச் செய்தி வழங்கும் சந்தர்ப்பத்தை பெரிதும் மதிக்கின்றேன். சுற்றுஞ் சூழ வழிபாட்டுத் ஸ்தலங்களைக் கொண்டிருக்கும் நீராவியடி மக்களுக்கு ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயம் வரலாற்று வரப்பிரசாதமாகவே அமையப் பெற்றிருப்பதாக எமது மக்களால் காலகாலமாகக் கருதப்பட்டு வருவதை நான் அறிவேன். அந்த வகையில் மேற்படி ஆலயத்தின் திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது பாராட்டத்தக்கதொரு அம்சமாகும். கலையம்சங்கள் பொருந்திய ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த வருடங்களில் போல் இவ்வருடமும் வெகு சிறப்பாக நடை பெற வேண்டும் என்ற வகையில் அதன் அனைத்து ஏற்பாடுகளிலும் தங்களை இணைத்துக் கொண்டுள்ள ஆலயத்தின் பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர் திருவாளர் வை. இரகுநாத முதலியார் அவர்களுக்கும் அவருடன் இணைந்துள்ள அனைவருக்கும் எமது மக்கள் சார்பாக எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்**
**செயலாளர் நாயகம் - ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி.**

### விநாயகர் பதம் பணிந்து போற்றுவோம்



யாழ்ப்பாணம் நீராவிப்பதியுறையும் வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு இன்று தேர்த் திருவிழா. அழகிய சித்திரத் தேரிலே சிங்காரப் பவனி வரும் விநாயகரின் பேரழகு சொல்லி முடியாது. தேரிலே ஆரோகணித்து அடியார்களுக்கு அவர் அருள் புரியும் பாங்கு அற்புதமானது; அளப்பரியது. அருள் வேண்டி நிற்கும் அடியார்கள் இருமருங்கும் வடம் பிடித்து இழுத்து வர மங்கள இசை முன்னே முழங்க இன்று நிகழுகின்ற தேர்த் திருவிழா இனிதே சிறப்புற விநாயகரை வணங்கி வாழ்த்துகின்றோம்; பதம் பணிந்து போற்றுவோம். அறிஞர்கள் பலர் வாழ்ந்த, வாழுகின்ற புண்ணிய ஷேத்திரம் நீராவியடி, இந்த மண் பல பெரியார்களைக் கண்ட மண். ஜெயம் என்றால் வெற்றி. ஆகவே ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகரை வணங்கினால் எதிலும் என்றும் வெற்றி நிச்சயம். அந்த வகையில் விநாயகப் பெருமானுடைய இன்றைய தேர்த் திருவிழாவானது மகோன்னத வெற்றியுடன் சிறப்புற நிகழ அவரின் அற்புத கற்பக பொற்கமல பாதம் பணிந்து வாழ்த்தி நின்று மகிழ்கின்றோம்.

"வேழ முகத்து விநாயகரைத் தொழ வாழ்வு மிகுந்துவரும்"

**தெய்வத் தமிழ்ச் சுடர்**
**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**

சீரான வாழ்வருளும் ஜெய நீராவிப்பதி விநாயகனே
தீராத நோய் மாற்றி எம் தீவினைகள் போக்குபவனே
ஆராத காதலுடன் உன்னடி பணிந்து வடம் பிடித்தோம்
வாராயோ தேரேறி நல்லருட் காட்சி நாம் கண்டிடவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 ஆம் ஆண்டு இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களின் கவனத்திற்கு

(மல்லாவி)

வடக்கு மாகாணக்கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட 12 வலயக் கல்வி அலுவலகங்களின் கீழ் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளவர்கள் எதிர்வரும் 2018 ஆண்டுக்கான இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்து தாங்கள் கடமையாற்றும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

எதிர்வரும் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதிகளைப் பெற்றுள்ள ஆசிரியர்கள் மட்டும் இடமாற்றத்திற்கு விண் ணப்பிக்க முடியும்.

இடமாற்றங்கள் அனைத்தும் வலயத் துக்குள்ளான இட மாற்றம். வலயங்களுக்கிடையிலான (மாவட்டங்களுக்குள்ளான) மற்றும் மாவட்டங்களுக் கிடையிலான இட மாற்றங் கள். மாகாணங்களுக் கிடையிலான இடமாற்றங்கள்."

என மூன்று நிலைகளில் நடை பெறவுள்ளது.

இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றுள்ள அனைத்து ஆசிரியர்களும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைக்கு முன்னதாக தாங்கள் கடமையாற்றும் வலயக் கல்வி அலுவலகங்களிற்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.

இதற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் யாவும் வலயக் கல்வி அலுவலக மட்டத்திலான இடமாற்ற சபையினால் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியானவர்களதும் மற்றும் நிராகரிக்கப்பட்டவர்களதும் பெயர் பட்டியல்கள் வலயக் கல்வி. மற்றும் கோட்டக் கல்வி அலுவலகங்களில் உள்ள விளம்பரப் பலகைகளில் காட்சிப் படுத்தப்படும்.

இடமாற்றத்திற்கு நிராகரிக்கப்பட்டவர்களது மேன்முறையீடுகள் வலயமட்டத்திலேயே மீளாய்வு செய்தல் வேண்டும்.

இவ்வாறு மேல் முறையீட்டு விசாரணைகள் முடிவுற்றதன் பின்னர் வலய மட்டத்தில் இருந்து எதிர் வரும் 2018ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்திற்கு தகுதி பெற்றுள்ள ஆசிரியர்களின் இறுதி பெயர் விபரப்பட்டியலை எதிர் வரும் ஜூலை மாதம் 25 ஆம் திகதி செவ்வாய்கிழமைக்கு முன்னதாக வலயக்கல்வி அலுவலகங்கள் வடக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இடமாற்றங்கள் யாவும் எதிர் வரும் 01.01.2018 முதல் நடை முறைப்படுத்தப் படவுள்ளதால் ஆசிரியர்களின் சேவைக் காலம் 31.12.2017 ஆம் திகதி வரை கணிப்பிடப்பட வேண்டும்.

இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்க இருக்க வேண்டிய தகுதிகள் பற்றிய விபரங்களுக்கும் மற்றும் மேலதிக தகவல்களுக்கும் வலயக் கல்விஅலுவலகங்கள் ஊடாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இடமாற்றம் தொடர்பான சுற்று நிருபத்தை பார்வையிடுவதன் மூலம் அறிந்து கொள்ளலாம். என வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2-15)

# கரியாலை நாகபடுவான் குளத்து நீர் வற்றியமையால் சிறுபோகம் கைவிடப்பட்டது

## அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம்- கமக்கார அமைப்பினர் சுட்டிக்காட்டு

(பூநகரி)

கிளிநொச்சிமாவட்டத்தில் இரண்டாவது பெரிய குளமாகவும் 500 இற்கு மேற்பட்ட ஏக்கருக்கு சிறுபோகத்துக்கு நீர்ப்பாசனம் விநியோகிக்கும் கரியாலை நாகபடுவான் குளத்தில் முற்றாக நீர் வற்றியுள்ள நிலையில் சிறுபோகம் கைவிடப்பட்டதாக பல்லவராயன் கட்டு சோலை கமக்கார அமைப்பினர், கரியாலை நாகபடுவான் கமக்கார அமைப்பினர்ஆகியோர்கவலைவெளியிட்டுள்ளனர். அதிகாரிகளின் அசமந்தப் போக்கே இதற்குக் காரணம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை சிறுபோகம் செய்யும் வாய்ப்பை தாம் இழந்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். 607 விவசாயக் குடும்பங்கள் வசிக்கும் கரியாலை நாகபடுவானில் 2016 ஆம் ஆண்டில் 450 ஏக்கரில் சிறுபோகம் விதைக்கபட்ட நிலையில் மழை குறைவான நிலையிலும் முல்லைத்தீவு மாவட்ட எல்லையில் இருக்கும் முடக்கன் ஆற்று நீரை வழிமறித்தே தமது குளத்துக்கு நீர் வந்து சேர்ந்தது.

இம்முறை கடலில் போய் விழும் முடக்கன் ஆற்று நீரை வழி மறித்துத் திருப்புவதற்கு அதிகாரிகள் அனுமதி வழங்காத நிலையில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன அதிகாரிகளுடன் நேரில் சென்று கலந்துரையாடிய போதும் எமக்கு நியாயம் கிடைக்கவில்லை என தெரிவிக்கும் மேற்படி கமக்கார அமைப்பினர் தமக்கு நியாயம் கிடைக் குமா எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர். (2-84)




# கல்லுத்தூளை மேற்பரப்பில் பரவி ஆற்றுமணல் கடத்திய வாகனம் கைப்பற்று

பளைப் பொலிஸ் நிலையப் பிரிவில் விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி / முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான விசேட முறியடிப்பு பொலிசார் நாகர் கோவில் பகுதியில் டிப்பர் வாகனம் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது. கல்லுத் தூள் என்ற போர்வையில் அனுமதிப் பத்திரமின்றி ஆற்று மணலை கடத்திச் சென்ற டிப்பர் வாகனத்தை கைப் பற்றியுள்ளதாக கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30. மணியளவில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

கிளிநொச்சி /முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன வழுங்கிய உத்தரவிற்கு அமைவாக பளைப் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள தாளையடி. மருதங் கேணி. நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி /முல்லைத்தீவு ஆகிய மாவட்டகளுக்கான விசேட முறியடிப்பு பொலிஸ் படைப்பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரி. பி. எஸ் .கல்யாணதுங்கா தலைமையில். உப பொலிஸ் பரிசோதகர் கருணாரட்னம் ஜெசிந்தன் மற்றும் பொலிஸ் கொஸ்தாபல்களான குலதீபன் (8640). யதீஸ்சாந் (37477). பந்துல (15720) ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினர் நாகர்கோவில் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த டிப்பர் வாகனத்தை தடுத்து நிறுத்தி சோதனையிட்டுள்ளனர்.

இதன் போது. கல்லுத் தூள் என்ற போர்வையில் மேல் பகுதியில் கல்லுத் தூளை பரப்பி அனுமதிப் பத்திரமின்றி ஆற்று மணலைக் கடத்திச் சென்றமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து. டிப்பர் வாகனத்தைக் கைப்பற்றியதுடன். சந்தேகத்தின் பெயரில் டிப்பர் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபரையும். கைப் பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் பளைப் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி / முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் த்கவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிகள் மாணவர்களுக்கு கொடுப்பனவுகள்




புதுக்குடியிருப்பு உடையார்கட்டுப்பகுதியில் அமைந்துள்ள ஒளிரும் வாழ்வு அமைப்பினூடாக புலம் பெயர் உறவுகளின் பங்களிப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவிகள் வழுங்கப்பட்டன.

இவ் உதவிகள் வழுங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கலந்து சிறப்பித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

ஒளிரும் அமைப்பினூடாக புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பில் உதவிகள் வழுங்கப்படுகின்றன. மிகவும் நலிவடைந்த குடும்பங்களின் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு மாதாந்தம் கொடுப்பனவுகள் வழுங்கி வருகின்றார்கள்.

அந்த வகையில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் 28 மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் வழுங்கப் பட்டது. இது தவிர முற்றாக இயங்க முடியாத மாற்றுத்திறனாளிகளில் ஒன்பது பேருக்கு கட்டில். மெத்தைகள் ஆகியனவும் எட்டு பேருக்கு மின் விசிறி களும் வழுங் கப்பட்டன.

இந்நிகழ்வுக்கு மாற்றுத் திறனாளியான ஒளிரும் வாழ்வு அமைப்பின் தலைவர் ப.இராஜ்குமார் தலைமை தாங்கினார். நன்றியுரையை செயலாளர் இ.அம்பிகை பாலன் வழுங்கினார். (2)

# 100 ஆவது நாள் கேப்பாப்பிலவு நிலமீட்புப் போராட்டம் தொடர்கிறது




(பனிக்கன் குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு நிலமீட்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்று 100 ஆவது நாளை எட்டியுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தம் நிறைவடைந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு மாதிரிக் கிராமத்தில் மீள் குடியேற்றப் பட்ட மக்கள் சொந்த நிலத்துக்குச் செல்வதற்கான போராட்டத்தை கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்திருந்தனர். நல்லாட்சி அரசாங்கத்திலாவது எமது காணிகள் விடுவிக்கப்படும் என எதிர்பார்த்து வாக்களித்ததாகவும் எனினும் ஏமாற்றம் தான் மிஞ்சியுள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் தொடர் [illegible] போராட்டத்தை முன்னெடுத்து வருவதால் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத் துள்ளதாகவும் விரைவாக தீர்வை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தன் ஆலயத்தின் தெற்கு வீதியில் அமைந்துள்ள ஸர்வ கலாபன நூதன நவதள ஸ்ரீ சண்முக இராஜகோபுரத்தின் புனராவர்த்தன மஹா கலசாபிஷேகம் நேற்று காலை 8.30 மணிக்கு நடைபெற்றது. ஆலயத்தின் மஹோற்சவம் அடுத்த மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலயத்தின் உட்பிரவாகங்களில் வர்ணபூச்சு வேலைகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-102)



சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சமுர்த்திக் கிளையின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் விழிப்பணர்வு நடைபவனி நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இருந்து ஆரம்பமாகி புதுக்குடியிருப்பு சந்தியை அடைந்தது. அங்கு விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்ற போது...

# சுகாதாரமற்ற முறையில் உணவகம் உரிமையாளருக்குத் தண்டப்பணம்

(வரணி)

சாவகச்சேரி கொடிகாமம் நகரப் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் இயக்கிய உணவகத்தின் உரிமையாளருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொடிகாமம் நகரப் பகுதியில் சுகாதாரமற்ற வகையில் சில உணவகங்கள் இயங்குவதாக சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பகுதியினருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து சுகாதார பரிசோதகர் ஜென்சன் ரொனால்ட் தலைமையிலான சுகாதார பரிசோதகர் குழுவினர் கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள உணவகங்களில் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனையை மேற் கொண்டனர்.

இதன்போது உணவகமொன்று சுகாதாரமற்ற நிலையில் இயங்குவது கண்டு பிடிக்கப்பட்டது.

சுகாதாரமற்ற இடத்தில் உணவு தயாரித்தமை, சுகாதார மற்ற இடத்தில் உணவு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை, ஈக்கள் உணவு தயாரிக்கும் இடத்தில் அதிகம் காணப்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களுக்காக சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குறித்த உணவகத்தின் உரிமையாளருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (இ-2-5-103)

# வற்றாப்பளை அம்மன் ஆலய விசேட பேருந்து சேவை

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறும். பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 5.15 மணி தொடக்கம் பயணிகளின் வருகைக்கேற்ப பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து விசேட பேருந்து சேவைகள் நடைபெறும்.

ஆசனப் பதிவுகள் பருத்தித்துறை சாலையில் மேற்கொள்ளப்படுகின்றன என பருத்தித்துறை இ.போ.ச.சாலை முகாமையாளர் க.கந்தசாமி அறிவித்துள்ளார். (2)

# தேசோதய சபைக் கூட்டம்

யாழ்.கோப்பாய் பிரதேச தேசோதய சபைக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் தேசோதய சபை அலுவலகத்தில் தேசோதய சபைத் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் இடம் பெறும்.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட சபை ஒருங்கிணைப்பாளர் எஸ்.முகேத்திரா, யாழ். மாவட்ட தேசோதயத் தலைவர் நா.தனேந்திரன் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்குவர்.

இக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் தேசோதய சபையின் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோப்பாய் தேசோதய சபை செயலாளர் ப.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ-7-134)

# கால்நடைகளை கட்டுப்படுத்துங்கள் மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை

## தென்மராட்சி சாவகச்சேரி கமநல சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர் அறிவுறுத்து

வரணி, தாவளை, இயற்றாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகளின் நலனைக்கருத்தில் கொண்டு கால்நடைகளை உடனடியாக கட்டுப்படுத்துமாறு தென்மராட்சி சாவகச்சேரி கமநல சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1979 ஆம் ஆண்டு 58 ஆம் இலக்க கமநல சேவைகள் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் நடத்தி முடிக்கப்பட்ட பெரும்போக கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக நெற்செய்கை, சிறுதானிய பயிர்ச் செய்கை மேட்டு நிலப் பயிர்ச் செய்கை ஆகியவற்றை மேற்கொள்ளும் விவசாயிகளின் நலனைப் பேணுவதற்காக கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஜுலை மாதம் 7 ஆம் திகதி வரை கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதை மீறுபவர்கள் மீது கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (2-5-101)

# தேர்த்திருவிழாவில் பக்தி கீதங்கள்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு இடம் பெறும்.

இதில் கலைமாமணி க.லோகேஸ் வரனின் பக்தி கீதங்கள் பக்க வாத்திய இசையுடன் ஆலய மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)

# இந்து வாலிபர் சங்கத்தினால் கிணறு அமைத்து வழங்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு புதிய கிணறு ஒன்று ஒரு இலட்சத்து 41 ஆயிரம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற நிலையில் இக் குடும்பத்தினர் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இக் கிணறு கட்டி வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தினருக்கே இக் கிணறு வழங்கப்பட்டுள்ளது.

இக் கிணற்றை இந்து வாலிபர் சங்கத்தின் முன்னாள் உறுப்பினரும் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான இராஜசிங்கம் பிரசாந்தனினால் திரை நீக்கம் செய்யப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. (2)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையினால் 150 மரக்கன்றுகள் கோண்டாவில் பாம் நிலையத்தில் நாட்டப்பட்டன. இந் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் கோண்டாவில் பாம் நிலையத்தில் நடைபெற்றது. யாழ். மாநகர சபையின் ஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் நடைபெற்ற இம் மரநடுகை நிகழ்வில் யாழ்.மாநகர சபையின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டு 150 வரையான பயன்தரு மரங்களை நாட்டிவைத்தனர்.

(படங்கள்:- பொ.சோபிகா)

# மந்துவில் குழுக்கனை சந்தி வீதி விளக்குகள் ஒளிரவில்லை

தென்மராட்சி மந்துவில் குழுக்கனை சந்தியில் சில மாதங்களாக வீதி விளக்கு ஒளிர்வதில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் குறித்த சந்தியால் பயணிப்போர் பல சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத் தரிசனம்



பேரறிஞர், பண்டிதர் ச.பொன்னுத்துரை அவர்களின் மூத்த பிள்ளையாக 1948.12.29 ஆம் திகதி மட்டுவிலில் பிறந்தார். 1985 ஆம் ஆண்டு இவர் எழுதி இசையமைத்துப் பாடிய முத்து 'முத்தான சித்திரங்கள் லங்கை முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்...' என்ற பாடலே 1990 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் தமிழ்மொழிமூல ஆசிரியர் கீதமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இரண்டு கண்களிலும் பார்வையிழந்த இவர் 60 இற்கும் மேற்பட்ட பாடல்களை எழுதிப் பாடியுள்ளார். 1970 ஆம் ஆண்டு இந்தியா சென்று 1975 ஆம் ஆண்டு வரை கர்நாடக சங்கீத மத்திய கல்லூரியில் கர்நாடக சங்கீதத்தை முறைப்படி பயின்று யாழ்ப்பாணம் திரும்பினார். இவர் கீபோட், வயலின் போன்ற இசைக் கருவிகளை திறம்பட வாசிப்பார். 2011 இல் வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் சங்கீத வித்துவான் என்ற விருதைப் பெற்றார். ஓய்வு பெற்ற ஆசிரியரான பொன். ஸ்ரீவாமதேவன் அவர்கள் தன்னைப்பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் வலம்புரிக்கு வழங்கிய கருத்துக்களை இங்கு தருகின்றோம்.

## 'முத்து முத்தான சித்திரங்கள்...' பாடல் புகழ் சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவன் அவர்களுடனான சந்திப்பு

**◆ தாங்கள் எவ்வாறு சங்கீதத் துறைக்குள் நுழைந்தீர்கள்?**

என்னுடைய அப்பா ஒரு பண்டிதர், அதிபர், என்னுடைய அம்மா ஓர் ஆசிரியை. இதனால் அவர்கள் என்னிடம் இருந்த குரல் வளத்தை நன்கு அவதானித்து, நான் சினிமாப் பாடல்களை 8 ஆம் ஆண்டு படிக்கின்ற போது பாடுவேன். அவ்வப்போது தட்டிக் கொடுத்து, நாச்சிமார் கோவிலடியில் இருந்த ஆசிரியர் கீதாஞ்சலி நல்லையா அவர்களை எனது இல்லத்திற்கு வந்து கற்பிக்க ஒழுங்குசெய்தார்கள். நானும் அவரிடம் ஊக்கமுடன் கற்றேன்.

பின்னர் இந்தியா சென்று 1970 தொடக்கம் 1975 ஆம் ஆண்டு வரை இந்தியா கர்நாடக சங்கீத மத்திய கல்லூரியில் பயின்றேன். இதே காலப்பகுதியில் அங்கு தஞ்சாவூர் எம். தியாகராஜா அவர்களிடமும் ஐந்து வருடங்கள் கற்றேன். இதற்கு முன்னர் 1966 ஆம் ஆண்டுகளில் மானிப்பாயில் ஐயா கணதேசிகர் அவர்களிடம் 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம் தரம் வரை கற்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக நான் சங்கீதத் துறைக்குள் நுழைவதற்கும் காரணம் எனது பெற்றோர்கள். அவர்கள் இல்லை என்றால் நான் இந்நிலைக்குவந்திருக்கமாட்டேன்.

**◆ தாங்கள் இயற்றிப் பாடிய பாடல்கள் பற்றி..?**

நான் இதுவரைக்கும் 60 இற்கு மேற்பட்ட பாடல்களை எழுதிப் பாடியுள்ளேன். 1975 ஆம் ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்றேன். பாடசாலைக் காலங்களில் கலை விழாக்கள், பரிசளிப்பு விழா, தமிழ்த் தினப் போட்டிகளுக்கு பிள்ளைகளுக்கு பாட்டுப் பழக்கி அரங்கேற்ற வேண்டும்.

அவ்வாறு மாணவர்களின் தேவைக்காகவும் அல்லது வேறு யாரும் ஒரு பாட்டு எழுதித் தரும்படி கேட்டால் எழுதிக் கொடுப்பேன். நான் முதல்முதலில் 1980 ஆம் ஆண்டு "மதுவினிலே மது மயக்கும் மனிதா" என்ற பாடலை எழுதினேன். இரண்டாவது பாடலாக "முத்து முத்தான சித்திரங்கள்" அதனைத் தொடர்ந்து "படித்தால் மட்டும் போதுமா", "மாணவர்களே காது கொடுத்து கேளுங்கள்", "முல்லைப்பூவே முல்லைப்பூவே" "உள்ளத்தில் உள்ள வரை நீ பாடு" ஆகிய பாடல்கள் எனக்கு மிகவும் பிடித்தமான பாடல்கள்.

மாணவர்கள் மத்தியில் தத்துவக் கருத்துக்களையும் அவர்களின் முன்னேற்றத்திற்கும் பண்பாட்டிற்கும் தேவையான விடயங்களையே பாடல்களாக எழுதினேன். நான் ஒரு போதும் சிருங்கார ரசத்துடன் பாடல்களை எழுதுவதில்லை.

**◆ தாங்கள் எழுதிப் பாடிய "முத்து முத்தான சித்திரங்கள்" என்ற ஆசிரியர் கீதம் மிகவும் அற்புதமான பரடல். அந்தப் பாடலின் அனுபவம் பற்றிக் கூறுங்கள் ?**

1985 ஆம் ஆண்டில் கொழும்பு மகரகமவில் சேவைக்கு முந்திய ஆசிரியர் பயிற்சிநெறி நடை பெற்றது. நியமனம் பெற்ற ஆசிரியர்கள் பாடசாலைக்கு நுழைவதற்கு முதல்அவர்களுக்கு 21 நாட்கள் வதிவிடப் பயிற்சிகள் நடைபெற்றன.

இதில் நானும் ஒரு விரிவுரையாளராகக் கடமையாற்றினேன். ஒரு பாடசாலை எப்படி நடக்குமோ அதேமாதிரியான செயற்பாடுகளும் இங்கும் நடைபெறும்.

21 ஆவது நாள் அன்று கலை நிகழ்வு நடைபெறும். நான்கு விரிவுரையாளர்கள் இருந்தோம். ஒவ்வொருவருக்கும் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. எனக்கு மெல்லிசை தரப்பட்டது. நான் எப்பொழுதும் ரேப் றெக்கோடர் (ஒலிப் பதிவுக் கருவி) வைத்திருப்பது இயல்பு. முருகன், பிள்ளையார் பற்றி எழுதுவோம் என்று யோசித்தேன்.

பின்னர் இவர்கள் ஆசிரியர்கள். இவர்களுக்கு ஆலோசனை கூறும் வகையில் ஒரு பாடலை எழுதுவோம் என்று "முத்து முத்தான சித்திரங்கள் லங்கை முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள் பற்றும் பாசமும் வைத்தவற்றை நல்ல பாதையில் சேர்க்கும் பணியெமதே" இப்படி எழுதினேன்.

ஒரு மணித்தியாலத்திற்குள் எழுதி முடித்து மெட்டமைத்துப் பாடி ரேப் றெக்கோடரில் பதிவு செய்தேன். எழுதும் போது ஆசிரியர் கீதமாக எழுதவில்லை. ஆசிரியர்களுக்கு ஆலோசனை கூறும் வகையில் எழுதினேன்.

அங்கு நான் பாடியதைக் கேட்ட எல்லோரும் நன்றாக உள்ளது என்று வாழ்த்தினார்கள். அவ்விடத்தில் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை நன்றாக இருக்கிறது என்று பதிவு செய்து கொண்டு சென்றார்.

1985 ஆம் ஆண்டு எழுதிய இப் பாடலை 1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்வி வலயம் இலங்கை ஆசிரியர் கீதமாக அங்கீகரித்தது. இப் பாடலில் வருகின்ற ஒவ்வொரு சொற்களும் காத்திரமான - நெஞ்சைத் தொடுகின்ற சொற்கள். இப் பாடலைக் கேட்கும் போது சந்தோசமாகவும் கௌரவமாகவும் உள்ளது.

**◆ இவ் ஆசிரியர் கீதத்தினை பல பாடசாலைகளில் ஆசிரியர் மனனம் செய்யாது, பிழையாகப் பாடுகின்ற துன்பியலைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அது பற்றி?**

வேலைக்கு போவதற்கு முன்னர் இருக்கின்ற ஆர்வம் வேலையில் இணைந்த பின்னர் இல்லாமல் போய் விடுகிறது. வேலையை அர்ப்பணிப்பாகச் செய்ய வேண்டும்.

மேலதிகமாகச் செய்ய வேண்டாம் உங்களுக்குரிய நேரத் தில் பிள்ளைகளுக்கு விளங்கக் கூடியவாறு, போய்ச் சேரக் கூடிய வாறு கற்பிக்க வேண்டும். நாங்கள் இந்த முறை முறையாக ஆசிரியர் கீதத்தைப் பாடுவோம் என்று முடிவெடுக்கவேண்டும்.

நான் ஓர் ஆசிரியர். என்னுடைய நடை உடை பாவனை எல்லாவற்றிற்கும் பிள்ளைகளுக்கு முன்னோடியாக இருக்க வேண்டும்.

அவர்களின் அர்ப்பணிப்புத் தன்மை நிறைவாக இருந்தால் அவர்கள் தமது கடமைகளை நிறைவாக செய்வார்கள். பெரும்பாலான ஆசிரியர்களிடம் அர்ப்பணிப்பு இல்லை. அறுபது வயது வரை அர்ப்பணிப்புடன் வேலை செய்கிறோமா? என்றால் நூறு வீதத்திற்கு ஐந்து வீதமான ஆசிரியர்கள் தான் அர்ப்பணிப்புடன் செய்கிறார்கள்.

**◆ தாங்கள் நடத்துகின்ற சங்கீத வகுப்புக்கள் பற்றி?**

என்னுடைய சொந்த இடம் சாவகச்சேரி மட்டுவில். அங்குதான் சங்கீத வகுப்புக்களை நடத்தி வந்தேன். இங்கு வந்து யாழ் பல்கலைக்கழக நுண்கலைக்கழக மாணவர்கள் கற்றார்கள்.

அவர்களின் தூரத்தைக் கருத்திற்கொண்டு 2014 ஆம் ஆண்டு இணுவிலில் வாடகைக்கு வீடு எடுத்து வகுப்புக்களை நடத்தி வருகின்றேன். யாழ் பல்கலைக்கழக நுண்கலைக்கழக மாணவர்கள் உட்பட 70 மாணவர்கள் கற்கிறார்கள்.

**◆ இன்றைய மாணவர்களிடம் சங்கீதம் கற்பதற்கான ஆர்வம் எப்படியிருக்கிறது?**

இன்றைய மாணவர்களைப் பொறுத்தவரை நூறு பேர்களில் ஐந்து பேருக்குத்தான் சங்கீதம் கற்க ஆர்வம் இருக்கிறது. ஏனையவர்கள் அனைவரும் தேவை கருதி கற்கிறார்கள். நான் ஒரு பட்டதாரியாக வேண்டும், எனக்கு தொழில் கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தான் படிக்கிறார்கள்.

தொழிலோடு சேர்ந்து இசையை விருப்போடு இசைக்கென்று தங்களின் நேரங்களை அர்ப்பணித்து தேடிப்படிக்கின்ற ஆர்வம் ஒவ்வொரு அணியிலும் ஐந்து மாணவர்களுக்கு மாத்திரமே உள்ளது.

**◆ தாங்கள் பெற்ற வெற்றிகள் - விருதுகள் பற்றி?**

✦ 2011.05.22 - சங்கீத வித்துவான்- பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடக்கு மாகாணம்.

✦ 2014.02.07 - இசைத் திலகம் - 40 ஆவது ஆண்டு நிறைவு திலக நர்த்தனாலயம்.

✦ 2009.10.06 - நல்ல ஆசிரியர் விருது - யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

✦ 2016.01.31 - தலைக்கோல் விருது - கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

✦ 34 வருடக் கல்விச் சேவையைப் பாராட்டி விருது கல்விச் சமூகம்- தென்மராட்சி.

**◆ இறுதியாக நீங்கள் சங்கீத உலகிற்கு மனந்திறந்து கூறுவது?**

புலம்பெயர் தேசத்தில் இசையை, நடனத்தை மிகவும் போற்றிப் பாதுகாத்து தங்களுடைய பிள்ளைகளுக்கு கற்பித்து வருகின்றார்கள். எங்களுடைய மண்ணில் இசையில் ஏனோதானோ அல்லது சிரத்தை இல்லாத பக்குவம் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்களிடத்திலும் இருக்கிறது.

உதாரணமாக தமிழ்த் தினப் போட்டியில் தரம் 11 இல் கற்கின்ற மாணவி நன்றாகப் பாடி வலய மட்டத்தில் முதலாமிடம் பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவானால், பாடசாலை நேரத்தில் பிள்ளை பயிற்சி பெறுவதற்கு சில ஆசிரியர்கள் அனுமதிப்பதில்லை. வெளிநாடுகளில் எத்தனையோ கிலோ மீற்றர் தூரத்திற்குச் சென்று இசையை கற்கிறார்கள்.

இங்கு ஆசிரியர்களுக்கு சங்கீதம், நடனம், நாடகம் என்றால் தீண்டத் தகாத பாடம். அல்லது அது என்ன பாடம், அது ஒரு பாடமோ? என்ற மனநிலை உள்ளது. ஆசிரியர்களின் குறை சொல்லி பயனில்லை.

ஆசிரியர்கள் சிறுவர்களாக இருக்கும் போது அவர்களின் மனதில் இப்படியாக பிழையான கருத்துக்களை விதைத்து விட்டார்கள்.

தொலைக்காட்சி, இணையத்தளம் என்பன இதற்கு மற்றொரு காரணம். இவற்றோடு பிள்ளைகள் நேரத்தைச் செலவிடுகிறார்கள். அவர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கக் கூடியவர்களாக அவர்கள் இல்லை. மாணவர்கள் தொழிலுக்காக, கௌரவத்திற்காக, பட்டத்திற்காக சங்கீதம் கற்கிறார்கள். சங்கீதத்திற்காக சங்கீதம், நடனத்திற்காக நடனம், நாடகத்திற்காக நாடகம் என்று கற்பவர்கள் நூறுக்கு 5 வீதம் தான்.

இது எங்களின் குடிப்பரம்பலிற்குப் போதாது . நாங்கள் சினிமாப் பாட்லை இசை அறிவில்லாமல் ரசிக்கலாம். கர்நாடக சங்கீதத்தை இசை அறிவில்லாமல் ரசிக்க முடியாது. சங்கீதத்தில் விழிப்புணர்வு வரவேண்டும் என்றால் அதற்கு பெற்றோரும் ஆசிரியரும் மாணவர்களை அத்துறை சார்ந்து வழிப்படுத்த வேண்டும். மாணவர்களுக்கு ஊக்கமும் விருப்பமும் வர வேண்டும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வரட்சி அனர்த்தம்! தெற்கில் வெள்ள அனர்த்தம்! இழப்பீடுகளின் நிலை என்ன?

## நாடாளுமன்றில் டக்ளஸ் கேள்வி

அரநாயக்க, மீரியபெத்தை, புளத்கொகுபிட்டிய, களுபான, கொலன்னாவ, வெல்லம்பிட்டிய, சாலாவ, மீதொட்டமுல்ல போன்ற பகுதிகளில் ஏற்கனவே இயற்கை மற்றும் ஏனைய அனர்த்தங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான இழப்பீடுகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளனவா? இல்லையேல், எப்போது அவை வழங்கப்பட்டு நிறைவு செய்யப்படும்? என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.



இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கடந்த மாத இறுதிப் பகுதியில் எமது நாட்டில் சுமார் 15 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக இதுவரையில் சுமார் 203 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், சுமார் 92 பேர் காணாமற் போயுள்ளனர் என்றும் இதன் காரணமாக சுமார் 1,85,805 குடும்பங்களைச் சேர்ந்த 74,815 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 1,540 வீடுகள் முற்றாகவும், 7,814 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அண்மைக்காலமாக எமது நாடு பல்வேறு இயற்கை அனர்த்தங்களுக்கும், செயற்கைத் தனமாக புகுத்தப்படுகின்ற அனர்த்தங்களுக்கும் முகங்கொடுத்து வருகின்ற நிலை தொடர்கின்றது.

குறிப்பாக தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழை காலம் வழமையாக ஏற்படுகின்ற மேற்படி காலகட்டத்தில் எமது நாட்டில் பாதிப்புகள் அதிகம் ஏற்படுவதை நாம் அனுபவத்தில் கண்டு வருகின்றோம். கடந்த வருடத்தை எடுத்துக் கொண்டால்கூட மே மாதம் 15ஆம் திகதி முதல் ஏற்பட்ட மழை, வெள்ளம் காரணமாக எமது நாட்டில் 22 மாவட்டங்களில் பாதிப்புகள் ஏற்பட்டு, சுமார் 104 பேர் உயிரிழந்து, 99 பேர் காணாமற் போய், 301,602 பேர் பாதிக்கப்பட்டு, 128,000 வீடுகள் பாதிக்கப்பட்டு, 30,000 வீடுகள் மீள் கட்டுமானத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருந்தன.

அந்த அனுபவம் காரணமாகவேனும், இந்த வருடத்தில் தென் மேற்குப் பருவப் பெயர்ச்சி மழை காலத்தினை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் உயிர் மற்றும் உடைமை சேதங்களை போதுமானளவு தவிர்த்திருக்க முடியும் என்றே பொதுவாகக் கருதப்பட வேண்டியுள்ளது.

இதனிடையே நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாகவும் மக்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால், வரட்சி காரணமாக 14,685 குடும்பங்களைச் சேர்ந்த 410,703 பேர் கடும் பாதிப்புகளுக்கு உட்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்ற நிலையில், குறிப்பாக யாழ். தீவகப் பகுதிகளில் குடிநீரின்மை காரணமாக மக்கள் இடம்பெயருகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அதே நேரம், மட்டக்களப்பு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் நிலவுகின்ற அதிக காற்று காரணமாக சுமார் 25 ஆயிரம் கடற்றொழிலாளர் குடும்பங்கள் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

இதே நேரம், அனர்த்தங்கள் ஏற்படுகின்றபோது, நிவாரணம் மற்றும் நட்டஈட்டுத் தொகைகள் அறிவிக்கப்படுகின்ற போதும், கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டோருக்குக் கூட இதுவரையில் உரிய இழப்பீடுகள் வழங்கப்படவில்லை என்றும் தெரிய வருகின்றது.

அரநாயக்க, மீரியபெத்தை, புளத்கொகுபிட்டிய, களுபான, கொலன்னாவ, வெல்லம்பிட்டிய, சாலாவ, மீதொட்டமுல்ல போன்ற பகுதிகளில் ஏற்கனவே இயற்கை மற்றும் ஏனைய அனர்த்தங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான இழப்பீடுகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளனவா? இல்லையேல், எப்போது அவை வழங்கப்பட்டு நிறைவு செய்யப்படும்?

கடந்த வருடம் மே மாதம் 14ஆம் திகதி ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின்போது, "அனர்த்த நிலைமைகளின் போது இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட ஒரு வீட்டுக்கென 25 இலட்சம் ரூபா வரையில் வழங்கக் கூடிய வகையில் காப்புறுதி மூலமான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலமாக வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் நிதி அமைச்சர் அறிவித்திருந்தார்.

எனினும், பாதிப்புக்குள்ளான வீடொன்றுக்கு 25 ஆயிரம் ரூபா வீதமாக வழங்குவதற்கே தீர்மானிக்கப்பட்டு, அதில் 10 ஆயிரம் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டதாகவும், எஞ்சிய 15 ஆயிரம் ரூபாவே வழங்கப்படவுள்ளதாகவும் அரச அதிகாரிகள் மட்டத்திலிருந்து தெரிய வருகிறது என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன் உண்மை நிலை என்ன?

கடும் வரட்சி மற்றும் கடும் காற்று காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய மாகாண மக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள நிவாரண் மற்றும் இழப்பீட்டு செயற்பாடுகள் என்ன?

அண்மையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தவிர்ந்த, தங்களது இருப்பிடங்களை சுத்தஞ் செய்து வரும் மக்களுக்கும், தூர கஷ்டப் பகுதிகளிலுள்ள மக்களுக்கும் நிவாரணங்கள் உரிய முறையில் கிடைப்பதில்லை எனக் கூறப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் அவதானங்கள் செலுத்தப்படுகின்றனவா? மேற்படி இயற்கை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான இழப்பீடுகள் எப்போது வழங்கப்பட்டு, நிறைவு செய்யப்படும்? என டக்ளஸ் தேவானந்தா கேள்விகளை எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)



கேலிச்சித்திரம்

# முந்தைய வெள்ளங்களுக்கும் நெடுஞ்சாலையா காரணம்?

## நாமல் எம்.பி கேட்கிறார்



"2003ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் ஏற்பட்ட வெள்ளங்களுக்கு, தெற்கு அதிவேக நெடுஞ்சாலை தான் காரணமா?" என, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வியெழுப்பினார்.

நாமல் எம்.பிக்குச் சொந்தமான கவர்கோப்ஸ் நிறுவனத்தின் பங்குகளை விற்று, 30 மில்லியன் ரூபாய் பணச் சலவையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு ஆஜராவதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு, நாமல் எம்.பி. நேற்று முன்தினம் வருகைதந்திருந்தார்.

அதன்பின்னர், நீதிமன்ற வளாகத்தில் வைத்து," அதிவேக நெடுஞ்சாலையால் தான் வெள்ளம் ஏற்படுவதாகக் குற்றம் சுமத்தப்படுகிறதே?" என, ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், "இரத்தினபுரியில் ஏற்பட்ட வெள்ளத்துக்கும் அதிவேக நெடுஞ்சாலை தான் காரணமா?" எனவும் கேள்வியெழுப்பினார். (இ-7)

# 'பேச்சைக் கேட்காததால் எம்மை தண்டிக்க முயற்சி'

## உதய கம்மன்பில விசனம்

சர்வதேச நாடுகளின் பேச்சைக் கேட்காமல், விடுதலைப் புலிகள் அமைப்பை அழித்தமையால், அந்தத் தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாத சர்வதேச நாடுகள், இலங்கையைத் தண்டிக்க முயல்கின்றன" என, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த எதிரணியால், நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்ட ஜெனிவாத் தீர்மானம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"விடுதலைப் புலிகள் அமைப்புடன், யுத்தம் ஆரம்பித்த போது மேற்கத்தேய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டன. அவர்களின் செயற்பாடுகள் குறித்தும் தகவல்களை வழங்கின. அதனால், இந்தோனேஷிய கடற்பரப்பில், ஆயுதங்களுடன் இருந்த புலிகளின் ஆயுதக் கப்பல்கள் மூன்றை இலங்கைப் படையினரால் அழிக்க முடிந்தது.

இந்நிலையில், மேற்கத்தேய அதிகாரமிக்க நாடுகள், ஈராக் போன்ற நாடுகளுடன் போர் புரிந்த நிலையில் அவர்களால் அதில் வெற்றிபெற முடியாத நிலை காணப்பட்டது.

அந்த நேரத்தில், விடுதலைப் புலிகளை அழித்து இலங்கை வெற்றிபெறு வதை அந்த நாடுகள் விரும்பவில்லை. விடுதலைப்புலிகளை நாங்கள் கட்டுப்படுத்துவோம் என நினைத்தே, எங்களுக்கு ஆதரவளித்த மேற்கத்தேய நாடுகள், 2009ஆம் ஆண்டு கிளிநொச்சியை இலங்கைப் படையினர் வெற்றிகொண்டதும், விடுதலைப்புலிகளை நாங்கள் அழிக்கப்போவதைப் புரிந்து கொண்டன.

இதில் விருப்பமில்லாத நிலையில், அன்றைய நாட்களின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, அன்றைய அமெரிக்க வெளிவிவகார செயலாளர் ஹிலாரி கிளின்டன் உள்ளிட்ட முக்கியமான உயர்மட்ட அதிகாரிகளிடமிருந்து அலைபேசி அழைப்புகள் வந்தன.

எனினும், நாங்கள் விடுதலைப் புலிகளை அழித்து விட்டதால், மேற்கத்தேய நாடுகள் வெட்கமடைந்தன.

தமது பேச்சை மீறி செயற்பட்ட இலங்கையைத் தண்டிக்காவிட்டால் சர்வதேச நாடுகளிடம் தமது அதிகாரத்தை நிரூபிக்க முடியாது என்பதால், இலங்கை மீதான குற்றப்பிரேரணையை அந்த நாடுகள் கொண்டு வந்தன.

அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜெனிவாத் தீர்மானத்தின்படி, விசாரணைகளுக்காக எமது பொலிஸாருக்குப் பதிலாக சர்வதேச பொலிஸார், வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளுக்குப் பதிலாக சர்வதேச நீதிபதிகள் மற்றும் எமது சட்டத்தரணிகளுக்கு பதிலாக வெளிநாட்டுச் சட்டத்தரணிகள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை தொடர்பில் இந்தியா அவதானமாக இருக்க வேண்டும்

இலங்கை மற்றும் சீனா தொடர்பில் பின்பற்றுகின்ற வெளியுறவுக் கொள்கை தொடர்பில் இந்தியா அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

த மொடர்ன்டிப்லோமெசியில் வெளியாகியுள்ள கட்டுரை ஒன்றிலே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில், கடற்றொழிலாளர் பிரச்சினை, ஜெனிவா பிரேரணை, அரசியல் யாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் வேறுபாடுகள் நிலவுகின்றன.

எனினும் இந்தியா தமது வெளியுறவுக் கொள்கை வகுப்பின் போது இலங்கைக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று தொடர்ந்து கூறி வருகிறது. இந்த நிலையில், இந்தியா இது குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. இணைப்பில் அதிரடி மாற்றங்கள்

## ஓ.பி.எஸ் – இ.பி.எஸ் இடையே புதிய சமரசத்திட்டம்



(சென்னை)

அ.தி.மு.க. அணிகள் இணைப்புக்காக இதுவரை 6 சுற்று பேச்சுவார்த்தை முடிவுற்ற நிலையில் ஓ.பன்னீர் செல்வம், எடப்பாடி பழனிச்சாமி இடையே புதிய சமரச திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜெயலலிதா மறைவுக்குப் பின் அ.தி.மு.கவில் ஏற்பட்ட பிளவால் கட்சியும் ஆட்சியும் அடுத்தடுத்து நெருக்கடிகளை சந்தித்து வருகின்றன.

ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் ஒரு அணியாகவும், எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் மற்றொரு அணியாகவும் செயற்பட்டு வருகிறார்கள்.

இதனால் அ.தி.மு.கவின் சின்னமான இரட்டை இலை முடக்கப்பட்டு கட்சி பெயரை பயன்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

சின்னத்தை மீட்க அ.தி.மு.க. அணிகள் இணைப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக இருக்கும் சசிகலா சிறை சென்ற பின்னர் இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் ஓ.பி.எஸ். அணி டி.டி.வி.தினகரனை கட்சிப் பணியில் இருந்து ஒதுக்கி வைக்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு நிபந்தனை விதித்தது. அதன்படி தினகரனை கட்சிப்பணியில் இருந்து ஒதுக்கி வைப்பதாக அமைச்சர் ஜெயக்குமார் அறிவித்தார்.

அதன்பிறகு தினகரன் இரட்டை இலைக்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் கைதாகி டில்லி சிறையில் அடைக்கப்பட்டார். 40 நாட்களுக்கு பின்பு பிணையில் வந்த அவர் இணைப்பு முயற்சி நடக்காததால் மீண்டும் கட்சிப் பணியில் ஈடுபடுவேன் என்று அதிரடியாக அறிவித்தார். இது அ.தி.மு.கவில் மீண்டும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

தினகரன் கட்சிப்பணியில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட முடிவில் மாற்றம் இல்லை என்று ஜெயக்குமார் மீண்டும் பதிலடி கொடுத்தார். இதனால் மீண்டும் அ.தி.மு.கவில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க அ.தி.மு.க. இணைப்பு முயற்சியும் ரகசியமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பாக இரு அணி நிர்வாகிகளும் ஒருவருக்கொருவர் ரகசியமாக பேச்சு நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே 6 சுற்று பேச்சுகள் நடைபெற்றதாகவும் தங்கள் நிபந்தனை தொடர்பாக எடப்பாடி பழனிச்சாமி அணியின் இறுதி முடிவை எதிர்பார்த்து இருப்பதாக ஓ.பி.எஸ். அணி நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

அ.தி.மு.க. அணிகள் இணைப்புக்காக புதிய சமரச திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. எடப்பாடி பழனிச்சாமி ஓராண்டுக்கு முதலமைச்சராக நீடிப்பார். ஓ.பன்னீர்செல்வம் பொது செயலாளராக செயற்படுவார் என்பதே அந்த திட்டம்.

சசிகலா பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்படுவார். ஆனால் கட்சியில் சாதாரண உறுப்பினராக நீடிக்கலாம் என்றும் டி.டி.வி. தினகரன் துணை பொதுச் செயலாளராக இடையில் நியமிக்கப்பட்டதால் அவரை அந்த பொறுப்பில் இருந்தும் கட்சியில் இருந்தும் நீக்குவது தொடர்பாகவும் பேசப்பட்டு வருகிறது.

சசிகலா எடுத்த நடவடிக்கைகளையும் இரத்து செய்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் அ.தி.மு.கவில் இணைத்துக் கொள்வது தொடர்பாகவும் பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அ.தி.மு.கவில் குழப்பம் ஏற்பட்டுள்ள நிலையில் தமிழகத்தில் நிலையான ஆட்சி இருக்க வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது.

எனவேதான் ஓ.பி.எஸ். அணியின் நிபந்தனையை ஏற்று இணைய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எடப்பாடி பழனிச்சாமி அணிக்கு ஏற்பட்டுள்ளது. (இ-3)

# கொலரா நோயால் ஏமனில் 700 பேர் பலி!

## 86 ஆயிரம் மக்கள் பாதிப்பு



(சனா)

**உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள ஏமன் நாட்டில் கொலரா எனப்படும் வாந்திபேதி நோய்க்கு சுமார் 700 பேர் பலியாகியுள்ளனரென உலக சுகாதார நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.**

ஏமன் நாட்டின் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுத்தி புரட்சிப் படையினர் கடந்த இரண்டாண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசுப் படைகளுடன் புரட்சிப் படையினர் நடத்தி வரும் மோதலில் பத்தாயிரத்துக்கும் அதிக மானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த படையினருக்கு சவுதி அரேபியா தலைமையிலான இஸ்லாமியப் படைகள் ஆதரவு அளித்து வருகின்றன. இந்த ஆதரவுடன் நாட்டின் தலைநகரான சனா பகுதியை கைப்பற்றியுள்ள புரட்சிப் படையினர் அந்நகரை தங்களது ஆளுமைக்கு உட்படுத்தி வைத்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து சனா நகரில் கொலரா எனப்படும் வாந்திபேதி நோய் வேகமாக பரவத் தொடங்கியது.

இதையடுத்து, ஆட்சி நிர்வாகத்துக்கு பொறுப்பேற்றுள்ள ஹவுத்தி அரசின் நிர்வாகம் கடந்த மாதம் சனா நகரில் அவசர நிலை சட்டத்தை பிரகடனப்படுத்தியது.

கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதியில் இருந்து இம்மாதம் 4ஆம் திகதிவரை சுமார் 86 ஆயிரம் மக்கள் கொலரா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சனாவை கடந்து அருகாமையிலுள்ள அமானத் அல்-செமா மாகாணம், ஹோடெய்டா, டய்ஸ் மற்றும் ஏடன் நகரிலும் கொலரா நோய் வேகமாக பரவி வருகிறது.

கடந்த மே மாதம் 27 ஆம் திகதி வரை 471 பேர் கொலராவுக்கு பலியானதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த பத்து நாட்களில் அடுத்தடுத்து சிகிச்சை பலனின்றி பலர் உயிரிழந்துள்ள நிலையில் இந்நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை தற்போது 700 ஆக உயர்ந்துள்ளது.

நாட்டில் வாழும் மொத்த மக்கள்தொகையான 2.6 கோடி மக்களில் 1.7 கோடி பேர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் போதிய ஊட்டச்சத்தான உணவு கிடைக்காமல் திண்டாடி வருவதாகவும் உலக சுகாதார நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது. (இ-3)

# ராகுல் காந்திக்கு வழிவிட்டு

## காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து சோனியா காந்தி விலகுகிறார்

(டில்லி)

ஒக்டோபர் 15 ஆம் திகதி துணைத்தலைவர் ராகுல் காந்தி தலைமை ஏற்க வழிவிட்டு, காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தி பதவி விலகுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.



டில்லியில் சோனியா காந்தி தலைமையில் நேற்று முன்தினம் நடந்த காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டத்தில், உட்கட்சி தேர்தல் அட்டவணைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

அதன்படி உட்கட்சி தேர்தல்கள் ஒக்டோபர் 15 ஆம் திகதி முடியும்.

அன்றைய தினம், துணைத்தலைவர் ராகுல் காந்தி தலைமை ஏற்க வழிவிட்டு, காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தி பதவி விலகுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் நடந்த காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்தில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், மூத்த தலைவர் ஏ.கே. அந்தோணி உள்ளிட்டவர்கள் ராகுல் காந்தி தலைவர் ஆக்கப்படுவதற்கு ஆதரவான கருத்தை ஓங்கி ஒலித்தனர்.

கடந்த 1998 ஆம் ஆண்டு சீதாராம் கேசரியிடம் இருந்து கட்சி தலைவர் பதவியை கைப்பற்றிய சோனியா காந்தி, 20 ஆண்டு காலம் அந்தப் பதவியில் தொடர்ந்து கட்சி வரலாற்றில் சாதனை படைத்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# கர்நாடக மாநிலத்தில் பலத்த மழை வெள்ளத்தில் கார் சிக்கி 4 பேர் பலி

(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தில் பெய்த பலத்த மழையால் ஓடையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த வெள்ளத்தில் ஒரு கார் சிக்கி 4 பேர் பலியாகினர்.

கர்நாடக மாநிலம் பாகல் கோட் மாவட்டம், பாதாமி தாலுகாவில் நேற்று முன்தினமிரவு பலத்த மழை பெய்தது.

இந்த மழையின் காரணமாக அணவலா-யாதகிரி சாலையில் உள்ள ஒரு ஓடையில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த வெள்ளத்தை கவனிக்காமல் தரைபாலத்தில்வந்த காரை வெள்ளம்அடித்து சென்றது. இதில்நால்வர் உயிரிழந்தனர். (இ-3)

# நேபாளத்தின் 40ஆவது பிரதமராக ஷேர் பகதூர் தியூபா தேர்வு

(காத்மண்டு)

நேபாள பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், நாட்டின் 40 ஆவது பிரதமராக நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஷேர் பகதூர் தியூபா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நேபாளத்தில், நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்-சென்டர்) மற்றும் நேபாள காங்கிரஸ் கட்சிகளிடையே ஏற்படுத்தப்பட்ட அதிகார பகிர்வு ஒப்பந்தத்தின் படி பிரதமர் பிரசண்டா தனது பதவியை கடந்த மாதம் 24 ஆம் திகதி இராஜினாமா செய்தார். நேபாள காங்கிரஸ் கட்சி தலைவர் ஷேர் பகதூர் தியூபா (வயது 70) புதிய பிரதமராக பதவியேற்கும் வகையில் பிரசண்டா இராஜினாமா செய்தார். தியூபா பெயரை பிரதமர் பதவிக்கு முன்மொழிந்தார்.

அதன்பின்னர், பிரதமர் பதவிக்கு நேபாள காங்கிரஸ் தலைவர் தியூபா ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். பிரதான எதிர்க்கட்சியான நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (யுஎம்எல்), போட்டியிடுவதில்லை என முடிவு செய்தது.

இதனால், தியூபா மட்டுமே போட்டியில் இருந்தார். எனவே, அவர் பிரதமராக தேர்வு செய்வது உறுதியானது.

ஆனால், பாராளு மன்றத்தில் முறைப்படி வாக்கெடுப்பு நடத்தி பெரும்பான்மை வாக்குகளை பெறவேண்டும் என்பதால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்றத்தை கூட்ட முடிவு செய்யப்பட்டது. அப்போது, உள்ளூராட்சித் தேர்தல் விவகாரத்தில் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த சி.பி.எம். (யுஎம்எல்), பாராளுமன்றத்தை நடத்த விடாமல் இடையூறு செய்யப் போவதாக எச்சரித்தது.

எனவே, பாராளுமன்ற கூட்டத்தை செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

அதன்படி, பாராளுமன்றம் நேற்று முன்தினம் மீண்டும் கூடியதும், பிரதமர் தேர்வுக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 593 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில், பெரும்பான்மையை நிரூபிக்க 297 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

இதில், 388 வாக்குகள் பெற்று நாட்டின் 40ஆவது பிரதமராக தியூபா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தியூபா இதற்கு முன்பு மூன்று முறை (1995-1997, 2001-2002, 2004-2005) பிரதமராக பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளைகுடா நாடுகளின் ஒற்றுமை அவசியம்

## சவுதி மன்னரிடம் ட்ரம்ப் வலியுறுத்து



(வோஷிங்டன்)

வளைகுடா நாடுகளின் ஒற்றுமையை உறுதி செய்து தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடுமாறு சவுதி அரேபிய மன்னர் சல்மானுக்கு அமெரிக்கஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

கட்டார் நாட்டுடனான தூதரக உறவை அமீரகம், சவுதி அரேபியா, பக்ரைன், எகிப்து, ஓமான் ஆகிய 5 நாடு கள் திடீரென துண்டித்தன. பயங்கரவாதச் செயல்களுக்குத் துணை போகும் வகையில் கருத்துகளை தெரிவித்ததற்காகவும், அதற்கு ஆதரவு அளிக்கும் வகையில் செயற்பட்டு வருவதற்காகவும் கட்டார் மீது இந்த நடவடிக்கையை மேற்கண்ட 5 நாடுகள் எடுத்துள்ளன.

அமீரகத்தில் தங்கியிருக்கும் கட்டார் நாட்டை சேர்ந்தவர்கள் 14 நாட்களுக்குள் நாடு திரும்பவும், தூதரக அதிகாரிகள் 48 மணி நேரத்துக்குள் வெளியேறவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதேபோல் கட்டார் நாட்டு விமானங்கள் தங்கள் நாட்டுக்குள் வரவும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சவுதி அரேபிய மன்னர் சல்மானை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, கட்டார் நாட்டின் மீதான தடையால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து இருவரும் கலந்துரையாடினர். வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த தகவல் இடம்பெற்றுள்ளது.

இந்த உரையாடலின் போது, தீவிரவாதத்திற்கு எதிராக போராட, பிராந்திய ரீதியிலான ஒற்றுமையை நிலைநாட்டவும் வளைகுடா ஒத்துழைப்புச் சபையிலுள்ள நாடுகளின் ஒற்றுமையை உறுதிப்படுத்துங்கள் என்று சவுதி மன்னரிடம் ட்ரம்ப் கூறினார்.

முன்னதாக கட்டார் நாட்டுடனான உறவை 4 அரபு நாடுகள் துண்டித்துள்ளதற்கு ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# 2 நிபந்தனைகளை நிறைவேற்றினால் அ.தி.மு.க. இணையும் - ஓ.பி.எஸ்.அணி



(சென்னை)

2 நிபந்தனைகளை நிறைவேற்றினால் அ.தி.மு.க. இணையும் என்றும், அரசு கவிழ்வதற்கு வாய்ப்பு இல்லை எனவும் முன்னாள் அமைச்சர் கே.பாண்டியராஜன் தெரிவித்துள்ளார்.

தற்போது தமிழக சட்டசபையில் சபாநாயகர் நீங்கலாக அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 134 பேர் உள்ளனர். முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அணியில் 12 எம்.எல்.ஏக்கள் உள்ளனர். 29 எம்.எல்.ஏக்கள் டி.டி.வி. தினகரனுக்கு ஆதரவாக உள்ளனர். எடப்பாடி பழனிச்சாமிக்கு தற்போது வரை 93 எம்.எல்.ஏக்களே ஆதரவாக உள்ளனர்.

3 அணிகளாக அ.தி.மு.க. செயற்படுவதால் எதிர்வரும் 14 ஆம் திகதி சட்டசபை கூடும் போது, எடப்பாடி பழனிச்சாமி தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க முடியுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் ஓ.பன்னீர செல்வம் அணியை சேர்ந்த எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் மற்றும் மூத்த நிர்வாகிகளுக்கு நேற்று புதன்கிழமை சென்னைக்கு வருமாறு 'திடீர்' அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஓ.பன்னீர்செல்வம் அணியினரும், இரட்டை இலை சின்னம் தொடர்பாக தேர்தல் ஆணையத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளனர். இதனால் இரட்டை இலை சின்னத்தை பெறுவது தொடர்பாக அடுத்த கட்டமாக என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்? என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது. ஜெயலலிதா உருவாக்கிய அரசு கவிழ்வதை விரும்பாத, ஓ.பன்னீர்செல்வம் அணியினர் எடப்பாடி பழனிச்சாமி அணிக்கு ஆதரவு அளிக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்தநிலையில் ஓ.பன்னீர்செல்வம் அணியை சேர்ந்த முன்னாள் அமைச்சர் கே.பாண்டியராஜன் சிறப்பு பேட்டி அளித்தார். அப்போது கேட்கப்பட்ட கேள்வியும், அதற்கு அவர் அளித்த பதிலும் வருமாறு:-

**கேள்வி :-** டி.டி.வி.தினகரனுக்கு 29 எம்.எல்.ஏக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால் அரசு பெரும்பான்மையை இழந்து நிற்கிறது. அரசுக்கு ஆபத்து வந்தால் உங்களுடைய நிலைப்பாடு என்ன?

**பதில் :-** 29 எம்.எல். ஏக்கள் டி.டி.வி.தினகரனை பார்த்தார்கள் என்பதால், அவர்கள் டி.டி.வி.தினகரன் ஆதரவாளர்கள் என்றோ, எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிரானவர்கள் என்றோ கருதமுடியாது. டி.டி.வி.தினகரனை பார்த்த எம்.எல்.ஏக்கள் அரசை கவிழ்க்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை என்று கூறியிருக்கிறார்கள். எனவே இந்த அரசு கவிழ்வதற்கான வாய்ப்பு இல்லை.

எங்களை பொறுத்த வரை 2 நிபந்தனைகளை நாங்கள் வைத்திருக்கிறோம்.

அதாவது சசிகலா மற்றும் டி.டி.வி.தினகரனை கட்சியில் இருந்து நீக்கவேண்டும். மற்றொன்று மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணத்துக்கு நீதி விசாரணை நடத்த வேண்டும் என்பதுதான்.

இந்த நிபந்தனைகளை எளிதில் நிறைவேற்றும் காலம் தற்போது நெருங்கி விட்டது. இந்த நிபந்தனைகளை நிறைவேற்றும் பட்சத்தில் 24 மணி நேரத்தில் அ.தி.மு.கவில் பிளவுபட்ட 2 அணிகளும் இணைவதற்கு பிரகாசமான வாய்ப்புள்ளதென அவர் பதிலளித்தார். (இ-3)

# சிரியா சிறுவனின் தற்போதைய நிலை



(டாமாஸ்கஸ்)

சிரியாவில் நடக்கும் உள்நாட்டுப்போரில் பாதிக்கப்பட்டு இரத்தக்களறியுடன் வெளியேறிய சிறுவன் ஓம்ரானின் தற்போதைய புகைப்படம் இணையத்தில் வெளியாகியுள்ளது.

வளைகுடா நாடான சிரியாவில் கடந்த 6 ஆண்டுகளாக உள்நாட்டுப்போர் நடைபெற்று வருகிறது. ஜனாதிபதி ஆசாத் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் ஆயுதமேந்திப் போராட்டம் நடத்தி வருகின்றனர். மேலும், ஐ.எஸ்.தீவிரவாத இயக்கத்தினரும் அரசுப் படைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக ரஷ்யாவும், அரசுப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்காவும் களமிறங்கியுள்ள நிலையில கடந்தாண்டு ஓகஸ்ட் மாதத்தில் அலெப்போ நகரில் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக ரஷ்ய விமானப் படை நடத்திய தாக்குதலில் அந்நகரில் வசித்து வந்த பலர் உயிரிழந்தனர். பலர்படு காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.


இதில் 5 வயது சிறுவன் ஓம்ரானும் அடக்கம். படுகாயமடைந்து முகத்தில் இரத்தக்காயங்களுடன் அவர் அம்புலன்சில் அமர்ந்திருக்கும் படம் உலகமெங்கும் பரவியது. கிளர்ச்சியாளர் களின் தாக்குதலில் ஓம்ரானின் 10 வயது சகோதரன் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து, ஓம்ரான் அரசின் பாதுகாப் பில் தங்கவைக்கப்பட்டார்.

இந்நிலையில், சிறுவன் ஓம்ரானின் தற்போதைய புகைப்படம் இணையத்தளங்களில் பரவி வருகின்றது. (இ-3)

## பால்டிக் கடல் பகுதியில் பரபரப்பு

# அமெரிக்க விமானத்தை விரட்டியடித்த ரஷ்ய போர் விமானம்



(மொஸ்கோ)

ரஷ்யா நாட்டின் அருகிலுள்ள பால்டிக் கடல் பகுதியில் நேற்று முன் அனுமதி இல்லாமல் பறந்த அமெரிக்க விமானத்தை ரஷ்யப் போர் விமானம் விரட்டியடித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்ய நாட்டின் பால்டிக் கடலை ஒட்டியுள்ள வான் எல்லை லப் பகுதியில் ஒரு மர்ம விமானம் பறப்பதை (உள்ளூர் நேரப்படி) நேற்றுக் காலை 10 மணியளவில் ரஷ்யாவின் உளவு ரேடார்கள் கண்டுபிடித்தன.

இதையடுத்து, பால்டிக் கடற்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ரஷ்ய கடற்படை கப்பலில் இருந்து புறப்பட்ட அதிநவீன சுகோய்-27 ரக போர் விமானம் அந்த மர்ம விமானத்தை விரட்டிச் சென்றது.

அருகில் சென்று பார்த்த போது அத்துமீறி பறந்த விமானம் அமெரிக்க விமானப் படைக்கு சொந்தமான பி-52 ரக போர் விமானம் என்பது தெரியவந்தது.

தங்கள் நாட்டு வான் எல்லையை அமெரிக்க போர் விமானம் கடக்கும்வரை அதை விரட்டிச் சென்று தங்கள் நாட்டு விமானப் படையினர் கண்காணித்ததாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-3)

# பயங்கர குண்டுவெடிப்பு! ஆப்கானில் 10 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டில் காபூல் நகரில் அண்மையில்நடந்த பாரிய குண்டு வெடிப் பில் 100-க்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருந்த நிலையில், ஹெரட் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்.கானிஸ்தான் - ஈரான் எல்லை அருகே உள்ள ஹெரட் நகரம் ஆப்கானிஸ் தானின் மிகப் பெரிய நகரம் ஆகும்.

இங்கு 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மிகப் பெரிய மசூதியான ஜமா மஸ்ஜித் அருகே உள்ள ஒரு பூங்காவில் நேற்று முன்தி னம் மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள் பயங்கரமாக வெடித்தன.

இந்த குண்டு வெடிப்பில் 10இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். மேலும், பலர் காயங்களுடன் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலையில் உள்ள சிலரின் உடல் நிலை கவலைக் கிடமாக உள்ளதால், பலி எண்ணிக்கை மேலும் அதிகமாகலாம் என்று தகவல் கள் வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதலுக்கு எந்த தீவிரவாத இயக்கமும் உடனடியாக பொறுப்பேற்க வில்லை.

கடந்த புதன்கிழமை ஆப் கானிஸ்தான் தலைநகரான காபூலில் நடந்த ஒரு வெடி குண்டு தாக்குதலில் 150 இற்கும் மேற்பட்டோர் கொல் லப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் காயமுற்றனர்.

இந்நிலையில் ஹெரடில் நடைபெற்றுள்ள குண்டு வெடிப்பு அந்நாட்டு மக்களுக்கு அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யுத்தம் முடிந்தாலும் இனவாதம் ஓயவில்லை

## ஹக்கீம் கவலை



காப்புறுதி தொகையைப் பெறுவதற்காக முஸ்லிம் உரிமையாளர்கள் தமது வர்த்தக நிலையங்களுக்கு தாமே தீ வைப்பதாக சட்டத்தை நிலை நாட்ட வேண்டிய அதிகாரிகள் குறிப்பிடுவதை வன்மையாக கண்டிப்பதாக நீர்வழுங்கல் மற்றும் நகர திட்டமிடல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் இடம்பெற்ற ஜெனிவா பிரேரணை குறித்து சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

கடந்த ஒரு மாத காலப் பகுதியில் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் தீயிடப்பட்ட 16இற்கும் மேற்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.


யுத்தம் முடிவடைந்த பின்னர் சில சக்திகள் நாட்டில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. இந்த சக்திகள் தற்பொழுது வெறுக்கத்தக்க பேச்சுக்களை பரப்பி வருகின்றன.

இதனுடன் தொடர்புபட்ட குற்றவாளிகள் பாதுகாக்கப்படுகின்றனர்.

அரசியலமைப்பை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் மத ரீதியான சகிப்புத் தன்மைகளை உறுதிப்படுத்துவதற்கான விடயங்களும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.

நாட்டில் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் தரப்பினர்களுக்கு எதிராக அரசாங்கமும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளும் விரைந்து நடவடிக்கை எடுப்பது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஞானசாரருக்கு ஐ.எஸ். குறி



பொது பலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரைக் கொலை செய்வதற்கான திட்டம், ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, அவ்வமைப்பு நேற்று முன்தினம் தெரிவித்தது.

இலங்கையில் வேகமாகப் பரவிவரும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு, கிழக்கு மாகாணத்தில் அதிகளவு ஆதிக்கத்தைப் பெற்று வருகிறது.

இந்நிலையில் இவ்வமைப்பின் ஊடாக, கலகொட அத்தே ஞானசார தேரரைக் கொலை செய்வதற்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக, பொது பலசேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி திலந்த விதானகே தெரிவித்தார்.

இராஜகிரியவில் உள்ள விகாரையொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கலகொட அத்தே ஞானசார தேரருக்குக் கொலை அச்சுறுத்தல் காணப்படுவதனால் தான், அவர் பொது நிகழ்வுகள், வாகனங்கள் என்பவற்றில் செல்லாமல் மறைந்து வாழ்கிறார்.

பாதுகாப்பு அமைப்பும், கலகொட அத்தே ஞானசார தேரருக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பது தொடர்பில், பொதுபல சேனாவுக்கு அறிவித்திருந்தது.

இந்நிலையில், உயர்நீதிமன்றமும் ஞானசார தேரரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கவில்லை. வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காகவே அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், பிரபாகரனைக் கைது செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியின் போது, சுமார் 200 பேர், அன்று ஈடுபடுத்தப்பட்டனர். அதேபோன்று 200 பொலிஸ் அதிகாரிகள் சுற்றிவளைத்து ஞானசார தேரரை கைது செய்ய முற்பட்டனர். அவர்களிடம் எந்தவொரு பிடியாணையும் இருக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# சிறுபான்மையினரை மறந்து ஐ.தே.கட்சி செயற்படுகிறது

## கல்வி இராஜாங்க அமைச்சர் விசனம்



இந்த நாட்டிலுள்ள சிறுபான்மையினருக்கு அதிகமாக பணியாற்றியுள்ளது ஸ்ரீ ல.சு. கட்சி எனவும், ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு சிறுபான்மையினர் தூரமாகிச் சென்று கொண்டிருப்பதாகவும் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினரை மறந்த நிலையில் ஐ.தே.கட்சி இன்று செயற்படுகின்றது. மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது கால கட்டத்தில் சிறுபான்மையினரை மறந்ததனால் அவர் தோல்வியடைந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் அதேபோன்று சிறுபான்மையினரை மறந்து செயற்படுகின்றது. இதனால், சிறுபான்மையினர் அக்கட்சியை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கின்றனர் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### உங்க இஷ்டம்

சேலத்து மாப்பிள்ளை பிடிச்சிருக்கா, கோயம்புத்தூர் வரன் பிடிச்சிருக்கா? இன்ஜினியரிங் படிக்கிறியா, டாக்டருக்குப் படிக்கிறியா, என்றெல்லாம் எழுப்பப்படும் கேள்விக்கு, "உங்க இஷ்டம்ப்பா" என்பது பதிலானால், அப்படிப் பதில் சொல்கிறவர்கள் தங்களுக்கு சாதகமான முடிவையே எதிர்பார்க்கிறார்கள் என்பது உட்பொருள். அதுமட்டுமல்ல பெற்றோர் பேச்சைக் கேட்டு நடக்கின்ற பிள்ளை மாதிரியும் எடுத்த முடிவுக்கு முழுப்பொறுப்பும் என்கிற மாதிரியும் அவர்களை ஒரு வளையத்தில் மடக்கிப் போட்டுவிடுகிற சாமர்த்தியம் ஆகும் இது.

முக்கியமான எந்த ஒரு முடிவிலும், ஒரு மனைவியோ, தன்னிடத்தில் பணிபுரிகிற ஓர் ஊழியரோ, உதவி கேட்டு வருகிற நண்பரோ, "உங்க இஷ்டம்" என்ற தொடரைப் பயன்படுத்தினால் நாம் உஷாராகி விட வேண்டும்

மாறாக, அகமகிழ்ந்து, "அடடா! என்னே பெருந்தன்மை! இப்போது முடிவு எடுக்கப் போவது நாம் தான்: நாம் எடுக்கும் முடிவுப்படித்தான் இவர்கள் நடக்க வேண்டும். " என்றெல்லாம் மானசீகமாக கழுத்துக்கு மாலையிட்டுக் கொள்ள வேண்டாம் எல்லோரும் நமக்குத் தலைப்பாகை கட்டிவிட்டு விட்டார்கள் என்ற புளகாங்கிதம் அடைந்து விடவும் வேண்டாம்.

உங்க இஷ்டம் என்று சொல்லுகிறவர்கள் எல்லோரும் சாமர்த்தியசாலிகள் . வேறு வகையில் சொல்ல வேண்டும் என்றால் நம்மை வம்பில் மாட்டி விட்டு விடக் கூடியவர்களும் கூட.

இவர்கள் தங்களால் தீர்க்க முடியாத பிரச்சினை மூட்டைகளை நம் தலை மீது ஏற்றுகிறவர்கள். அதேநேரத்தில் நாம் எடுக்கும் முடிவுகளின் விளைவுகள் விபரீதமாகி விடும் போது, நீங்க இந்த முடிவுக்குப் பதில் அந்த முடிவு எடுத்திருந்தால் இப்படி ஆகியிருக்காது; எனக்கு அப்போதே இப்படி நடக்கும்னு தெரியும், என்று கழற்றிக் கொள்கிறவர்கள்.

இப்படிப்பட்டவர்களை எப்படிச் சமாளிப்பது?

உங்க இஷ்டம் என்று இவர்கள் சொன்னதும் , உச்சி குளிர்ந்து விடாமல்

"என் இஷ்டம் இருக்கட்டும்; நீ என்ன நினைக்கிறே, சொல்லு?" என்று பிரச்சினையை ஒரு கிளறு கிளற வேண்டும். அதற்குப் பிறகும் அவர்கள் "என்னாங்க நீங்க ! அதுதான் ஒரு வார்த்தையிலே சொல்லி விட்டேனே உங்க இஷ்டம்னு ! என்னை ஒண்ணும் கேட்காதீங்க!" என்று நழுவுவார்கள்.

விடக்கூடாது!

இப்போது ஒரு புதிய உத்தியைக் கையாள வேண்டும். அவர்களுக்குச் சாதகமாக அல்லது அவர்கள் விருப்பம்படி நாம் எடுக்கக்கூடிய முடிவில் உள்ள பிரச்சினைகளை மலைபோல் பெரிதாக்கிச் சொல்ல ஆரம்பிக்க வேண்டும்.

இப்போது பார்க்க வேண்டுமே, இவர்களை? தங்கள் சுயரூபத்தை இவர்கள் இப்போது பாம்பு தோலுரிக்கிற மாதிரி உரிக்க ஆரம்பிப்பார்கள்.

அதாவது இவ்வளவு நேரம் உங்க இஷ்டம் உங்க இஷ்டம் என்றே சொல்லிக் கொண்டிருந்தவர்கள் தங்கள் இஷ்டம் என்ன என்பதைத்தங்களையும் அறியாமல் வெளிப்படுத்த ஆரம்பிப்பார்கள். புதைபட்டிருந்த அவர்களது எண்ணம் அம்பலமாகிவிடும். அல்லது இதுவரை தெளிவில்லாமல் இருந்தவர்கள் தெளிவு பெற ஆரம்பிப்பார்கள்.

இப்போது நாம் முடிவு எடுப்பது சுலபம். அது மட்டுமல்ல இனி எடுக்கப்படும் முடிவுகளுக்கும் அவற்றின் பின்விளைவுகளுக்கும் இருவருமே பொறுப்பாகி விட முடியும்.

பின் விளைவுகளால் பெருமையோ சிறுமையோ எதுவாக இருந்தாலும் அதைப் பகிர்ந்து ஏற்றுக் கொள்வது தான் சாமர்த்தியம். அதுதான் நமக்குப் பாதுகாப்பும் கூட!

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு 318 மில்.டொலர் கடன் வழங்குகிறது இந்தியா

இலங்கையின்தொடரூந்து துறையை அபிவிருத்தி செய்வதற்காக 318 மில் லியன் டொலரை கடனாக வழங்குவது தொடர்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நேற்று புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

நிதியமைச்சில் நேற்று நடந்த நிகழ்வில், நிதியமைச்சின் செயலர் சமரதுங்கவும், இந்தியாவின் எக்சிம் வங்கி முகாமைத்துவப் பணிப்பாளர் டேவிட் ரஸ்கின்காவும் புரிந்துணர்வு உடன்பாடுகளில் கையெழுத்திட்டனர்.

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, இலங்கையின் தொடரூந்து துறையை அபிவிருத்தி செய்வதற்கு 318 மில்லியன் டொலர் கடன் திட்டத்தை அறிவித்திருந்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியின் மூலம் இலங்கையின் தென்பகுதி மற்றும் வடபகுதி தொடரூந்துப் பாதைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன், இந்தியாவில் இருந்து தொடரூந்துகளும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அதேவேளை, இந்தியா ஏற்கனவே இங்கை தொடரூந்து துறை அபிவிருத்திக்காக 966 மில்லியன் டொலர் பெறுமதியான நான்கு கடன் திட்டங்களை எக்சிம் வங்கி ஊடாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மக்களைப் புகழ்ந்த ஜனாதிபதி



(கொழும்பு)

உலகில் எந்தவொரு நாட்டிலும் காணமுடியாத தியாகமும், மனிதாபிமானமும் இலங்கை மக்களிடையே காணப்படுவதற்கு பௌத்த கோட்பாட்டு பின்னணியிலான சமூக சூழலே காரணமாகுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது அன்பு, கருணை மற்றும் தியாக சிந்தையுடன் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பக் கண்ணீருடன் இணைந்து அவர்களை ஆற்றுப்படுத்துவதற்காக அனைத்து மக்களும் ஓரணியில் திரண்டதற்கு பௌத்த தத்துவத்தின் அடிப்படையிலான உன்னத மனிதாபிமான பண்புகள் இலங்கை மக்களின் இதயங்களில் நிறைந்துள்ளமையே காரணமாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பெந்தர விகாரையில் நிர்மாணிக்கப்பட்ட புத்தபிரானின் திருவுருவச்சிலையை திறந்து வைத்தல் மற்றும் வண. பெந்தர ஜினாநந்த தேரருக்கு சங்கநாயக்கர் பதவியை வழங்கும் நிகழ்வு ஆகியவற்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சூழலை மோசமாகப் பேணிய நபர்களுக்கு அபராதம் விதிப்பு

(கொழும்பு)

மாத்தளை பிரதேசத்தில் சுற்றாடலை அசுத்தமாக வைத்து டெங்கு நுளம்புகள் பரவ காரணமாகவிருந்த 141 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் மூலம் சுமார் 2,28,000 ரூபா அபராதமாக நீதிமன்றங்கள் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளதாக மாத்தளை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஐ.பி.டி. சுகதபால தெரிவித்தார்.

கடந்த ஐந்து மாதங்களாக மாத்தளை பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் மூலம் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் போதே டெங்கு நுளம்பு பரவக் காரணமாகவிருந்த 141 பேர் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாத்தளை மாவட்ட அரசாங்க அதிபர் டி.ஜி. குமார சிறி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த போதே அவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

இதுபோன்ற திடீர் பரிசோதனைகள் தொடர்ந்தும் இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் இங்கு சுட்டிக் காட்டினார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி.பா: 50<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/6426 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர்<br>தொ.இ: G/6491 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா: 24 செவ் 2 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: BSc/உதவி பொறியியலாளர் கொங்கொங்<br>தொ.இ: B/6431 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா: 39 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: தனியார் தொழில் கொலண்ட் PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6492 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6434 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/Lலண்டன் PR<br>தொ.இ: G/6495 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா: 77 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L/பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>தொ.இ: B/6435 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி.பா: 9செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/6535 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## இராமநாதன் நுண்கலைக்கழகம்

### இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் - 2015

இசை- முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருடம்

சித்திரமும் வடிவமைப்பும் - முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருடம்

நடனம்- இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருடம்

♦இரண்டாம் அரையாண்டு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட நுண்கலைமாணிப்பட்ட இசைத்துறை மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் அலகு மாணவர்களிடமிருந்தும் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட நுண்கலைமாணிப்பட்ட நடனத்துறை மாணவர்களிடமிருந்தும் 09/06/2017 ஆம் திகதி முதல் ஏற்றுக் கொள்ளப்படும்.

♦மாணவர்கள் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் நிர்வாக அலுவலகத்திலிருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

♦பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 20/06/2017 ஆம் திகதிக்கு முன்பாக இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

♦மீள் பரீட்சார்த்திகளும், மருத்துவ சான்றிதழ் சமர்ப்பித்து ஏற்றுக் கொள்ளப்பட்டோரும், பரீட்சைப் பெறுபேறினை தரமுயர்த்துவதற்கு விண்ணப்பித்தோரும் ஒவ்வொரு பாட அலகிற்கும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 250 வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ அல்லது சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.

♦முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பித்த நடனத்துறை மாணவர்கள் தமது பரீட்சைக்குரிய பரீட்சை அனுமதி அட்டைகளை இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் நிர்வாக அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
06/06/2017

(இ-8746)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

வெளிவாரிப் பரீட்சைகள்

கலைமுதற் தேர்வு - 2014 (இறுதிச் சந்தர்ப்பம்)

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைகளுக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 300/= க்கான காசுக் கட்டளை, தமது கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா 70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 14.06.2017 (புதன்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
06.06.2017

(இ-8747)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் கறுப்புக்கொடி கட்டி பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்




கறுப்புக் கொடி கட்டி, பந்தல் அமைத்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தீர்வு கிடைக்கும் வரை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நேற்றுப் புதன்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை சரியான நேரத்தில் நிறைவு செய்ய வேண்டும் மற்றும் பல்கலைக்கழக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரீ.வி கமராக்கள் உடனடியாக அகற்றப்படல் வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து அப் பல்கலைக்கழக மாணவர்கள் பாரிய இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் விடுதி பகுதியிலிருந்து புறப்பட்டு பிரதான வீதியோரம் நின்று தமது கோஷங்களை எழுப்பினர். அதனையடுத்து நிர்வாகக் கட்டடத்தை முற்றுகையிட்டு கோஷமிட்டனர்.

“குறிப்பட்ட கால எல்லைக்குள் பட்டப்படிப்பினை பூர்த்தியாக்கு. மஹாபொல புல்மைப்பரிசில் பிரச்சினையை உடனே நிவர்த்தி செய், பொய்யான தீர்வுகள் வேண்டாம் விடுதிப் பிரச்சினையை உடனடியாக நிவர்த்தி செய். அசாதாரணமான வகுப்புத் தடையை நீக்கு. மாணவர்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் சி.சி.ரி.வி கமராக்களை உடனே அகற்று போன்ற இன்னும் பல கோரிக்கைகளை முன்வைத்தே மாணவர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இங்கு மாணவர்கள் கருத்து தெரிவிக்கையில் - கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நான்கு வருடங்களில் நிறைவு செய்யவேண்டிய பட்டப்படிப்பு ஆறு வருடங்களில் நிறைவடைவதால் இரண்டு ஆண்டுகள் மேலதிகமாக வீணான கால இழுத்தடிப்பு இடம்பெறுகிறது.

உரிய நேரத்தில் பரீட்சைகள் நடைபெற்று பெறுபேறுகளை வெளியிடுவதன் மூலம் நான்கு வருடங்களில் பட்டப்படிப்பினை மாணவர்கள் பூர்த்தி செய்ய முடியும்.

சி.சி.ரீ.வி கமராக்கள் மூலம் மாணவர்கள் அவதானிக்கப்படுவதனால் எமக்கு போதுமான சுதந்திரம் இல்லை.

மாணவர்கள் நியாயமற்ற முறையில் இடைநிறுத்தப்படுகிறார்கள் என்றும் நிர்வாகம் மாணவர்களை பழி வாங்கும் நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும்” என்றும் கூறினார்.

இதே கோரிக்கைகளை முன்வைத்து கடந்த வாரமும் 30.05.2017 மாணவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் திரண்டு பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-3)

## அரிசியில் கலந்த போத்தல் துகள்கள்! தாயும் பிள்ளைகளும் இரத்த வாந்தி

(கொழும்பு)

வீட்டில் இரவு சமைத்த உணவினை உட்கொண்ட தாயும், இரு பிள்ளைகளும் இரத்த வாந்தி எடுத்துள்ளனர். இதனையடுத்து அவர்கள் கதிர்காமம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கதிர்காமத்தை அண்மித்த கிராமமொன்றில் வசித்து வந்த மூவரே, இவ்வாறு கதிர்காமம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இச்சம்பவம் கடந்த 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் நோய்வாய்ப்பட்டிருப்பவர்கள் உண்ட உணவின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டபோது, அவ் உணவில் உடைந்த போத்தலின் துகள்கள் கலக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதையடுத்து, கடையில் கொள்வனவு செய்த அரிசியின் ஒரு பகுதி வீட்டிலிருக்கும் போது, அதனை பரிசீலிக்கையில், அவ் அரிசியிலும் உடைந்த போத்தல் துகள்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டன. சமைத்த உணவிலும் அதே போத்தல் துகள்கள் காணப்பட்டன. இது குறித்து, கதிர்காமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உபாலி காரியவசமிடம் புகார் செய்யவே, அரிசியை விற்பனை செய்த கடை உரிமையாளரை கைது செய்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

## அரச அலுவலர்களுக்கான அரசகரும மொழித்தேர்ச்சி

கடந்த 2007.07.01ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது தேர்ச்சி அடிப்படையில் பதவியுயர்வு பெற்று 2017.01.31 ஆம் திகதி 50 வயதினை பூர்த்தியடைந்த அல்லது 2007.07.01 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலர்கள் தாம் புதிதாக நியமனம் பெற்ற உயர் பதவிக்கு உரிய அடுத்த அரச கரும மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்வது தொடர்பாக தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்ட பாடவிதானத்துக்கு அமைய நடத்தப்படும் 100 மணித்தியால மொழிப் பயிற்சி பாடநெறியில் கலந்து கொள்வது மாத்திரம் போதுமானதாகும்.

ஆரம்ப வகுதியின் அனைத்து அலுவலர்கள் தொடர்பாகவும் அடுத்த அரசகரும மொழித் தேர்ச்சி மட்டமான 4 ஆம் வகுதி சித்தியடைய வேண்டியது அவசியமில்லை என்பதுடன் தொடர்பாக தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்ட பாடவிதானத்துக்கு அமைய நடத்தப்படும் 50 மணித்தியால மொழிப் பயிற்சி பாடநெறியில் கலந்து கொள்வது மாத்திரம் போதுமானதாகும் என அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

இச் சுற்றறிக்கை 2017.01.31 ஆம் திகதியிலிருந்து வலுவிருக்கும்.

இச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட ஏற்பாடுகள் தவிர அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதற்குத் திருத்தமாக வெளியிடப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளிலும் குறிப்பிட்ட நிபந்தனைகளும் ஏற்பாடுகளும் மேலும் மாற்றமுறாது அமுலிலிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-102)

## பாதுகாப்புத் தரப்பு பதவிகளில் மாற்றம்

கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியாக கடமையாற்றி வரும் எயார் சீப் மார்ஷல் கோலித குணதிலக்க எதிர்வரும் 15ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளதால், பாதுகாப்பு பிரிவுகள் சிலவற்றின் பிரதான பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதி விரும்பினால், கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி கோலித குணதிலக்கவுக்கும் இரண்டு தடவைகள் பணிநீடிப்பு வழங்க முடியும்.என்றாலும் ஓய்வு பெற்ற பின்னர் குணதிலக்கவுக்கும் வெளிநாட்டு தூதுவர் பதவி வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத்தின் தகவல்கள் கூறுகின்றன.

குணதிலக்க வெளிநாட்டு தூதுவராக நியமிக்கப்பட்டால், முப்படை தளபதிகளில் ஒருவர் கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்படலாம்.

முப்படை தளபதிகளில் சிரேஷ்ட தர அடிப்படையில், தற்போது இராணுவ தளபதியாக கடமையாற்றி வரும் லெப்டினட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட வாய்ப்புள்ளது. கிரிஷாந்த டி சில்வா கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி பதவிக்கு தகுதியானவராக இருந்தாலும் அவருக்கு ஏற்கனவே இராணுவ தளபதி பதவியில் இரண்டு முறை பணிநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கிரிஷாந்த டி சில்வா கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டால், அடுத்த இராணுவ தளபதியாக மேஜர் ஜெனரல் மஹேஸ் சேனாநாயக்க நியமிக்கப்படலாம் என அத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-7)

## ஐ.நா.பொதுச் செயலாளருடன் பிரதமர் ரணில் விசேட சந்திப்பு



அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் காலை ஐ.நா. பொது ச் செயலர் அன்ரனியோ குர்ரெரெசைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஐ.நா சமுத்திரவியல் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் இலங்கைப் பிரதமரும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்த மாநாட்டின் பக்க நிகழ்வாக, ஐ.நா பொதுச்செயலர் அன்ரனியோ குர்ரெரெசைச் சந்தித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தினார்.

ஐ.நா.பொதுச்செயலராக அன்ரனியோ குர்ரெரெஸ் கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்ற பின்னர், இலங்கை தலைவர் ஒருவர் அவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருப்பது இதுவே முதல் தடவையாகும். (இ-7)

## அனர்த்தத்தால் 600 மில்லியன் நட்டம்

(கொழும்பு)

வெள்ள நிலைமை மற்றும் மண்சரிவு காரணமாக தேயிலை துறைக்கு சுமார் 600 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேயிலை ஆணையாளர் ஜெயந்த எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அனர்த்தம் காரணமாக 26 தேயிலை தொழிற்சாலைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதோடு அவற்றில் 14 முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், இதனால் தேயிலை ஏற்றுமதியும் சில சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அனர்த்த நிலை காரணமாக பாதிக்கப்பட்ட சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு மானியம் வழங்குவது குறித்து அவதானம் செலுத்தியுள்ளதாக, பிரதியமைச்சர் லக்ஷ்மன் வசந்த பெரேரா தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக்கலவரத்தினை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது!

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

முஸ்லிம்-சிங்கள இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து இனக்கலவரங்களை ஏற்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெனீவா மனித உரிமைப் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,



"சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல் சம்பவங்களை இந்த அரசாங்கம் கண்டுகொள்ளாமல் இருப்பதுடன், அதற்குக் காரணமானவர்களைக் கைது செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. அரசாங்கம் மறைமுகமாக தமது சில நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இவ்வாறான சம்பவங்களை ஏற்படுத்தி வருவதுடன், குறிப்பாக முஸ்லிம் இனத்தவரின் மதவழிபாட்டு தலங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் திட்டமிட்டே நடத்தப்படுகின்றன" என விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## தேவை என்றால் கட்டாரிலுள்ள இலங்கையர்கள் நாடு திரும்பலாம்

### அமைச்சர் தலதா அறிவிப்பு

தேவை என்றால் கட்டார் வாழ் இலங்கையர்கள் நாடு திரும்ப முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

கட்டாரில் தற்போது ஏற்பட்டுள்ள இராஜதந்திர மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமையினால் இலங்கையர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என குறிப்பிட்டுள்ள அவர் என்னினும், இலங்கையர்கள் எவரேனும் கட்டாரிலிருந்து நாடு திரும்ப விரும்பினால் அவர்களுக்கு தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என தெரிவித்தார்.

கட்டாரில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்திற்கு சென்று தேவையான ஏற்பாடுகளை செய்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். கட்டாரில் சுமார் ஒரு இலட்சத்து 40ஆயிரம் இலங்கையர்கள் பணிகளில் ஈடுபட்டு வருவதாக தலதா அத்துகோரள மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு தென்கொரிய நடிகை நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்கள் காரணமாக உயிரிழந்த மற்றும் இடம் பெயர்ந்த மக்களுக்காக தென் கொரியாவை சேர்ந்த பிரபல தொலைக்காட்சி நடிகை லீ யங் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பு செய்துள்ளார்.

இலங்கையில் வெள்ளம் மற்றும் மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது கவலைகளை வெளியிட்டுள்ள லீ யங், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக 56 இலட்சம் கொரிய வொன்களை வழங்கியுள்ளார்.

இந்த நடிகை நடித்த தொலைக்காட்சி நாடகம் சுஜாதா தியனிய என்ற பெயரில் சிங்களத்தில் மொழிப்பெயர்க்கப்பட்டு இலங்கையில் ஒளிப்பரப்பாகிவருகிறது. சங்கும் என்ற பிரதான பாத்திரத்தில் இந்த நடிகை அதில் நடித்துள்ளார்.

இந்த நிதியுதவியை தென் கொரியாவின் சியோல் நகரில் உள்ள இலங்கைத் தூதரகத்தில், கொரிய நிதியத்தின் தலை லீ சியோங்க் தூதரக அதிகாரி ஒருவரிடம் கையளித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1096

Search for people, places and things | Nagendram | Home

**லதா**




**தயாளன்**

ஆபத்துக்கு உதவாத
நண்பன்
அவசரத்திற்கு உதவாத
சொந்தம்
பசிக்கு உதவாத உணவு
தேவைக்கு உதவாத பணம்
இருந்தும் பயனில்லை!

**லலிதா**




**புஸ்பா**




**மதன்**




**சுகிர்தா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு- ஒரு பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்


தமிழ்நாட்டின் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் தமிழக பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனியார்துறைப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் முக்கியத்துவம் பெற்றன. இவ்விரு பிரிவு நிறுவனங்களுக்கு அப்பால் மத்திய அரசு கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டின் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றது. மேலும் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து நடத்தும் பல்கலைக்கழகங்களும் ஆராய்ச்சி நிறுவனங்களும் உண்டு. மாநிலங்களில் உள்ள மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் உள்ள அரைவாசி மாநிலத்திற்கும் மிகுதி அரைவாசி இடங்கள் ஏனைய மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படும். சில சமயம் மத்திய பல்கலைக்கழகம் அல்லது ஒரு நிறுவனம் இன்னென்ன மாநிலங்களுக்கு உரியது என்றும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு இடங்கள் என்றும் குறிப்பிடுவர்.

மாணவர்களின் இடப்பங்கீடு மாத்திரமல்லாமல் விரிவுரையாளர் எண்ணிக்கைமாநிலங்களுக்கிடையே பங்கீடு செய்யப்படுவதுடன் மேலும் பட்டியலிடப்பட்ட சாதிப்பிரிவினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழம் குடி மக்களுக்கு எவ்வளவு எண்ணிக்கைக்கு உரித்தானவர்கள் எனக் குறிப்பிடப்படும்.

சென்னையில் இருக்கும் மிக உயர்வாகக் கணிப்பிடும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் ஆரம்பத்தில் (IIT) தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளா, தெலுங்கானா, பாண்டிச்சேரி, அந்தமான், நிக்கோபார் மற்றும் லக்ச தீவுகளுக்குப் பொதுவானது. தற்பொழுது ஆந்திராவில் திருப்பதி, தெலுங்கானாவில் ஐதராபாத், கேரளாவில் பாலக்காடு ஆகிய இடங்களில் புதிய IIT நிறுவனங்கள் அமைக்கப்பட்டதால் தற்பொழுது சென்னையில் இருக்கும் IIT அனுமதியில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிறுவனத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்கள் இந்த நிறுவனத்திற்குள் இருக்கும் மாநிலங்களுக்கும் மத்திய அரசுப் பரப்புகளுக்கிடையே பகிரப்படும். மாணவர்களின் அனுமதி மாநிலங்களின் குடித்தொகை மற்றும் பட்டியலிடப்பட்ட சாதிப்பிரிவு பட்டியலிடப்பட்ட பழங்குடி மக்கள் எண்ணிக்கை விகிதாசாரம் ஆகியன அடிப்படையாக இருக்கும்.

மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் இடவமைவுக் கொள்கை சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டவை. மாநிலங்களிடையே மத்திய அரசு கல்வி- ஆராய்ச்சி நிறுவனங்களை சமமாக நிறுவுதல் மற்றும் குறித்த மாநிலத்தின் பொருளாதாரம் மற்றும் தொழிற்பண்புகளை அடிப்படையாகக் கொண்டும் அங்கு காணப்படும் நிலைமை, சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஆராய்ச்சி நிறுவனங்களை நிறுவுதல். மேலும் அரசியல் காரணங்களும் மத்திய கல்வி ஆராய்ச்சி நிறுவனங்களின் இடவமைவில் செல்வாக்குச் செலுத்தலாம். இந்தியாவில் ஆரம்பத்தில் முதல் ஐந்து IIT நிறுவிய பொழுது இந்தியாவின் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என நோக்கி தெற்கு IIT தெற்கின் பெரிய நகரான சென்னையில் நிறுவினர். IIT ஒன்று சென்னையில் நிறுவப் பட்ட பொழுதும் இது தென் மாநிலங்களுக்கும் மத்திய பரப்புக்களுக்கும் (Union Territories) பொதுவானதாக இருந்தது. தற்பொழுது திருப் பதி, ஐதராபாத், பாலக்காட்டில் புதிய IIT நிறுவப்பட்டுள்ளன.




சென்னையில் மத்திய அரசின் தோல் ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் தோல் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கின்றதுடன் தோல் பொருட்கள் உற்பத்தி ஏற்றுமதி மிகவும் கூடிய பங்கை வகிக்கின்றது. இச் சூழ்நிலையில் தோல் ஆராய்ச்சி மையம் தமிழ்நாட்டில் அமைக்கப்பட பல நியாயங்கள் காணப்பட்டன. தோல் உற்பத்தி, தோற்பொருட்கள் செய்யப்படும் இடத்தில் அதற்குரிய ஆராய்ச்சி நிலையம் அமைவதால் இத் தொழிலை மேம்படுத்துவதுடன் தமிழ் நாட்டின் பொருளாதாரம் மேம்பட வழிவகுக்கும்.

தமிழ்நாடு கைத்தறி நெசவில் இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு மத்திய அரசாங்கம் இந்திய கைத்தறி நெசவு நிறுவனத்தை சேலத்தில் அமைத்துள்ளது. இதேபோல் சர்தார் பட்டேல் சர்வதேச நெசவு தொழில் மற்றும் முகாமைத்துவப்பள்ளி (Sardar Patel International School of Textiles and Management) கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ளது. கோயம்புத்தூரை நெசவுத் தொழிலுக்கு இந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது. கோயம்புத்தூரில் இந்நிறுவனம் அமையப் பெற்றது சரியானதாகும். இதுபோல பல மத்திய அரசின் ஆராய்ச்சி நிறுவனங்களின் இடவமைவுகள், இடவமைவுக் காரணங்களை அடிப்படையானதாக இருக்கின்றன.

தமிழ்நாட்டில் திருவாரூரில் மத்திய பல்கலைக் கழகம் (CUTN) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுக்கு ஒரு மத்திய பல்கலைக் கழகம் ஒன்று கிடைப்பதற்கும் அதனைத் திருவாரூரில் அமையப் பெற்றதற்கும் முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி முக்கிய காரணமாக இருந்தார் என்றால் மிகையாகாது. தமிழகத்தில் அன்று தி.மு.க. ஆட்சியும் மத்தியில் காங்கிரஸ்- தி.மு.க.ஆட்சியும் நடைபெற்றன. திருவாரூர் கலைஞரின் பிறப்பிடமாகவும் இவர் தனது மாநில அரசியல் நடவடிக்கையை சென்னை நகரிலிருந்து திருவாரூருக்கு மாற்றெடுத்த பின்புலமே திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம் இடவமைவு பெற்றதற்குப் பின்புலக் காரணம் எனலாம்.

இதுபோல வீதிகள், துறைமுகங்களுக்குப் பொறுப்பாக இருந்த திரு. ரி.ஆர்.பாலு தமிழ்நாட்டில் கடல் சார் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க விரும்பியதால்தான் இப் பல்கலைக்கழகம் சென்னையில் அமையப் பெற்றது. இது சென்னையில் அமைக்கப்படுவதற்கு லோக் சபையில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதை மும்பையில் அமைக்குமாறு ஒரு பிரிவினரும் கொல்கத்தாவில் அமைக்குமாறு இன்னொரு பிரிவினரும் வேண்டி நின்றனர். ஆனால் அன்று மத்திய அரசில் தி.மு.க. அங்கம் வகித்ததால் எதிர்ப்பைச் சமாளித்து சென்னையில் கடல்சார் பல்கலைக்கழகம் அமையப் பெற்றது. இதுபோல திருச்சியில் அமையப் பெற்ற இந்திய முகாமைத்துவ நிறுவனம் கூட மாநிலத்தில் தி.மு.க. ஆட்சியில் இருந்ததும் மத்திய ஆட்சியில் பங்காளியாக இருந்த தி.மு.கவின் அழுத்தம் காரணமாகவே திருச்சியில் நிறுவப்பட்டது.

இளைஞர் மேம்பாட்டுக்கான ராஜீவ் காந்தி தேசிய நிறுவனம், தமிழ்நாட்டில் ஸ்ரீ பெரும்புதூர் அமைக்கப்பட்டதற்கு முக்கிய காரணம் இவ்விடத்திலேயே இவர் அகால மரணமடைந்தவர். இவரது நினைவு மக்கள் மத்தியில் என்றும் இருப்பதற்காக இவர் அகால மடைந்த இடத்தில் இந்நிறுவனத்தை நிறுவினர் எனக் கொள்ளலாம்.

தமிழ் நாட்டில் திண்டுக்கல்லில் காந்தி கிராம நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு சில காந்தியவாதிகளின் கடின முயற்சியாலும் கடும் அர்ப்பணிப்பாலும் நிறுவி வளர்க்கப்பட்டு மத்திய அரசின் நிறுவனமாகியது. இந்த நிறுவனத்தின் பிரதான இலட்சியம் காந்தியின் கொள்கைகள், விழுமியங்கள், கிராம அபிவிருத்தி, தற்சார்புப் பொருளாதாரம் போன்றவற்றை முன்னெடுப்பது.

தமிழ் நாட்டில் இருக்கும் மத்திய அரசு பல்கலைக்கழகங்கள், உயர் ஆராய்ச்சி நிறுவனங்கள்

1. பாரதிதாசன் முகாமைத்துவ நிறுவனம்–திருச்சி

2. உவர் நீர் வாழ் செடி, உயிரின வளர்ப்பு மத்திய நிறுவனம் ( Central Institute of Brackish Water Aquaculture)

3. மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை.

4. பயிர் பதப்படுத்தல் மற்றும் பயிர் ஆராய்ச்சி இந்திய நிறுவனம் தஞ்சாவூர்

5. காந்தி கிராமம் கிராமிய நிறுவனம் திண்டுக்கல்

6. திருவாரூர் மத்திய பல்கலைக் கழகம் திருவாரூர்

7. இந்திய முகாமைத்துவ நிறுவனம் திருச்சி

இந்தியதொழில் நுட்ப நிறுவனம் (IIT)சென்னை

இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனம் சேலம்

வடிவமைப்பு உற்பத்திக்கான தகவல் தொழில்நுட்ப இந்திய நிறுவனம் சென்னை.

தேசிய தொழில் நுட்ப நிறுவனம் சென்னை, நவநாகரிக தொழில் நுட்ப நிறுவனம் சென்னை, தமிழ் நாடு சட்டக் கல்லூரி திருச்சி ,சர்தார் பட்டேல் சர்வதேச நெசவுத் தொழில் மற்றும் முகாமைத்துவப் பள்ளி கோயம்புத்தூர்.

மேற்குறித்த மத்திய நிறுவனங்கள் தமிழ் நாட்டில் அமைந்துள்ளன. இந் நிறுவனங்களில் கற்றல் செயற்பாட்டில் 50 வீதமான இடங்கள் தமிழ் நாட்டுக்குப் பொதுவில் கிடைக்கும் அல்லது எவ்வளவு விகிதம் என்பது முன்னரே தீர்மானிக்கப்படும். தமிழ் நாட்டிலுள்ள மத்திய ஆராய்ச்சி நிலையங்கள் கூடுதலாக மாநில பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முறை காணப்படுகின்றது.

மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து நடத்தும் உயர் கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் மத்திய மாநில அரசுகள் இணைந்து நடத்தும் எட்டு நிறுவனங்கள் இருப்பதாக அறியப்படுகின்றது. தமிழ் நாட்டில் இருக்கின்ற அபிவிருத்தி கற்கைகள் மையம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

1.Anna Institute of Management Chennai

2.Central Electro Chemi cal Research Institute (autonomous) Karaikudi Sivagangai

3.Central Institute of Plastics Engineering and Technology (India) Chennai

4. Chennai Mathematical Institute (Deemed) Chennai

5.Institute of Mathematical Sciences Chennai

6.Indian Maritime UniversityChennai

7.Madras Institute of Development Studies (MIDS) (autonomous) Chennai

8.Tamil Virtual Academy (Tamil Nadu)

தமிழ் நாட்டில் மத்திய அரசின் பாதுகாப்புதுறைகல்விநிறுவனங்கள் இருக்கின்றன. இக் கல்வி பயிற்சி நிறுவனங்கள் இருக்கின்றன. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னையில் அமைந்திருக்கும் அபிவிருத்திக் கற்கை நெறிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டில் மத்திய அரசின் பாதுகாப்புத் துறைக் கல்வி/பயிற்சி நிறுவனங்கள் மத்திய அரசாலே நடத்தப்படுகின்றன.

தமிழ் நாட்டில் உயர் கல்வித் துறையில் மாநில அரசும் தனியார் துறையும் மத்திய அரசும் மாநில மத்திய அரசுகள் இணைந்தும் பெரும் பங்காற்றுகின்றன. தமிழ் நாட்டில் 1980 களுக்குப் பின்னர் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையும் இணைந்த கல்லூரிகளின் எண்ணிக்கையும் பெரியளவில் அதிகரித்ததுடன் முன்னர் சென்னை, மதுரை, கோயம்புத் தூர், திருச்சி ஆகிய நகர்களில் காணப்பட்ட கல்லூரிகள் இன்று தமிழ்நாடு முழுவதும் பரவிக் காணப் படுகின்றன. 10+2 கற்கும் மாணவர்கள் பல்கலைக் கல்வியை இலகு வாகத் தொடர முடியும். விருப்ப மான கற்கை நெறி, விருப்பமான பல்கலைக்கழகம், கல்லூரியைத் தெரிவதில் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் பல்கலைக்கழக அனுமதி இன்று மிகவும் விரிவாக்கப்பட்டுள்ளதுடன் பல் வகைப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார கைத்தொழில் வளர்ச்சி ஏற்ற பல்கலைக்கழகங்கள் அமையப் பெற்று ள்ளன.

தமிழ் நாட்டில் குறிப்பாக இணைந்த கல்லூரிகளுக்கிடையே தர நிலையில் பெரியளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக பெரும் எண்ணிக்கையான அரச/ கலை மானிடவியல் கல்லூரிகள் மிகக் குறைந்த வசதிகளுடன் இயங்குவதைக் காணலாம்.

தமிழ் மொழி மூலம் கற்பிக்கும் கல்லூரிகள் மிகக் கூடுதலான பிரச்சினைகளை எதிர் கொள்கின்றன. கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் இடையே கல்வித் தகைமைகள் மற்றும் நிபந்தனைகளிலும் வேறுபாடுகள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் தி.மு. க. ஆட்சியில் (2006-2010) இராசதானிக் கல்லூரி, இராணி மேரிக் கல்லூரி, கும்பகோணம் கோயம்புத்தூரில் இருக்கும் பழைய அரசுக் கல்லூரிகளுக்கு பல்கலைக் கழக அந்தஸ்து வழங்க முற்பட்ட பொழுது இக் கல்லூரிகளின் விரிவுரையாளர்களின் எதிர்ப்பால் இந் நடவடிக்கையை மாநில அரசு கைவிட்டது.

தமிழ் நாட்டு அரசு பல்கலைக் கழகங்கள் இணைந்த கல்லூரிகளில் பெருமளவு விரிவுரையாளர்கள் பதவி வெற்றிடமாக இருப்பதைக் காணலாம். விரிவுரையாளர் பதவிகளும் சாதி அடிப்படையில் கோட்டா முறையில் ஒதுக்கப்படுகின்றன. இதனால் பதவிகளுக்கு சரியான சாதிப்பிரிவைச் சேர்ந்தவர் கிடைக்கும் வரை பதவிகள் நிரப்பப்படாது இருப்பதால் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

தமிழ் நாட்டு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் திராவிட கட்சிகளின் செல்வாக்காலும் பெரியார் இராமசாமி நாயக்கரின் சமூக நீதிக் கருத்துக்கள் மற்றும் இடதுசாரி கட்சிகளின் செல்வாக்கால் சமூக நீதி விழுமியங்கள், கருத்துக்கள் போன்றவற்றை முன்னெடுத்தாலும் இத்துறையில் இன்றும் பெரும் முன்னேற்றம் காண வேண்டி இருக்கின்றது. பட்டியலில் இடம்பெற்ற சாதி பிரிவு மாணவர்கள், பட்டியலில் இடம்பெற்ற பழங்குடியைச் சேர்ந்த மாணவர்கள் பல இடங்களில் அவர்களுக்கு என்று அமைக்கப்பட்ட விடுதிகளில் இருப்பது ஏற்புடையதல்ல. பல்கலைக்கழகங்களில் சமூக நீதி, மனிதநேயம் மேம்பட வேண்டியுள்ளன. தமிழ் நாட்டின் உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே காணப்படும் தர வேறுபாடு குறைக்கப்பட்டும் சகல மாணவர்கள் மத்தியிலும் சமூக நீதி விழுமியங்கள் மேம்படுத்தப்படும் இடத்து தமிழ் நாட்டின் உயர் கல்வி மேலும் வளர்ச்சி பெற்று சர்வதேச தரத்துக்கு நிகராக விளங்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். (தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு வெளிநாட்டு சக்திக்கும் இலங்கை அடிபணியவில்லை

## அமைச்சர் எரான் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச சமூகத்திற்கோ அல்லது வேறு எந்த வெளிநாட்டு சக்திகளுக்கோ நாடு அடிபணியவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.



ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை குறித்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விசேட விவாதம் இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன, இலங்கை சர்வதேச நாடுகளுக்கோ, ஏனைய வெளிநாட்டுச் சக்திகளுக்கோ அடிபணியவில்லை என்று தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளுக்கு அடிபணிவது என்பதும் சர்வதேச நாடுகளுக்கான கதவுகளை திறப்பது' என்பதும் வித்தியாசமான விடயங்களாகும். கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக நாட்டின் இறைமைக்கு பாதிப்பு ஏற்பட்டது.

எனினும், தற்போதைய அரசாங்கம் மீண்டும் நாட்டில் இறைமையை ஏற்படுத்தியிருப்பதாக இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நாட்டிற்கு பாதகம் இல்லாத வகையில் செயற்பட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன் இதன்போது குறிப்பிட்டார்.

கடந்த அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை நாட்டிற்கு பாதகமாக அமைந்திருந்ததென அமைச்சர் மகிந்த சமரசிங்க சுட்டிக் காட்டினார்.

அனைத்து நாடுகளுடனும் ஒரேவிதமாக நடந்து கொண்டால் சிக்கல் ஏற்படப் போவதில்லை. அதனை புரிந்து கொண்டு ஜனாதிபதி அனைத்து நாடுகளுடனும் கூட்டிணைந்து செயற்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அதிவேக வீதிகள் குறித்து குற்றம் சாட்டும் அருகதை சம்பிக்கவுக்கு இல்லையாம்

### கம்மன்பில கூறுகிறார்



அதிவேக வீதிகள் நிர்மாணிக்கப்பட்டதால் சுற்றாடலுக்கு சேதம் ஏற்பட்டிருந்தால், அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய மூன்று சுற்றாடல் அமைச்சர்களும் தற்போதைய அரசாங்கத்திலேயே அங்கம் வகிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக குற்றச்சாட்டை சுமத்தும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தனது விரலை தன்னை நோக்கியே சுட்டிக்காட்ட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, கம்மன்பில மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

பொறியியலாளர் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர் எனக் கூறிக்கொள்ளும் அமைச்சர் ரணவக்க, தெற்கு அதிவேக வீதி நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாகவே தெற்கில் வெள்ளம் ஏற்பட்டதாக ஆச்சரியமான தகவல் ஒன்றைக் கூறியுள்ளார்.

அவரது இந்த கூற்று அவர் உண்மையிலேயே பொறியியலாளரா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது எனவும் கம்மன்பில இதன்போது தெரிவித்துள்ளார். (இ)

## பயன்படுத்தப்படாத நிலையில் சந்தையிலுள்ள மலசலகூடங்கள்

(வரணி)

சாவகச்சேரிப் பிரதேச சபைக்குட்பட்ட வரணிப் பொதுச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மலசலகூடங்கள் கடந்த சில வருடங்களாக பராமரிப்பின்றிக் காணப்படுகின்றன. இதனால் சந்தைக்கு வந்து செல்லும் பொதுமக்கள், வியாபாரிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் எனவே பொதுமக்கள், வியாபாரிகள் பயன்படுத்தும் வரணிப் பொதுச் சந்தையின் மலசலகூடத்தை உரிய வகையில் புனரமைத்து நீர் வசதியை ஏற்படுத்த பராமரிப்பதற்கான நடவடிக்கையினை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-103)

## 10மில்.பெறுமதியான மாணிக்கக்கல் மீட்பு

### இளைஞர் கைது

10 மில்லியன் ரூபா பெறுமதிக்க மாணிக்கக்கல்லை (Ruby), கடத்த முற்பட்ட பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினர் இந்த மாணிக்கக்கல்லை மீட்டுள்ளனர்.

சந்தேகநபரான 23 வயது இளைஞர் அபுதாபி செல்ல முற்பட்டதாக தெரியவந்துள்ளது. மேலும் இவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும், மாணிக்கக்கல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்க பிரதிப் பணிப்பாளர் பராகிரம பஸ்நாயக்க தெரிவித்தார். (இ-7)

## வாக்காளர் இடாப்பு மீள் திருத்தப் பணி

மாசேரி வரணி கிராம சேவையாளர் பிரிவில் இவ் வருடத்திற்கான வாக்காளர் இடாப்பு மீள் திருத்த நடவடிக்கை கிராம சேவையாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வாக்காளர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட பின்பு மீளவும் பெறப்படுகின்றது.

இதன்போது 18 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் வாக்காளராக பதிவு செய்யப்பட்டுள்ளனர். வெளியிடங்களுக்கு சென்றவர்கள் உடனடியாக தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தருமாறு கிராம சேவையாளர் கேட்டுள்ளார். (இ-5-103)

## மடிக்கணனிக்குள் மறைத்து தங்கம் கடத்தியவர் கைது



இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு விமானம் மூலம் தங்கத்தைக் கடத்திச் செல்ல முற்பட்ட ஒருவர் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

மடிக்கணனிக்குள் மறைத்து வைத்து 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கத்தினைக் கடத்திச் செல்ல முற்பட்ட போது மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)







யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய புத்தாண்டு விழா கடந்த 3ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு லயன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் சமூக சேவையாளர்களுக்கு விருது வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

# மூக்குத்தி!



சீகந்தபுரி என்ற ஊரில் வட்டிக் கடை வைத்து நடத்தி னான் வேணு. அவரது மனைவி வச்சலா சிறந்த குணவதி. வேணு பேராசை பிடித்தவன். அநியாய வட்டி வாங்கினான். தர்மவானான தந்தை முன்பு செய்து வந்த அன்னதானத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

"பூ, கற்பூரம், ஊதுபத்தி, சாம்பிராணி, இதெல்லாம் தண்டச் செலவு என்று கூறி தெய்வ வழிபாட்டை நிறுத்தி னான். கணவனை எதிர்க்க முடியாத வச்சலா மௌன மாக கண்ணீர் உகுப்பாள்.

மூக்குத்தி! ஒருநாள் வட்டிக் கடைக்காரர் வேணு வீடு எது?" என்று விசாரித்தப் படியே வந்தார், ஒரு பெரிய வர்.

அவரிடம் "யாசகமா?" என்று இகழ்ச்சியாகக் கேட்டார் வேணு.

"ஆயிரம் வராகன் வேண் டும். என் பிள்ளைக்குக் கல்யா ணம் வைத்திருக்கிறேன்," என்று பணிவோடு கேட்டார் பெரியவர்.

"ஏனய்யா, சொத்து பத்து இல்லாத நீர் எதற்காகப் பிள்ளைக்கு கல்யாணம் பண்ண வேண்டும்? கோவி லுக்கு சென்றீர்களானால் சுவாமிக்குப் போட்ட மாலையைப் தருவாரகள். அதையே உன் மகனிடம் கொடுத்து சன்னதியிலேயே மாலை மாற்றி, ஒரு மஞ்சள் கயிற்றில் மஞ்சள் கொம்பை முடிந்து கட்டும்படி கூறும். இதற்கு எதற்கு தண்டமாய் ஆயிரம் வராகன் கடன் படு கிறீர்?" என்று கடுகடுத்த வேணு, கதவை சாத்திவிட்டு கடைக்குச் சென்றான்.

அவன் தலை மறைந்த தும் பெரியவர் வீட்டுக் கத வைத் தட்டி, "அம்மணி' என்று குரல் கொடுத்தார்.

வச்சலா வெளியே வந்து "பெரியவரை நமஸ்கரித்து, சுவாமி! என் பிறந்த வீட்டில் போட்ட வைர மூக்குத்தி ஒன்று திருகு தொலைந்து விட்டதால், பெட்டியில் போட்டு வைத்திருக்கிறேன். விற்றால் 2000 வராகன் கிடைக்கும். இதை பெற்றுக் கொள்ளுங் கள்.

உங்கள் மகனின் திரும ணத்தை சிறப்பாக நடத்துங் கள். ஆனால், இதை இந்த ஊரில் விற்க முயற்சிக்க வேண்டாம்," என்று எச்சரித்து விட்டு மூக்குத்தியை தேடி எடுத்து வந்து தந்தாள்.

பெரியவர் வடிவில் வந்து மூக்குத்தியைப் பெற்றுச் சென்ற பகவான், நவரத்ன வியாபாரி ரூபத்தில் ஆடம்பரமாக உடை அணிந்து, வேணு கடைக்கு வந்து மூக்குத்தியைக் காட்டி, ""என்ன விலை கொடுப்பீர்?" என்று கேட்டார்

ஆயிரம் வராகன் கொடுக்க லாம்," என்றான் வேணு.

வச்சலாவிடம் இதே மாதிரி ஒரு மூக்குத்தி உண்டு. அவ ளுக்கு இரக்க சுபாவம். நாம் கடைக்கு வந்ததும் கிழவர் உள்ளே நுழைந்து யாசகம் கேட்டிருப்பாரோ? அவள் கிழ வரிடம் கொடுத்திருப்பாளோ? எதற்கு சந்தேகம்? ஒரு நடை வீட்டிற்குப் போய் பார்த்து விடலாமே என்று சிந்தித் தான்.

ஐயா! இங்கே அதிகப் பணம் வைத்திருப்பதில்லை! ஒரு நொடியில் வீட்டிற்குப் போய் எடுத்து வருகிறேன்," கூறிவிட்டு வீட்டிற்கு அவசர மாகச் சென்றான்.

நேரங்கெட்ட நேரத்தில் கணவன் வந்ததைக் கண்டு திகைப்படைந்தாள் வச்சலா.

வச்சலா! திருகு தொலை ந்த தென்று ஒரு வைர மூக் குத்தியை உள்ளே வைத் திருந்தாயே! அந்த மூக்குத் தியை எடுத்து வா," என்றதும் அவளுக்கு, "பகீரென்று என் றது.

பயந்து கொண்டே உள்ளே சென்றாள். வேணுவின் கூரிய பார்வையை சமாளிக்க, தேடுவது போல் பாவனை செய்தாள். உள்ளம் இறை வனின் திருவடிகளைக் கண் ணீரால் நனைத்தது. என்ன ஆச்சரியம்! அவளுடைய தைப் போலவே ஒரு அழகான மூக்குத்தி அவளது விரல் களில் தட்டுப்பட்டது.

மூக்குத்தியை ஆராய்ந்த வேணு நிதானமாக, "வச்சலா! இது உன்னுடையதல்ல! உண்மையைச் சொன்னால் கோபப்படமாட்டேன். இவ் வளவு உயர்ந்த வைரத்தை நான் இதுவரை பார்த்ததே இல்லை," என்று கேட்க, வச் சலா நடந்தது நடந்தபடி கூறி னாள்.

வச்சலா! பரந்தாமனே தரு மச் செயலுக்கான பலனை எனக்கு விளக்க லீலை புரிந் திருக்கிறார். வா! வியாபாரி வடிவிலிருக்கும் பகவானை வணங்குவோம்!" என்று வச் சலாவுடன் கடைக்கு விரைந் தான். பக்தன் உணர்ந்தும் பகவான் இருப்பாரா?

வேணு மானசீகமாக இறைவ்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு, இரப் போர்க்கும் இல்லையெனாது வாரி வழங்கி சத்திரம், நந் தனம், வேத பாடசாலைகள் என்று ஏராளமான அறப்பணி களைச் செய்தான். கர்நாடக சங்கீதத்தின் பிதாமகரான புரந்தரதாசர்தான் அந்த வேணு.

06.2017
08

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1783 - ஐஸ்லாந்தில் லாக்கி எரிமலை வெடிக்க ஆரம்பித்ததில் எட்டு மாதங்களில் வறட்சி, மற்றும் வறுமை காரணமாக 9,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசி அமெரிக்கக் கூட்டில் இருந்து விலகியது.
- 1887 - ஹேர்மன் ஹொலரித் துளையிடும் அட்டை கொண்ட கணிப்பானுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1929 - ஐக்கிய இராச்சியத்தில் முதற் தடவையாக தொழிற் கட்சி ஆட்சி அமைத்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் சிரியா, மற்றும் லெபனான் மீது தாக்குதலை ஆரம்பித்தன.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நீர்மூழ் கிக் கப்பல்கள் அவுஸ்திரேலியாவின் சிட்னி, நியூகாசில் நகரங்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தின.
- 1984 - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஓரினச்சேர்க்கை சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டது.
- 1992 - முதலாவது உலகக் கடல் நாள் கொண்டா டப்பட்டது.
- 1995 - படிவ நிரலாக்க மொழி பி.எச்.பி வெளியிடப்பட்டது.
- 2006 - அல் குவைதாவின் ஈராக்கியத் தலைவர் அபு முசாப் அல்-ஜர்காவி அமெரிக்க விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டார்.
- 2007 - அட்லாண்டிஸ் விண்கப்பல் 7 பேருடன் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஏவப்பட்டது.
- 2007 - இலங்கையில் புத்தளத்தில் 9 உடல்கள் மிகவும் சிதைந்த நிலையில் காவற்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டன.
- 2007 - ஆஸ்திரேலியாவில் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் இடம்பெற்ற பெரும் காற்று, மற்றும் வெள்ளத்தினால் 9 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1867 - பிரான்க் லாய்டு ரைட் (இ. 1959)
- 1874 - சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி, இலங்கையின் முன்னாள் சட்டசபை சபாநாயகர்
- 1921 - சுகார்ட்டோ, இந்தோனேசியாவின் முன் னாள் அரசுத் தலைவர் (இ. 2008)
- 1930 - இர. ந. வீரப்பன், மலேசிய எழுத்தாளர் (இ. 1999)
- 1975 - ஷில்பா ஷெட்டி, பாலிவுட் நடிகை

### இறப்புகள்

- 632 - முகம்மது நபி, கடைசி நபி (பி. 570)
- 1809 - தாமஸ் பெய்ன், ஆங்கிலேய-அமெரிக்க எழுத்தாளர் (பி. 1737)
- 1845 - ஆன்ட்ரூ ஜாக்சன், ஐக்கிய அமெரிக்கா வின் ஏழாவது குடியரசுத் தலைவர் (பி. 1845)
- 1969 - அருணாசலம் மகாதேவா, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1885)
- 2012 - கே. எஸ். ஆர். தாஸ், இந்திய இயக்குநர் (பி. 1936)

### சிறப்பு நாள்

- உலகக் கடல் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 140 | 180 | 200 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 80 | 110 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 350 | 400 | 600 | 300 | 500 |
| தக்காளி | 160 | 200 | 140 | 200 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 80 | 100 | 60 | 100 |
| கோவா | 140 | 250 | 150 | 200 | 160 | 140 | 160 |
| கரட் | 230 | 400 | 200 | 280 | 300 | 600 | 320 |
| பூசணி | 80 | 100 | 50 | 90 | 100 | 140 | 100 |
| புடோல் | 100 | 120 | 40 | 120 | 120 | 140 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 40 | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 400 | 300 | 300 | 300 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 90 | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 180 | 400 | 150 | 180 | 200 | 160 | 250 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 100 | 160 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 150 | 70 | 120 | 160 | 120 | 100 |
| பயற்றங்காய் | 140 | 150 | 100 | 120 | 120 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 150 | 120 | 120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 140 | 150 | 100 | 140 | 160 | 140 | 140 |
| கறிமிளகாய் | 250 | 400 | 140 | 240 | 320 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 60 | 120 | 120 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 300 | 180 | 240 | 200 | 200. | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 130 | 100 | 160 | 120 | 150 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 30 | 25 | 30 |
| தேசிக்காய் | 60 | 50 | 40 | 80 | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 70 | 65 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | — | 400 | 300 | 220 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 400 | — | 300 | — | 300 | 160 |
| முள்ளங்கி | 80 | 100 | — | 100 | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | 150 | — | 100 | — | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வீணாகக் கழிக்கும் ஒவ்வொரு வினாடியும் நமது வாழ்வில் மீண்டும் நாம் பெற முடியாத பெருஞ் செல்வமாகும். - கார்ல் மார்க்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண சபைத் தேர்! வடக்கு வீதியில்; சமா நடக்குது!

வடக்கு மாகாண சபையில் நடக்கின்ற நாடகங்களைப் பார்க்கும் போதெல்லாம் ஏன் தான் இப்படி என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு அங்கு நடக்கின்ற விவகாரங்கள் படுமோசமாகி வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் செய்ய வேண்டிய எத்தனையோ விடயங்கள் இருக்கும் போது, அமைச்சர்கள் மீதான விசாரணை, அது தொடர்பான அறிக்கை, விவாதம் இப்படியே வடக்கு மாகாண சபையின் எஞ்சிய காலமும் முடியப் போகிறது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் தலையில் வீண் பிரச்சினைகளைச் சுமத்தி அவருக்குத் தொந்தரவு கொடுப்பதற்காக ஆரம்பித்த அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டு; இப்போது விசாரணைக்குழுவின் அறிக்கையாகி, வடக்கு மாகாண சபையின் விவாதப் பொருளாகி இருப்பதைக் காண முடியும்.

இது ஒருபுறம் இருக்க, விசாரணை அறிக்கை வெளிவந்ததும், நாங்கள் அப்படி எதுவும் கேட்கவில்லை என்று கூறுகின்ற மாகாண சபை உறுப்பினர்களும் இருக்கவே செய்கின்றனர்.

குறித்த அமைச்சர்களின் பெயர்களைக் கூறி அவர்களின் செயற்பாடு தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் எனக் கேட்டவர்கள் இப்போது, விசாரணைக்குழு அமைத்திருக்கத் தேவையில்லை என்று சொல்கின்றனர்.

இவ்வாறு சொல்வதன் காரணம் விசாரணைக் குழுவை அமைக்கா விட்டால் முதலமைச்சர் மீது பழிசுமத்த முடியுமல்லவா?

விசாரணை அறிக்கை வந்து விட்ட பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சி கூடி சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை முதலமைச்சரிடமே விட்டு விடுவதாகத் தீர்மானித்துள்ளதாம்.

அப்படியாயின் இந்தத் தீர்மானத்தை முன் கூட்டியே எடுத்திருக்கலாம் அல்லவா!

ஆரம்பத்திலேயே முதலமைச்சரிடம் இந்தப் பொறுப்பை விட்டிருந்தால் விசாரணைக்குழு, அதற்கான செலவு என்பன தவிர்க்கப்பட்டு ஆக்கபூர்வமான விடயங்கள் குறித்து வடக்கு மாகாண சபை கலந்துரையாடச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.

இதைவிடுத்து எல்லாவற்றையும் போட்டுடைக்கும் வகையில் வடக்கு மாகாண சபையில் நடந்துவிட்டு, இப்போது நாங்கள் கேட்கவில்லை - நாங்கள் அப்படிக் கூறவில்லை என்ற கருத்துக்கள் தேவைதானா என்ன?

எதுவாயினும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களே! உங்கள் தேர் வடக்கு வீதிக்கு வந்துவிட்டது. இருப்புக்கு வர நீண்ட நாள் எடுக்காது.

ஆகையால் உங்களுக்குள் சமா வைப்பதை விடுத்து எஞ்சிய இடம் வரையாவது பயனுள்ளவாறு தேரை இழுத்து முடியுங்கள்.

உங்களை நம்பி தேர் இழுக்கும் பதவியைத் தந்த தமிழ் மக்களுக்கு இந்த உதவியையாவது செய்யுங்கள்.

இதைவிடுத்து விளக்கம், விசாரணை, அறிக்கை, விவாதம் இப்படியே போனால் சமா நல்லா இருக்கும். ஆனால் மக்கள்தான் பாவங்கள் என்றாகிவிடுவர்.

# விஞ்ஞான பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமனம்

## வடக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

வடக்கு மாகாணப் பாடசாலைகளில்நிலவும்ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமனம் செய்யும் நிகழ்வு நாளை மறுதினம் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வடக்குமாகாணபாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற் றிடங்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு நியமிப்பதற்காக 2017.05.25, 2017.05. 26, 2017.06.05 ஆம் திகதிகளில் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் நடைபெற்ற நேர்முகத் தேர்வுடன் இணைந்த பிரயோகப் பரீட்சைக்குத்தோற்றிதகைமை பெற்ற விண்ணப்பதாரர்களுக்கே நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

என்வே தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிப் பெண்கள் இளவர்ண சாரியுடனும் ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சேட்டும் அணிந்து குறித்த திகதியில் காலை 9 மணிக்கு தவறாறு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் தங்களுக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளது விபரத்தினை வட மாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www. edumin.np. gov.lk எனும் முகவரியில் பார்வையிட முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

## சபாநாயகரை அச்சுறுத்திய பாரா.உறுப்பினர்

(கொழும்பு)

தன்னை அச்சுறுத்தி முடிவுகளை பெற்றுக் கொள்ள முடியாது என சபாநாயகர் கரு ஜயசூரிய நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா அவைக்குள் தன்னை அச்சுறுத்தியதாகவும் இது நாடாளுமன்றமே அன்றி பிரதேச சபை அல்ல எனவும் சபாநாயகர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சைட்டம் நிறுவனம் சம்பந்தமாக தினேஷ் குணவர்தன விசேட உரையை நிகழ்த்திய பின்னர், அவையில் அமளி ஏற்பட்டது.

அமளியான நிலைமையில், கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்கு தடையேற்படுத்தும் வகையில் நடந்து கொண்டதாகவும் தொடர்ந்தும் இவ்வாறு தடையேற்படுத்தினால தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும் எனவும் கரு ஜய சூரிய குறிப்பிட்டுள்ளார். (11)

## கச்சாயில் மணல் கடத்திவந்த உழவு இயந்திரம் பறிமுதல்

கொடிகாமம் கச்சாய் பகுதியில் மணல் கடத்தி வந்த உழவு இயந்திரத்தை யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையினர் நேற்று அதிகாலை பறிமுதல் செய்ததுடன் சாரதியையும் கைது செய்தனர்.

இதேவேளை சாரதியையும் வாகனத்தையும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் தவசிக்குளம் பகுதியில் மணல்கடத்திச் சென்ற உழவு இயந்திரத்தை பொலிஸார் மறித்தபோது நிறுத்தாது சென்றதால் பின் தொடர்ந்து சென்று சில மணி நேரத்தில் கைப்பற்றினர்.

இச்சம்பவத்தின் தொடர்ச்சியாகவே நேற்று அதிகாலை மணல் கடத்தல் முறியடிக்கப்பட்டது. (இ-3-89)

## ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



ஒன்பதாம் நாள்- தேர்த்திருவிழா (08.06.2017)

தேரேறி வருகின்ற நீராவியடி விநாயகரே!
தேவாதி தேவனே! சிவன் பார்வதி மகனே!
மூத்த கணபதியே
போரோய்ந்த மண்ணில் நிம்மதியே தாராயோ
வெற்றிப்பிள்ளையாரே
வேரோடு வினைகழும் தேர்த்திருவிழா தனிலே
தேர்மீதுகாட்சி தரும் கார் முகத்திக் கணபதியே
நீரேறிக் களிப்புடனே நிலவொளி போல் ஒளிவீசி
பாரோடு விண்ணாய்ப் பரந்த பக்தர்களுக்கருள்புரிய
நீராவியில் தேரேறும் நிர்மலனே சரணம் சரணம்!

தவா




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

ஐயனே ஆண், பெண் உறவு பற்றி எனக்குத் தெரியாதா? சிந்தையில் சிற்றின்ப நாட்டமற்ற எனக்கு ஆண்- பெண் உறவு அனர்த்தமாகப்படுமா? எதற்காக இவ்வளவு ஆவேசப்படுகிறாய். இணையுடன் நீ இருப்பது தெரிந்தும் உட்புகுந்திருக்கின்றேன் எனில் உற்றதொரு காரணம் இருக்கும் என நீ உணர்ந்திருக்க வேண்டாமா? அகவாழ்வு கடந்த அந்தணன் என்னைக் கோபித்துக்கொள்கிறாயே... உன் சாந்த குணம் எம்மட்டு என்று அறியவே இந்தப் பொழுதிலும் நான் இங்கு நுழைந்தேன். சூழ்நிலைக்கேற்ப சொரூபம் மாறும் நீ அவிர் பாகத்தை ஏற்கும் அருகதையற்றவன் என்று உரைத்துவிட்டு பிருகு முனிவர் அங்கிருந்து அகன்றார். (தொடரும்)



## சத்திய தரிசனம்

### மனம் விட்டுப் பழகுங்கள்

❖ வாழ்க்கையை உருவாக்குவது சக்தியே. அதுவே பொருட்களுக்கு உயிர்ப்பைக் கொடுக்கிறது. அது சரிவர இயங்காவிடில் அமைதி குலைந்து போகிறது. எல்லோரிடமும் உள்ள சக்தி இணைந்தால் அதுவே நன்மையைத் தரும் பெரிய இயக்கமாக மாறுகிறது. அதுவே பிரிந்தால் கலவரத்தை உண்டு பண்ணுகிறது.

❖ பிரிப்பதும், பிரித்து ஆள்வதும் மனித அழிவிற்குத் தான் வழிவகுக்கும். மனித வளர்ச்சி, மேம்பாடு இவையெல்லாம் அது ஒற்றுமை என்னும் தெய்வீகத்தால் மட்டுமே முடியும். ஒற்றுமை தெய்வீக சக்தியைத் தரும். பிரிவினை மிருகசக்தி தருகிறது.

❖ செய்யப் போவதையே சொல்லுங்கள். சொன்னவண்ணம் செயல்படுங்கள். அன்பின் மூலம் உணர்ந்து செயற்படுங்கள். அந்த முயற்சியும், அன்பும் சேர்ந்து கனிவது தான் சேவை.

❖ கடவுளிடம் சரணாகதி அடைவது என்பது நம்முடைய காரியங்களை எப்படியோ பார்த்துக் கொள்வான் என்று விட்டு விடுவது அல்ல. நம்மை நாமே உணர வேண்டும். வெற்றியால் மமதையோ, தோல்வியால் சோர்வையோ கொள்ளக்கூடாது

❖ தனித்து வாழாதீர்கள். ஒதுங்கி இராதீர்கள். மனம் விட்டுப் பழகுங்கள். ஒற்றுமை உணர்வு எங்கும் மலர [illegible] உறவு [illegible]தியாகும்.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கந்தர்வ மணத்திற்கு பொருத்தம் அவசியமா?**

கந்தர்வ மணம் என்பது கிரகத்தின் வசியத் தன்மையால் ஏற்படுவது. ஊழ்வினை சாபத்தால் ஏற்படும் இந்தத் தன்மைக்கு திருமணப் பொருத்தம் பார்ப்பது என்பது அவசியமற்ற ஒன்றாகும்.

அப்படியே பார்த்தாலும் எவ்வித பயனும் இருக்காது.

**இரட்டைப் பிறவிகள் திருமண முறை என்ன?**

இரட்டைப் பிறவி கொண்ட அக்காள் தங்கைகளை இரட்டைப் பிறவி கொண்ட அண்ணன் தம்பிகளுகு தாராளமாக மணம முடிக்கலாம்.

(தொடரும்)

## சுற்றாடல் சுத்தம் பேணுவோம்! விலங்கு விசர்நோய் ஒழிப்போம்!!

குப்பைகள், எஞ்சிய உணவு மீதிகளை கண்டபடி வீசாதீர்கள். இதுநாய்கள் ஒன்றுகூட காரணமாக அமைந்து ஒரு நாயிலிருந்து மற்றையதிற்கு ரேபிஸ் கிருமிகள் தொற்றிக் கொள்ள வாய்ப்பளிக்கும்

பொது இடங்களில் பொறுப்பற்ற விதத்தில் நாய்க்குட்டிகளை விடவேண்டாம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்து முதல்வரிடம்...

கையளிக்கப்பட்டுள்ளது.

இதை முதல்வர் எவ்வாறு கையாளப் போகிறார் என மாகாண ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பொது மக்களும் ஆவலோடு எதிர்பார்த்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றையதினம் மாகாண சபையில் நடந்த விவாதத்தில் எதிர்பார்க்கப்பட்டது போன்று சுவாரஸ்யமாக நடைபெறாமல் வழமை போன்ற ஒரு அமர்வாகவே நடைபெற்று முடிந்துள்ளது. எனினும் சில முக்கிய தீர்மானங்களுடன் சபை எதிர்வரும் பதின் நான்காம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. முன்னதாக சபையின் அறிவித்தல்களை வாசித்த அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையை சபையில் சமர்ப்பிக்குமாறு முதலமைச்சரினை வேண்டினார். இதன்போது எழுந்த முதலமைச்சர் அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக விசாரணையில் உள்ள சில விடயங்களை சுருக்கமாகவும், விசாரணை எதற்காக நடத்தப்பட்டது? அடுத்த கட்டம் செய்ய வேண்டியவை என்ன என்பவை தொடர்பிலும் உரையாற்றியிருந்தார்.

இதன் பின்னர் உத்தியோகபூர்வமாக முதலமைச்சரால் அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை அவைத்தலைவரிடம் கையளிக்கப்பட்டது. இந்த விசாரணை அறிக்கை உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரினார். இதன் பின்னர் எழுந்த எதிர்க்கட்சி தலைவர் தவராசா இந்த அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பதற்காக நன்றி தெரிவிப்பதாகவும், இவ்வாறு முதலமைச்சர் வெளிப்படைத்தன்மைக்கும் பொறுப்புக்கூறலுக்கும் உறுதியாக செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தவராசாவின் கருத்தை மறுத்து பேசிய உறுப்பினர் சயந்தன் இவ்வாறான ஒரு விசாரணையை நாங்கள் கோரவில்லை. முதலமைச்சர்தான் இந்த விசாரணைக் குழுவை அமைத்தார் என தெரிவித்தார். எனினும் குறித்த விசாரணை சபையின் அனுமதியுடனேயே நடைபெற்றதாகவும், தேவையற்ற வியாக்கியானங்களை விடுத்து செயற்படுமாறும் இதன் போது உறுப்பினர் சிவாஜிலிங்கம் வலியுறுத்தினார். மேலும் இது தொடர்பில் எங்களுடைய கருத்துக்களும் உள்வாங்கப்பட வேண்டும் என உறுப்பினர் விந்தனும் வலியுறுத்தினார்.

இந்த அறிக்கையை விசேட அமர்வு கூட்டி போஸ்மோட்டம் செய்ய போகின்றோமா என்பது குறித்து தெளிவுபடுத்த வேண்டும் என சர்வேஸ்வரன் கூறினார். குறித்த விசாரணை அறிக்கையில் வடக்கு மாகாண சபையினுடைய அதிகாரங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளன. மேலும் விசாரணைக்குழுவின் அறிக்கையில் தவறுகள் இருப்பதாகவும் அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆகவே அமைச்சர்களின் கருத்தையும் இந்த அறிக்கையையும் இணைத்து ஆராய்வதே அடுத்த சிறப்பு அமர்வின் நோக்கம் என முதலமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அமைச்சர்கள் மீதான சந்தேகங்களை கூடிய விரைவில் தீர்த்து வைத்து ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் எமக்கு உண்டு என மேலும் கூறினார். மத்திய அரசாங்கம் போன்று ஒரு விசாரணையை நடத்திவிட்டு அந்த அறிக்கையை இழுத்தடிப்பு செய்தால் அவர்களுக்கும் எமக்கும் எந்த வேறுபாடும் இல்லாமல் போய்விடும். மக்களுடைய சந்தேகங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. நாங்கள்தான் முன்னுதாரணமாக நடக்க வேண்டும் என உறுப்பினர் சிவாஜிலிங்கம் கூறினார்.

குற்றம் சுமத்தப்பட்ட அமைச்சர்கள் 13 வது திருத்தச் சட்டத்தை மீறித்தான் செயற்பட்டார்கள் என்றால் அதனை ஒரு குற்றமாக கருத முடியாது எனவும் அவர் கூறினார். விசாரணை அறிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அரச அதிகாரிகளின் பணிகளில் இடையூறு ஏற்படுகின்றது என்ற முதலமைச்சரின் கருத்து ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் மாற்றங்கள் அதிகாரிகளின் பணிகளில் ஒருபோதும் செல்வாக்கு செலுத்த முடியாது என அஸ்மின் கூறினார்.

இந்த அறிக்கை தொடர்பில் முதலமைச்சர் தான் முடிவு எடுக்க வேண்டும். அவர் எந்த முடிவு எடுத்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயார் என உறுப்பினர் சுகிர்தன் கூறினார். முதலமைச்சர் கூறுவது போன்று விரைவாக அறிக்கை தொடர்பான நிலைப்பாட்டை வெளியிட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ள கூடியதுதான். இந்த விசாரணை அறிக்கை சகல மட்டங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே அந்த பாதிப்பை எதிர்கொள்வதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு அறிக்கையின் அடுத்த கட்டம் தொடர்பில் ஆராயப்படுவது அவசியம் என்றார்.

அமைச்சர்கள் விசாரணை அறிக்கை தொடர்பில் தன்னிலை விளக்கமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது. அப்படியானால் விசாரணையின் போது அமைச்சர்கள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கவில்லையா? இல்லை என்றால் எவ்வாறு அந்த விசாரணை குழுவை நடுநிலையான ஒன்றாக ஏற்றுக்கொள்வது என இந்திரராஜா கூறினார். எனினும் விசாரணையின் போது அமைச்சர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு முறைப்படியுடன் தான் விசாரணை நடைபெற்றது என முதலமைச்சர் பதில் கூறினார்.

அமைச்சர்கள் தற்போது தன்னிலை விளக்கம் தந்தால் அதனை புரிந்து கொள்வதற்கு நாங்கள் தயாராக இல்லை. எனவே எமக்கு முதலில் விசாரணை அறிக்கை தரப்பட வேண்டும் என்றார். எனினும் தன்னிலை விளக்கம் எப்போது வழங்குவது என்ற தீர்மானத்தை அமைச்சர்களே முடிவு செய்வதற்கு அவர்களிடம் வழங்கி விடுவதாக அவைத்தலைவர் தெரிவித்தார். இந்த விசாரணை அறிக்கை தொடர்பில் பகிரங்கமாக பேசுவது ஆரோக்கியமான விடயம் அல்ல. இது ஆளுங்கட்சி சார்ந்த பிரச்சினையாக உள்ளது. எனவே அமைச்சர்கள் தமது விளக்கத்தை எழுத்து மூலமாக முதலமைச்சரிடம் வழங்கலாம் இது தொடர்பில முதமைச்சர் சிந்திக்க வேணும் என உறுப்பினர் லிங்கநாதன் கூறினார்.

விசாரணை அறிக்கையில் கூட சில தவறுகள் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில், முதலமைச்சர் தான் தனது இறுதி தீர்ப்பு தொடர்பில் அறிவிக்க வேண்டும் என உறுப்பினர் பசுபதிப்பிள்ளை கூறினார். விசாரணை அறிக்கையில் உள்ளவற்றை வெளிப்படுத்தி மக்கள் அதில் என்ன உள்ளது என்பதனை ஆராய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். முதலமைச்சர் தான் குற்றவாளிகளை தப்பிக்க வழி செய்தார் என்ற பழிக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும் என்றார்.

அரசியல் அமைப்பின் 154 F5, F1 ஆகிய பிரிவுகளில் முதலமைச்சருக்கே அமைச்சர்கள் தொடர்பில் அதிகாரங்கள் உண்டு. ஆகவே அவர் தான் இது தொடர்பில் தீர்மானிக்க முடியும். இந்த விடயம் துரிதமாக முடிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எமது அமைச்சர்கள் வெளியே குற்றவாளிகளாக சித்தரிக்கப்பட்டு கொண்டுள்ளார்கள். அதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஆகவே தன்னிலை விளக்கத்தை அமைச்சர்கள் விரும்பினால் இன்று வேண்டுமானாலும் வழங்கலாம் என அவைத்தலைவர் கூறினார்.

**ஐங்கரநேசன் பதில்**

இந்த விடயம் தொடர்பில் ஊகங்கள் எம்மை பாதிக்கின்றன. விசாரணை அறிக்கை தொடர்பில் பேசவேண்டிய தேவை உள்ளது. விசாரணை குழுவில் இருந்தவர்கள் மீது எமக்கு கருத்து முரண்பாடுகள் உள்ளன. நான் விசாரணை குழு முன்னால் சாட்சியம் வழங்கும் வரையில் அந்த விசாரணை குழுவில் யார் இருந்தார்கள் என்பது குறித்து எனக்கு தெரியாது. இவ்வாறான நிலையில்தான் அந்த குழுவில் யார் உள்ளார்கள் என இறுதி நாள் அன்றே அறிந்து கொண்டேன்.

நீதிமன்றில் வடக்கு மாகாண சபைக்கு எதிராக முன்நிலையாகுபவர்கள் எவ்வாறு விசாரணை குழுவில் இருக்க முடியும். இது ஒரு முரணான விடயமாக உள்ளது. மேலும் அறிக்கையில் நாங்கள் குறிப்பிட்ட பல விடயங்கள் வெளிவரவில்லை. மாறாக சொல்லப்படாத விடயங்களே வெளிவந்துள்ளன. ஊழல், முறைகேடு என்ற சொற் பிரயோகங்கள் அடிக்கடி அறிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளதால் பார்ப்பவர்களை ஒரு மயக்க நிலைக்குள் கொண்டு சென்று விடுகின்றது.

எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கை மிக இரகசியம் என குறிப்பிடப்பட்டு இருந்தது. அதனை எமது செயலாளர்களுக்கும் கூட காண்பிக்கவில்லை. ஆகவே இவை தொடர்பில் சட்ட ரீதியாகவும் ஆராய வேண்டியுள்ளது. ஆகவே எதிர்வரும் ஒன்பதாம் திகதி என்பதனை பிற்போட்டு சபையை நடத்த வேண்டும் என்றார். இதன்போது கருத்து தெரிவித்த உறுப்பினர் சயந்தன், குறித்த விசாரணை குழு அமைக்கப்படும் போது நான் அதை எதிர்த்திருந்தேன்.

அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பை மீறுவதாக அமைந்தது. மக்கள் பிரதிநிதிகளின் சிறப்பு உரிமையை மீறுவதாக அது அமைந்திருந்தது என நான் குறிப்பிட்டேன். இத்தகைய விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படும் போது அந்த குழுவில் அங்கத்துவம் வகிப்பவர்களின் கீர்த்தி, புகழ் என்பவை தொடர்பில் பொதுமக்களுக்கு [illegible] அறிவதற்காக பத்திரிகை விளம்பரத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டியது பொதுவான மரபு, ஆனால் அந்த மரபு இந்த விசாரணை குழு அமைக்கப்படும் போது பின்பற்றப்படவில்லை.

இந்த அறிக்கையை பயன்படுத்தி அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. அது இந்த அமைச்சரவையை மாற்றி அமைப்பதற்கோ அல்லது அமைச்சர்களை பதவி நீக்கம் செய்வதற்கோ முதலமைச்சருக்கே அரசியலமைப்பில் பிரத்தியேக தனிச்சிறப்பு உரிமை வழங்கப்பட்டுள்ளது. எனவே உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறாமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த அறிக்கையை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க முயன்றால் விசாரணைக்குழு பற்றிய விமர்சனங்களும் வரும் என சயந்தன் கூறினார்.

இதன் போது கருத்து தெரிவித்த முதலமைச்சர், இந்த கலந்துரையாடல் அவசியமானது என வலியுறுத்தி, அதனை ஊடகங்கள் இல்லாமல் விவாதிக்கலாம், அவ்வாறு ஊடகங்களை வைத்து கொண்டு விவாதித்தால் சேறு பூசப்பட கூடிய நிலையேற்படும். எனினும் இந்த நடவடிக்கை சபையின் நடவடிக்கைகளை மூடி மறைக்கும் செயல் என எதிர்ப்பு தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் தவராசா, மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் நாங்கள். ஆகையால் இவ்வாறு செய்ய முடியாது என முதலமைச்சரின் கருத்தை மறுதலித்தார்.

இந்த விடயம் ஆளுங்கட்சியோடு தொடர்பு பட்டிருப்பதால் ஆளுங்கட்சி கூட்டம் கூட்டி அதில் ஆராயப்பட வேண்டும் என உறுப்பினர் விந்தன் கூறினார். ஊடகங்கள் ஒருபோதும் வெளியேற்றப்பட முடியாது. மகிந்த காலத்தில் தான் ஊடகங்களுக்கு இருட்டடிப்பு செய்யப்பட்டன. இருந்த போதிலும் வெளியேற்றப்படவில்லை. இது மக்களிடையே பாரிய சந்தேகங்களை தோற்றுவிக்கும் என சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அமைச்சர்கள் இருவரும் தன்னிலை விளக்கமளிக்க வேண்டும் என முதலமைச்சர் கோரி, அந்த தன்னிலை விளக்கம் தொடர்பில் திருப்தி அடைந்தேன், அல்லது தன்னிலை விளக்கம் திருப்தி தரவில்லை ஆகவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்றேன் என்ற இரு தெரிவுகள்தான் முதலமைச்சருக்கு உண்டு. இதற்கு மேலாக பல தெரிவுகள் குறித்து விவாதிக்க போகின்றோமா? என சயந்தன் கேள்வியெழுப்பினார். இந்த விசாரணை அறிக்கை தொடர்பில் கலந்துரையாடாமல் திருடனுக்கு தேள் கொட்டியது போல பேசாமல இருப்பது மக்களிடையே பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தும் என உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அமைச்சர்கள் மீது குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்னராகவே அமைச்சர்களை குற்றவாளிகளாக ஊடகங்கள் சித்தரிக்கின்றன. இதன் காரணமாகவே தேவையற்ற முரண்பாடுகளை தவிர்த்து கொள்வதற்கு ஊடகங்கள் இல்லாமல் விவாதம் செய்வோம் என கூறியதாக முதலமைச்சர் இதன்போது தன்னிலை விளக்கம் வழங்கினார். இதன் பின்னர் கருத்து தெரிவித்த லிங்கநாதன், ஆடு நனையுது என்று ஓநாய் அழுவது போன்று எதிர்க்கட்சி தலைவர் பேசுகின்றார். எங்களை தவறாக யாரும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. நாங்கள் பிரத்தியேக இடமொன்றில் இது தொடர்பில் விவாதிப்போம் என அவர் மேலும் கூறினார்.

இவ்வாறு முதலமைச்சரே தற்துணிவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என உறுப்பினர்கள் விவாதித்து கொண்டிருக்க, முதலமைச்சர் மீது பந்தை போட்டு விட்டு உறுப்பினர்கள் தாம் தப்பிக்க முயலும் செயற்பாடுகள் தான் தற்போது இங்கு நடைபெற்று கொண்டுள்ளது என சிவாஜிலிங்கம் கூறி, விசாரணை அறிக்கை தொடர்பில் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக நின்றார். இதன்பின்னர் தமக்கு தன்னிலை விளக்கம் வழங்குவதற்கு கால அவகாசம் தேவை என கல்வி அமைச்சர் குருகுலராசா கோரினார்.

இதனை அடுத்து சபை எதிர்வரும் பதின் நான்காம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் அறிவித்தார். இந்த அமர்வுக்கு இடையில் குற்றம் சாட்டப்பட்ட இரு அமைச்சர்களும் எழுத்து மூலம் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு தன்னிலை விளக்கங்களை வழங்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-4,9)

# ஞானசார தேரருக்கு...

அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாக தெரிவித்த அவர். ஞானசார தேரருக்கு அரசிலுள்ள அமைச்சர் ஒருவர் அடைக்கலம் கொடுத்திருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன்போது பொது பல சேனாவின் பொதுச செயலாளர் ஞானசார தேரரை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் இதுவரை அவர் கைது செய்யப்படாத விவகாரம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பில் பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன "இதுதொடர்பில் நேற்றைய தினமும் நான் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடினேன். அவரும் சி.சி.டி.வி காணொளிகளில் கிடைக்கப்பெற்ற தரவு களுக்கு அமைவாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறித்த தேரரை கைது செய்ய 4 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அவ்வமைப்பினரை உடனடியாக கைது செய்தால் கடைகளுக்கு தீ வைப்பது உள்ளிட்ட நாசகாரிய செயற்பாடுகளில் ஈடுபடுவோர் யார் என்பது தொடர்பில் அறிந்துகொள்ள முடியும் என்பது தான் எனதும் நிலைப்பாடாக இருக்கின்றது என்று கூறினார்.

இதேவேளை இவ்வாறான இனவாதச் சம்பவங்கள் அனைத்துக்கும் பொது பல சேனா அமைப்பின்பொதுச்செயலாளரான ஞானசார தேரர்தான் பொறுப்பு என எவ்வாறு உறுதிபடக் கூறமுடியும் என்று ஊடகவியலாளர்கள் வினா தொடுத்தனர்.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் ராஜித சேனாரத்ன ஏன், நீங்கள் அளுத்கம கலவரத்தின்போது அவர் நடந்துகொண்ட விதம், பேசிய முறை என்பவற்றையெல்லாம் பார்க்கவில்லையா? அவர் தொடர்பில் சி.ஐ.டியினர் விசாரணை நடத்திய பின்னர் வழங்கிய அறிக்கைக்கு அமைவாகவே நீதிமன்றம் அவரை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது என்றார். (11)

# அமைச்சர்கள்...

மன்ற நீதிபதிகள் ஒருவர் இளைப்பாறிய இல ங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதி காரி உட்பட மூவர் விசாரணைகளை மேற் கொண்டிருந்தனர்.

விதிமுறைக் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் மூடிய அறையில் விசாரணைகள் நடைபெற்றன. ஊடகங்களுக்கு தகவல்கள் வழங்கப்படாது என்ற நிபந்தனையின் பேரில் விசாரணைகள் நடைபெற்றன.

நான்கு அமைச்சர்களும் குழுவின் அதிகாரத்தை ஏற்று சாட்சியமளித்திருந்தனர். மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சருக்கு எதிராக 4 குற்றச்சாட்டுக்களும் சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சருக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்களும கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சருக்கு எதிராக 9 குற்றச்சாட்டுக்களும் விவசாய கமநலசேவை, கால்நடை அபிவிருத்தி, நீர்வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சருக்கு எதிராக 10 குற்றச்சாட்டுக்களும் கிடைக்கப் பெற்றன.

விசாரணைகள் முடிவுற்று அவர்களின் அறிக்கை கடந்த மாதம் முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. முதலில் முதலமைச்சரால் அந்த அறிக்கை 4 அமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் அறிக்கையின் உள்ளடக்கங்கள் சில ஊடகங்கள் வாயிலாக கசியவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் முதலமைச்சரால் குறித்த அறிக்கை அவையில் சமர்ப்பிக்கப்படவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் முதலமைச்சரின் வருகை இன்றி அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த நிலையில் நேற்றைய தினம் விசேட அமர்வு ஏற்படுத்தப்பட்டு முதலமைச்சரால் அறிக்கை அவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அறிக்கையின் பிரதிகள் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட அமைச்சர்கள் அறிக்கை பற்றிய தமது விளக்கங்களை எழுத்து மூலம் முதலமைச்சருக்கு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். அறிக்கை குறித்த கருத்து பரிமாற்றம் எதிர்வரும் 14 ஆம் திகதி விசேட அமர்வில் நடைபெறும் என அவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (4,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் ...

இராகவன் தர்சினி (வயது 29) என்ற பெண்மணியே காயமடைந்தார். இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (30)

## மின்சாரம் ...

கனமழை மற்றும் காற்றின் காரணமாக கொடிகாமம் நகர் பகுதியிலுள்ள மின்சார கம்பி ஒன்று முதியவர் ஒருவர் மீது அறுந்து விழுந்துள்ளது.

இதில் அவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார்.

இதில் கொடிகாமத்தினை சேர்ந்த சின்னத்தம்பி சிவகுரு (வயது 71) என்பவரே உயிரிழந்த வராவார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (89)

## அரசு தேர்த ...

யின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கூட்டு எதிர்க்கட்சி நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை உரிய நேரத்தில் நடத்தியிருந்தால், அனர்த்தம் ஏற்பட்ட போது பிரதேச மட்டத்தில் மேலும் இணைந்து செயற்பட்டிருக்க முடியும்.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்த நிலைமையில், அரச பொறிமுறை மிகவும் பலவீனமான நிலையில் செயற்பட்டது.

மக்களை காப்பற்ற பிக்குமாரும் பிரதேச மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பெரும் பங்களிப்பை செய்தனர்.

அமைச்சர்கள் குறித்து நாட்டு மக்களுக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. இதனால், அவர்கள் கிராமங்களுக்கு சென்று பணியாற்ற முடியவில்லை.

இதன் காரணமாக வேறு பிரதேசங்களை சேர்ந்த அமைச்சர்கள் அனர்த்தம் ஏற்பட்ட பகுதிகளுக்கான நிவாரணப் பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மகிந்த யாப்பா அபேவர்தன குற்றம் சுமத்தியுள்ளார். (11)

## வடக்கில் திடி...

கூடிய கடும்மழை பெய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை பெய்த மழையின் போது பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இருப்பினும் தடைப்பட்ட பல இடங்களில் மின்விநியோகம் சீர்செய்யப்படவில்லை இதனால் பொதுமக்கள பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர்.

கடும் வறட்சியான காலநிலைக்கு பின்னர் நேற்றைய தினம் அடை மழை பல்வேறு பகுதிகளில் பெய்துள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் மின்னல் இடி காற்றுடன் அடை மழை பெய்திருந்தது.

மழையை கண்டு மக்கள் சந்தோசம் அடைந்திருந்தாலும் மின்சார விநியோகம் சீரின்மையால் மக்கள் அவதிப்பட்டுள்ளனர்.

மின்சார சபைக்கு அழைப்பை ஏற்படுத்திய போதும் அவர்கள் எந்தவித பதிலும் அளிக்கவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (4,9)

## அதிகாரம் ...

மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படாமையினால் மத்திய அரசாங்கத்துடன் தங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் யாப்பு கொண்டு உருவாக்கப்படாத நிலையில் பழைய நிலைமையிலேயே மாகாண சபைகள் செயற்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவை தவிர்க்கப்பட வேண்டும் எனவும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 17 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேற்று வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அவரது அலுவலகத்தில் சந்தித்து, சமகால விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்கள்.

இதன்போது இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகள் எவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டதாக முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (11)

## குற்றம் சாட்டு...

முன்வர வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதலாவது வடக்கு மாகாண சபையின் 95ஆவது அமர்வு மாகாணப் பேரவைச் செயலக சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் வடக்கு மாகாண அமைசசர்கள் மீதான குற்றச்சாட்டுக் கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட விசாரணைக்குழுவின் அறிக்கை நேற்றைய தினம் வடக்கு மாகாண அவைத் தலைவரிடம் வட மாகாண முதலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட போது உரையாற்றும் பொழுதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

பலவிதமான குற்றச்சாட்டுக்கள் எமது அமைச்சர்களுக்கு எதிராகக் கிடைத்ததன் விளைவாக நாம் ஒரு விசாரணைக்குழுவை அமைத்தோம். அக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது.

விசாரணைக்குழு அங்கத்தவர்கள் வட மாகாண சபையின் நடவடிக்கைகள் பற்றியும் 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் அவர்கள் கருத்துப்படி எமக்கிருக்கும் மிகக் குறுகிய அதிகாரங்கள் பற்றியும் ஆளுநரின் அதிகாரங்கள் பற்றியும் பல்வேறு கருத்துக்களைத் தம் அறிக்கையில் முன் வைத்துள்ளார்கள். அவை எம்மால் பரிசீலிக்கப்பட வேண்டியவை.

முறைப்பாட்டாளர்கள் வராததால் சில அமைச்சர்கள் பேரிலான குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக சாட்சியம் கிடைக்கவில்லை என்று கூறியுள்ளார்கள். மற்றையவர்கள் சம்பந்தமான தவறுகள் பல எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு அதிகாரத் துஷ்பிரயோகம் பற்றிக் கூறியுள்ளார்கள். பணவிரயம் பற்றிக் கூறியுள்ளார்கள். அதிகார வரம்பை மீறியுள்ளதாகக் கூறியுள்ளார்கள். மேலும் பல தவறுகள் பற்றிக் கூறியுள்ளார்கள்.

பொதுவாகக் குற்றச்சாட்டுக்கள் எமது உறுப்பினர்களாலேயே முன்வைக்கப்பட்டுள்ளன. உறுப் பினர்கள் நால்வரான அமைச்சர்கள் மீது மற்றைய சில உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டி அவை சம்பந்தமாக சுதந்திரமான விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விதப்புரைகளையும் விசாரணைக் குழுவினர் தந்துள்ளார்கள். அறிக்கையின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி நானே தீர்மானிக்க வேண்டும். எனினும் நான் தீர்மானிக்க முன்சபையினரின் கரு த்தை அறிய ஆவலாய் இருக்கின் றேன்.

அத்துடன் அறிக்கையில் இருப்பவை பற்றி சம்பந்தப்பட்டவர்கள் சபையில் விளக்கமளிக்க அவகாசம் அளிக்க வேண்டுமஎன்றும் அபிப்பிராயப்படுகின்றேன். ஏனென்றால் சில விடயங்கள் விசாரணைக் குழுவினால் கவனத்திற்கு எடுக்கப்படவில்லை யென்றோ தவறான முடிவுக்கு அவர்கள் வந்து விட்டார்கள் என்றோ பாதிக்கப்பட்டவர்களால் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நாங்கள் ஈடுபட்டுள்ள இந்தச் செயல்முறை பொது வாழ்வில் உள்ளவர்கள் வெளிப்படைத் தன்மைக்கும் பொறுப்புக்கூற லுக்குந் தம்மை முன்னிறுத்த முன்வர வேண்டும் என்ற கரு த்தை முன்னிலை படுத்துவதாக அமைந்துள்ளது.

மக்கள் எம்மைத் தேர்ந்தெடுக் கும் போது எங்கள் மீது அவர் களுக்கு பல எதிர்பார்ப்புக்கள் இருந் தன. நேர்மையான, ஊழலற்ற, பக்கசார்பற்ற, கண்ணியமான ஒரு நிர்வாகத்தை நாம் அவர்களுக்குக் கொடுப்போம் என்ற எதிர்பார்ப்பே அது. புதிய ஒரு அமைப்பான வடக்கு மாகாண சபையைக் கையேற்றபோது நாம் ஒரு நம்பிக்கைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம்.

ஆகவே நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற முறையில் நேர்மை, பக்கசார்பற்ற தன்மை, பொறுப்புக் கூறல், பொறுப்பாக நடந்து கொள்ளல் மற்றும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பது போன்ற குணாதிசயங்களை மக்கள் எங்களிடம் எதிர்பார்த்துள்ளார்கள்.

அந்த நம்பிக்கையை நாங்கள் மழுங்கடிக்கும் வண்ணம் நடந்து கொள்ளக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தவே மேற்படி விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. எம்மிடம் குறைபாடுகள் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்யவே இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. எம்மை நாமே ஒழுக்கப்படுத்த அல்லது எமது நடவடிக்கைகளை மீளாய்வு செய்ய இந்த வழிமுறை உதவியது.

மத்திய அரசாங்கமும் வெளிப் படைத்தன்மையையும் பொறுப்புக் கூறலையும் தமது நிர்வாகத்தில் உள்ளடக்குவதாகவே கூறி பதவிக்கு வந்தது.

அந்த வகையில் எங்கள் வடமாகாணம் வேறெந்த குறைகள் இருப்பினும் அடிப்படை விடயங்களில் சறுக்கிவிடக் கூடாது. அதிகாரத் துஷ்பிரயோகம், பணவிரயம், அதிகார வரம்புமீறல், பக்க சார்பான நடவடிக்கைகள் போன்றவை எமது நிர்வாகத்தைக் கேள்விக்குறியாக்கி விடுவன. நாம் எமது குறைபாடுகளை சீர்செய்ய வேண்டும். ஆனால் அதே நேரம் விசாரணைக் குழு வின் அறிக்கையில் முன்கூறிய வாறு பல குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டு ள்ளன.

உதாரணத்திற்கு நான் வருகை தராத ஒரு கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன் என்று கூறப்பட்டுள் ளது.

இவ்வாறான பல விடயங்கள் சம்பந்தமாக எமது அமைச்சர்கள் கேள்விகளை எழுப்பவோ விளக்கமளிக்கவோ நாம் இடமளிக்க வேண்டும். எந்த விடயத்திலும் மேன் முறையீடு செய்ய வசதி அளிக்கப்படும். அதையெட்டியே இந்த கோரிக்கையை விடுக் கின்றேன்.

அத்துடன் முறைப்பாட்டாளர்கள் வருகை தராததால் கைவிடப்பட்ட விசாரணைகளை மீண்டும் உயிர் கொடுக்க வேண்டுமென்றால் அதனைச் செய்யவும் நாங்கள் தவறக்கூடாது. சபையின் கௌரவத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்கள் ஒவ்வொரு வருக்கும் இருக்கின்றது. எந்த ஒரு விவாதமும் தனிப்பட்ட ரீதியாக எவரையும் தாக்குவதாக அமை யக்கூடாது.

ஒரு விடயம் நடந்ததா இல்லையா என்பதை அறிவதே எமது குறிக்கோளாக இருக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் எவரையும் தாக்குவதையும் அவர்கள் மன தைப் புண்படுத்துவதையும் தவிர்த் துக் கொள்ள வேண்டும். இனி யாவது தனிப்பட்ட முறையில் உறுப பினர்களைத் தாக்குவதைத் தவிர்ப் போமாக!

உங்கள் அனைவரிலும் உள்ள நம்பிக்கையின் அடிப்படை யில் அறிக்கையின் பிரதியை சபைக்குக் கையளிக்கின்றேன். இந்த அறிக்கை அந்தரங்க மானது. ஊரைக்கூட்டி உங்கள் உரைகளை ஊறிய ஊ டகங்க ளுக்குக் கையளிப்பது எமது வடக்கு மாகாணசபைக்கே இழுக்கை ஏற்படுத்தும்.

குற்றமற்றவர்களே மேரி மக்டெலின் மீது முதற்கல் எறிய முன்வாருங்கள் என்றார் இயேசு கிறிஸ்து நாதர். குற்றஞ்சாட்டுவதால் அரசியல் இலாபம் பெற விளைவோர் தமது நடவடிக்கைகளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்த முன்வர வேண்டும். நடைமுறைப்படுத்தப்படும் செயல் பாடுகள் எம் ஒவ்வொருவரையும் உள்ளடக்கியது என்பதை மறவாது இருப்போமாக!

இவ்வாறான விடயங்களை நீடிப்பதால் அலுவலகங்களில் வேலைகள் தடைப்பட்டுப் போய் விடுவன. பாதிக்கப்பட்ட அமைச்சர்கள் அறிக்கை பற்றிய தமது விளக்கங்களை எழுத்து மூலம் தரவேண்டும். சபையினர் அனைவருக்கும் அறிக்கையும் அந்த விளக்கங்களும் தாமதமில்லாது கையளிக்கப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (9)


மாநகர சபை, யாழ்ப்பாணம்

பகிரங்க ஏலம்

எலும்புகள் (ஆடு, மாடு)

காலம்

16.06.2017ம் திகதி வெள்ளிக்கிழமை, காலை 11.00 மணி

இடம்

யாழ்.மாநகர சபை, நானாவித இறைவரிப் பகுதி முன்றல்

ஆரம்ப கேள்வித் தொகை 01 Kg – ரூபாய் 4.00 (வரி உட்பட)

ஆணையாளர்,
யாழ்.மாநகர சபை

(C-8752)



1ஆம் ஆண்டு நினைவு தினம் 5ஆம் ஆண்டு



ஓராண்டு என்ன
நூறாண்டு
சென்றாலும் என்றும்
தனலட்சுமி
என்ற நாமம் எம்
நெஞ்சில்



அமரர் தனலஷ்மி நாகரத்தினம்
மண்ணில் : 17.07.1944 விண்ணில் : 20.05.2016
(C - 8756)

தயா அச்சகம்
தயா வெளியீடு
575, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
0773965214

அமரர் திருநாவுகரசு நாகரத்தினம்
(சாந்தி அச்சக உரிமையாளர்)
மண்ணில் : 31.0[illegible] விண்ணில் : [illegible]



2ஆம் ஆண்டில் ஈர விழிகளுடன்



ஈர விழிகளுடன் ஈராண்டுகள் – இன்றும்
எம் அருகில் நீ வேண்டுமைய்யா!
சொட்டும் எம் விழி நீர் இன்றும் உன்
நினைவினை சொல்லுதடா!
மகனாய், தம்பியாய், அண்ணனாய், தந்தையாய்,
மாமனாய் நீ எம்மை மகிழ வைத்த காலங்களை
இன்றும் எம்முன் நிழலாட வைத்து விட்டு
நீ மட்டும் நீள் துயில் தன் கொண்டாய்
யாரிடமும் பகை கொள்ளா குணம் கொண்ட
உன் புன்னகையால் – பிறரறியா துயரத்தை
உன்னுள் புதைத்து விட்டு – தன் றஜி எமை
விட்டுச் சென்றாயடா! மீண்டும் உன் முகம்
பார்க்க ஏங்கும் உறவுகளை நீ பார்க்க வருவாயா?

அமரர் கந்தசாமி திருவருட்செல்வன் (றஜி)

(C - 8746)

அன்னை மடியில் : 10.08.1986
ஆண்டவன் மடியில் : 08.06.2015

அம்மா, அப்பா, சகோதரர், மருமக்கள், மகன் பானுசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்களின் குடியேற்றத்திற்கு...

விட்டு வேண்டிய நடவடிக்கையை நீங்கள் எடுங்கள் என்று. எங்களிடத்தில் கூறவேண்டுமென்று அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகள் அரசியல் இலாபம் கருதியும் அரசியல்வாதிகள் தங்களது எழுச்சி, இருப்பு மற்றும் சொந்த நலன்களை முன்நிறுத்தியும் செயற்பட்டதனாலேயே இந்த நாடு அழிவுப்பாதைக்கு சென்றது. அத்துடன் சுதந்திரத்துக்குப் பின்னர் நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் விட்ட தவறுகளினால் இந்த நாட்டிலே இரத்த ஆறு பெருக்கெடுத்தது என்றும் குறிப்பிட்ட அவர், நாடாளுமன்றத்தில் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்தன எம்.பி, ஜெனீவா தீர்மானம் தொடர்பிலான, சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை நேற்று முன்தினம் முன்வைத்தார்.

அந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

30 வருடகால யுத்தம் முடிவடைந்து சர்வதேச மட்டம் வரை உள்நாட்டு பிரச்சினை கொண்டு செல்லப்பட்டு, அதன் பின்னர் நம் நாட்டில் அரசியல் அமைப்பு சபை ஒன்று உருவாக்கப்பட்டு, தீர்வு முயற்சிகளுக்காக எல்லா கட்சிகளும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த உயர் சபையிலே எதிர்க் கட்சி தலைவர் சம்பந்தன் ஐயாவும், அவரது கட்சியை சார்ந்த சுமந்திரன் எம்.பியும் வீற்றிருக்கும் போது, நான் ஒரு விடயத்தை வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

புலிகளினால் வெளியேற்றப்பட்டு அகதிகளாக வாழ்ந்து வந்த வடக்கு முஸ்லிம்கள் 25 வருடங்களுக்குப் பின்னர் மீளக்குடியேற செல்லும் போது உங்கள் கட்சியைச் சார்ந்த ஒரு சிலர் அவர்களின் மீள் குடியேற்றத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர்த்து வருகின்றனர். முல்லைத்தீவில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை அப்பட்டமாக இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் அந்த பிரதேச முஸ்லிம்கள் மீள்குடியேறுவதற்காக வீடுகளை அமைக்கவென மீள்குடியேற்ற செயலணி மூலம் நிதி ஒதுக்கப்பட்ட போது அதற்கு அனுமதிக்க முடியாது என்று உங்கள் கட்சியைச்சார்ந்த ஒரு சிலர் அடம்பிடித்துள்ளனர்.

மாகாண சபை உறுப்பினர் ஒருவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சேர்ந்து இந்த எதிர்ப்பை வெளிக்காட்டி இருப்பது வெட்கமாக இருக்கின்றது. எனினும், நாங்கள் இந்த மக்களை மீள்குடியேற்றும் விடயத்தில் மிகவும் திறந்த மனதுடனும், உறுதியாகவும் இருக்கின்றோம் என்பதை இந்த உயர் சபையிலே உங்களுக்கு கூறிவைக்க விரும்புகின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (11)


சிறுநீரகம் தேவை

27 வயதான இளம் பெண்ணிற்கு B+ (அதிகம் விரும்பப்படுகிறது) அல்லது O+ 40 வயதிற்கு உட்பட்ட ஒருவரின் சிறுநீரகம் உடனடியாகத் தேவை. தானமளிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தகுந்தசன்மானம் வழங்கப்படும். **தொடர்பு :- 076 554 4776** (9170)

O/L உடன் மாதம் 25,000/-க்கு மேல் சம்பாதிக்க
யாழ் முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள்!



8 அணிகளாக மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
வடக்கின் 1வது ஹொட்டேல் கல்லூரி
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY
Diploma in Tourism & Hotel Management
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
9ம் அணி பயிற்சிகள் ஆரம்பம்
மேலதிக விபரங்கள் www.sikaram.lk
அனுமதிகளுக்கு:
077 3616 798
021 222 0011
175, 1ஆம் குறுக்குத்தெரு (ரெம்படி வீதி), யாழ்ப்பாணம்.
(C-8755)


## விமானம் விப...

அந்த நாட்டின் இராணுவ விமானம் ஒன்று தெற்கிலுள்ள மியெய்க் நகரத்தில் இருந்து யங்கூன் நகருக்கு சென்று கொண்டிருந்தது.

அப்போது, சர்வதேச நேரத்தின்படி நேற்றுக் காலை 7.05 மணிக்கு அந்த விமானம், விமானக் கட்டுப்பாட்டு அறையின் தொடர்பை இழந்தது. தவேய் நகருக்கு 20 கி.மீ. மேற்கில் இந்த விமானம் மாயமானது. இந் நிலையில் விமானம் கடலில் விழுந்து நொறுங்கியுள்ளது. (11)

## மிகப்பெரிய யுத்தம் நட...

விடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

பாரிய இலஞ்ச ஊழல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்றைய தினம் முற்பகல் முன்னிலையாகிய ஜெனரல் தயா ரத்நாயக்கவிடம் பல மணிநேரம் விசாரணை இடம்பெற்றது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலரிடம் இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் இதன் ஒரு கட்டமாக முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த விசாரணையில் முன்னிலையாகிய ஜெனரல் தயா ரத்நாயக்க அங்கிருந்து திரும்புகையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

போரின் பின்னர் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைப் பகுதியில் இராணுவத்தினரின் ஊடாக இரும்புகளை விற்பனை செய்த விடயம் தொடர்பாக விசாரணை நடத்த இன்றையதினம் (நேற்று) நான் அழைக்கப்பட்டிருந்தேன்.

இந்த விவகாரம் குறித்து முதற்தடவையாக சாட்சியமளிக்க நான் இன்று (நேற்று) அழைக்கப்பட்டேன். உண்மையில் இவ்வாறான விசாரணைகளில் தொடர்புபட்டதையிட்டு கவலைப்படுகிறேன். நோபல் பரிசு தொடர்பாக கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்தப் பரிசை வழங்கும் நபர் இன்றும் இருப்பாரேயானால் பொறுமையின் சிகரம் மற்றும் சகிப்புத்தன்மைக்கான நோபல் பரிசை இலங்கை இராணுவச் சிப்பாய்களுக்கு வழங்கிவைப்பார். மிகப்பெரிய யுத்தத்தை நடத்தி தாய் நாட்டை மீட்டுக்கொண்ட நமக்கு இப்படியாக விசாரணைகளில் தொடர்புபட்டதையிட்டு கவலையடைகிறேன்.

அதனால் எதிர்காலத்தில் சரியான திசைக்கு மாறும் என்று நினைக்கின்றேன். இல்லாவிட்டால் இராணுவச் சிப்பாய்களே கஷ்டப்படுவார்கள் என்றார். (11)


ANANDA HOMES AND CONSTRUCTIONS யாழ்ப்பாணம்

உங்கள் இல்லத்தை தரமாக அமைத்துத்தர

01. சாதாரண வீடு – 19 இலட்சத்திலிருந்து தொடங்குவதற்கு 5 இலட்சம் (3 அறை, கோல், சமையலறை உட்பட)
02. மாடி வீடு – 35 இலட்சத்திலிருந்து தொடங்குவதற்கு 10 இலட்சம் (4 அறை, கோல், சமையலறை உட்பட)



03. நவீன இணைந்த குளியலறை – 1 1/2 இலட்சத்திலிருந்து
04. பழைய வீடு புனரமைப்புச் செய்தல்.
05. கடை, கட்டடத் தொகுதி அமைத்தல்.
06. சுற்று மதில் அமைத்தல்.



குறிப்பு :
1. வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
2. Labour Contract முறையிலும் செய்து தரப்படும்.
3. Tile வேலைகள், கூரை வேலைகள், தச்சுவேலைகள் செய்யப்படும்.

அழையுங்கள் : ஆனந்தன்
தொ.பே : 078 615 5929, 021 320 5939
(9167)


## முதல்வரின் முடிவுக்கே விட...

வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையை சமர்ப்பிதற்கான விசேட அமர்வு நேற்றையதினம் கைதடியில் கூடியது. இதற்கு முன்னதாக நேற்றுக் காலை பத்துமணியளவில் மாட்டீன் வீதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் திடீர் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த சந்திப்பு தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா தலைமையில் நடைபெற்றதோடு, தமிழரசு கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர். எனினும் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் குறித்த சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. குறித்த சந்திப்பு தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வடக்கு அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அதன் அறிக்கை தற்போது வெளிவந்துள்ள நிலையில்,

அதில் இரண்டு அமைச்சர்கள் முறைகேட்டில் ஈடுபட்டவர்களாக கூறப்பட்டுள்ளது.

அவர்கள் இருவரையும் பதவி நீக்கம் செய்து புதிய அமைச்சரவை உருவாக்கப்பட வேண்டுமென ரெலோ தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது.

எனினும் புளொட், தமிழரசு கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகியன தமது கட்சி நிலைப்பாடுகளை தெரிவிக்காத நிலையில், நேற்றைய தினம் தமிழரசுக் கட்சி கூடி ஆராய்ந்துள்ளது.

அதில் குறித்த விடயம் தொடர்பில் தலையிடுவது இல்லை எனவும், முதலமைச்சர் மேற்கொள்ளும் தீர்மானமே இறுதி தீர்மானம் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைப்பாட்டை நேற்றைய மாகாண சபை அமர்விலும் முதலமைச்சரே தற்துணிவு அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழரசுக் கட்சி மாகாண சபை உறுப்பினர்கள் அடிக்கடி வலியுறுத்தி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பந்தை முதலமைச்சர் பக்கம் திருப்பி விட்டு அவரை நெருக்கடியான சூழலுக்குள் தள்ளிவிட சிலர் முயல்வதாக உறுப்பினர் சிவாஜிலிங்கம் குற்றம் சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)


பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

மு/வித்தியானந்த கல்லூரி, முள்ளியவளை.

இடம் : மு/வித்தியானந்த கல்லூரி கேட்போர் கூடம்,
காலம் : 10.06.2017 சனிக்கிழமை
நேரம் : மு.ப. 10 மணி

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புரிமை யுடன் அழைத்து நிற்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
மு/வித்தியானந்த கல்லூரி ,
முள்ளியவளை,
0777 855 463,
(C-8751)

புதிய கிளை திறப்பு விழா அழைப்பிதழ்
V2 TRAVELS
எமது 6வது கிளை சாவகச்சேரியில் திறப்பு விழா
எதிர்வரும் 08/06/2017 வியாழக்கிழமை காலை 11 மணியளவில் இலக்கம்10,பஸ் நிலையம், சாவகச்சேரியில் உங்கள் பேராதரவுடன் எமது 6வது கிளை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. எங்கள் புதிய கிளை திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்து மேலும் எமது வளர்ச்சிக்கு உங்கள் பேராதரவினையும் ஆசீர்வாதங்களையும் வழங்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.
விமான பயணச்சீட்டுக்கள்



வீசா சேவைகள்
அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
சாவகச்சேரி கிளை திறப்புவிழாவில் பணப் பரிசு
மேலதிக விபரங்களுக்கு 0768226240 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
Jaffna. Kilinochi. Nelliady. Point Pedro. Valvettithurai.
NO-10 , Bus stand,Chavakachcheri.
0768226240
(C-8744)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org